கலை இலக்கியத் திங்களிதழ்

கணையாழி

மலர் : 59 இதழ் : 03 ஜூன் 2024 விலை ரூ.25/-



திருவள்ளுவருக்குத் தேர் தந்தவர்! – ம.ரா.

கணையாழி மின்னிதழ் சந்தா விவரம்

தனி இதழ் ரூ 25

ஓராண்டு சந்தா ரூ 275

சந்தா செலுத்துபவர்களுக்கு மின்னிதழ் அனுப்பப்படும்.

இணையத்தில் வாசிக்க அன்புகூர்ந்து
www.kanaiyazhi.com அல்லது
magzter.com பாருங்கள்..

அச்சு இதழாக வரும் வாய்ப்பு இப்போது இல்லை உங்கள் சந்தாவை மின்னிதழுக்கானதாக மாற்றலாம் அல்லது மீதித் தொகையைத் திருப்பி பெறலாம். உங்கள் விருப்பத்தைத் தெரியப்படுத்தி உதவுங்கள்.. நன்றி.

மின்னிதழ் சந்தா செலுத்த வங்கி விவரம்

Account Name - KANAIYAZHI,
Account No. 147202000000792
Bank - INDIAN OVERSEAS BANK,
VALMIKI NAGAR BRANCH,
CHENNAI-600 041.
IFSC CODE- IOBA0001472

Kanaiyazhi Tamil Magazine

கணையாழி

மலர்: 59 இதழ்: 03
ஜீன் 2024 விலை ரூ. 25/-


கணையாழி மின் - இதழ்
https://kanaiyazhi.net/
http://kanaiyazhi.emagaz.in
& www.magzter.com

படைப்புகளை மின்னஞ்சலில் அனுப்புங்கள்

மெய்ப்பு உதவி
வேதநாயக்

கணையாழி
தொடர்புக்கு : 08220332055
மின்னஞ்சல்: kanaiyazhi2011@gmail.com

உங்களுடன்



திருவள்ளுவருக்குத் தேர் தந்தவர்!

முத்தமிழ் அறிஞர்
கலைஞருக்கு நூற்றாண்டு!
“தமிழ் உள்ளவரைத்
தலைவர் புகழ் ஓங்கட்டும்” என்று
தமிழ்நாடு முதலமைச்சர்
முரசொலியில் எழுதியிருக்கிறார்!
ஆம்!
தமிழ் உள்ளவரை
அவர் புகழ் நிலைக்கும்!

காவி பூசியும்
கண்டதைச் சொல்லியும்
தமிழைக்
களங்கப்படுத்தும் ஆளுநரையும்
கைகூப்பி வணங்கச் செய்யும்
தமிழ்ச் சிந்தனை மரபாம்
திருவள்ளுவருக்கு.

முல்லை, குறிஞ்சி,
மருதம், நெய்தல் என்று
நான்கு திணைகளும்
கலந்திருக்கும் கன்னியாகுமரியில் -
முக்கடல் சங்கமத்தில்
133 அடி உயரத்தில் சிலை வைத்தவர்!

தனிநபர் மோட்சம் வேண்டி
தவம் செய்யப் போகாமல்
உலக வரலாற்றில்
ஒரு மொழி, செம்மொழி என்று
அரசு நிலையில் அறிவிக்கச் செய்த
முதல் பெருமையைத்
தமிழுக்குப் பெற்றுத் தந்தவர்!

உலகத் தமிழ்ச்
செம்மொழி முதல் மாநாட்டைத்
தமிழ் உலகம் வியக்கக்
கோவையில் நடத்திக் காட்டியவர்!

உலகில் முதன் முதலாக
சமஸ்கிருதம் உட்பட
உலகத்தின் செம்மொழிகளுக்கெல்லாம்
ஓர் உயராய்வு மையத்தைத்
தமிழ்ப் பல்கலைக்கழகத்தில்
தொடங்கி வைத்தவர்!

கவிதை, கதை, கட்டுரை என்று
படைப்பிலக்கியங்களுக்கும்
பங்களித்தவர்!

தமிழ் - நீச மொழி என்றும்
தேவ பாஷை வடமொழி என்றும்
சொல்லித் திரிந்தவர்களையும்
செம்மொழித் தமிழ் போல
எங்கள் மொழியையும்
அறிவிக்க வேண்டுமென்று
வேண்ட வைத்தவர்!

தமிழில் பாடிய மேடை
தீட்டாயிடுத்து என்று
கோமியத்தில் குளிப்பாட்டியவர்களின்
கூடாரங்களிலும் தமிழைக்
கொண்டாடச் செய்தவர்!

கடவுளுக்குத் தமிழ் தெரியாது
என்றவர்களும் எழுந்து நிற்கத்
தமிழைக் கடவுள் ஆக்கித்
தமிழ்த்தாய் வாழ்த்துப்
பாடச் செய்தவர்!

எழுத்து அதிகாரம்
சொல் அதிகாரம்
பொருள் அதிகாரம் என்று
இலக்கணத்தில் மூன்று
அதிகாரங்களையும்
திருக்குறளில்
133 அதிகாரங்களையும்
கொண்டிருக்கும் தமிழுக்கு
ஆட்சி அதிகாரத்தையும் வழங்கி
அழகு பார்த்தவர்!

சங்க இலக்கியங்களையும்
தொல்காப்பியத்தையும்
தமிழ்க் காப்பியங்களையும்
பொதுமக்களும் புரிந்துகொள்ள
சமகாலப் படுத்தியவர்!

இராமாயண, மகாபாரதக்
கதை மாந்தர்களைக்
கூண்டில் நிறுத்தி
விசாரணை செய்தவர்!

கிரேக்க சாக்ரடீசைத்
தந்தை பெரியார் ஆக்கி
வாழ வைத்தவர்!

புராணக் கதைகளின்
ஆக்கிரமிப்பிலிருந்து
நாடகத்தையும்
திரைப்படங்களையும்
மீட்டெடுத்தவர்!

மேடைத் தமிழிலும்
ஊடகத் தமிழிலும்
காந்த விசையைக் கலந்து
மொழியில் முறுக்கேற்றியவர்!

மயிலாப்பூரில்
கோயில் இருந்த போதும்
நுங்கம்பாக்கத்தில்
வள்ளுவருக்குக்
கோட்டம் கண்டவர்!

திருவாரூர் வீதிகளில்
மக்களைப் பார்க்கத்
தியாகராசரை அமர வைத்து
தேரோட்டம் நடத்துவார்கள்!


ஆனால்
வள்ளுவர் கோட்டத்தில்
திருவாரூர் தேரை நிறுத்தி
தியாகராசர் இடத்தில்
திருவள்ளுவரை அமரவைத்து
மக்களை
வந்து பார்க்கச் செய்தவர்!

முல்லைக்குத் தேர் கொடுத்த
பாரியையே
மூவாயிரம் ஆண்டுகளாகக்
கொண்டாடி வருகிற
தமிழ்,
திருவள்ளுவருக்குத் தேர் தந்த
முத்தமிழ் அறிஞர் கலைஞரையும்
கொண்டாடும் தானே!

ஆம்!
வள்ளுவர் கோட்டத்தில்
முத்தமிழ் அறிஞர் கலைஞர்
திருவள்ளுவருக்குத்
தேர் கொடுத்திருக்கிறார்!

அன்புடன் **ம.ரா.**

உள்ளடக்கம்



திராவிட சம்பத்து

கலைஞர் மு. கருணாநிதி

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு - நினைவு வெளியீடு. இந்தச் சிறுநூல் அவரது 27 வது வயதில் - 1951 இல் அறிவு மன்றம், சென்னை - 1, வெளியிட்டிருக்கிறது. விலை மூன்று அணா, விற்பனை, பாரி நிலையம்.. மதுரையில் உள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகத்தில் உள்ளது.

மன்றத்தில்

'திராவிடம்', 'திராவிட நாடு' என்ற 'இன முழக்கம்' இன்று எங்கும் முழங்குகிறது, முழக்கப்படுகிறது. வீழ்ந்த இனம் வீறுகொண்டு எழுந்து வாழ நினைத்திட்ட காரணத்தால் விழுந்திட்ட காரணங்களை, அடிப்படைக் கோளாறுகளை உணர்ந்த காரணத்தால். இத்தகைய 'இன முழக்கம்' நடைபெறும் நேரத்திலே இதனால் இழிவும் பழியும் உண்மையிலேயே தம்மைச் சேரும், சேர்கின்றது என்ற வீண் பீதியால், தம்மைத்தாமே, குறுகுறுக்கும் குற்ற நெஞ்சினர், 'நாமில்லை' 'நாமில்லை' என்று ஓலமிடுகின்றனர். வேறு சிலர் 'திராவிடமாவது ஆரியமாவது' ஒன்றுமே கிடையாது என்று உரக்கக் கோஷம் இடுவதன் மூலம் அடிப்படை இலட்சியத்தையே இல்லாது ஒழித்துக்கட்டி விடலாமென்று கனவு காண்கின்றனர். சந்தர்ப்பம் நேர்ந்த போதெல்லாம் கட்டுரையானாலும் காலட்சேபமானாலும் எது கிடைத்தாலும், திராவிட, இன எழுச்சிக்கு எதிரிடையாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

இவ்விதக் கட்டுரைகளிலே ஒன்று ஆனந்த விகடனில் 'தென்னாட்டுச் செல்வங்கள்' என்ற தொடர் பகுதியில் 20-5-51 இல் 'திராவிட ஸம்பத்து' என்ற தலைப்பில் வந்துள்ளது. இதனை நன்றாக அலசி இருக்கிறார் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்.

கலைஞர் மு.கருணாநிதியைப் பற்றி மக்களுக்கு அறிமுகம் செய்து வைக்கத் தேவையில்லை. 'திராவிட சம்பத்து' என்ற தலைப்பில் 'திராவிட சம்பத்திற்கே உலை வைக்கும் உண்மையை வெட்ட வெளிச்சமாக்குகிறார்.

படியுங்கள் மேலே.

வணக்கம்

அறிவு மன்றத்தார்.

முக்கிய குறிப்பு

திராவிட சம்பத்து என்று தலைப்பிட்டுத் திராவிடத்தைக் கேலிச்சித்திரமாக்கிய அதே ஆனந்த விகடன், 20-5-51 ஆம் தேதி இதழ் 55 வது பக்கத்தில், 'புத்தக உலகம்' என்ற தலைப்பில், 'மாதத்தின் மறுபிறப்பு' என்ற துணைத்தலைப்பில் புத்தகங்களின் விளக்க உரை தரப்படுகிறது.

இது இரண்டாவது புத்தகமாக 'ஸ்ரீ சங்கர விஜயம்' ஸ்ரீ காமகோடி க்ரந்தாவளி என்ற நூலைப் பற்றி எழுதிய விளக்கத்தைக் கவனியுங்கள்.

"பாரதியார் சொல்லுகிறார் தமது 'புனர்ஜென்ம'க் கட்டுரையிலே; 'நமது வேதம் நமது சாஸ்திரம், நமது ஜனக்கட்டு, நமது பாஷைகள், நமது கவிதை, நமது சிற்பம், நமது சங்கீதம், நமது நாட்டியம், நமது தொழில் முறைகள், நமது கோபுரங்கள், நமது மண்டபங்கள், நமது குடிசைகள் - இவை அனைத்துக்கும் பொதுப் பெயர் ஆரிய சம்பத்து. ஆரிய திராவிட இன வேற்றுமைகளில் பாரதியாருக்கு நம்பிக்கையே இல்லை என்பது பிரசித்தம்.

பாரதியாரின் ஆரிய ஸம்பத்து பாரத தேசத்தின் பொதுவுடைமை தான். 'நமது வேதம்' என்று முதலாவது சம்பத்தாகக் கூறுகிறாரே பாரதியார், அந்த வேத வேதாந்தம்... மூல சம்பத்து மூல பலம். மாக்ஸ் முல்லர் போன்ற எத்தனையோ மேதாவிகள் இதை உலக அறிவுக்களஞ்சியத்திலேயே மூல ஸம்பத்து என்று போற்றியிருப்பினும், இந்நாளில் இத்தென்கோடியில் வேத நிந்தனை வேதாந்த நிந்தனைகள் வீழ்ச்சி முழக்கங்கள் எழுவது வருந்தத்தக்கதே.

இந்த நிலையில் ஸ்ரீ காமகோடி பீடம் சங்கராச்சாரியார் சுவாமிகளின் ஆசியும் ஆதரவும் கொண்டு சென்னையில் சமய தொண்டாற்றி வரும் ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்திற்கு நன்மக்களின் நன்றி உரியதாகும் இக்கழகத்தார் வெளியிட்டு வரும் ஸ்ரீ காமகோடி க்ரந்தாவளியில் 'ஸ்ரீ சங்கர விஜயம்', பொதுஜன ரம்யமான ஓரழகிய சிறுநூல் படங்களுடன் கூடிய இந்நூல் வேதாந்தத்திற்கே தென்னிந்தியாவிலிருந்து புனர் ஜன்மம் அளித்த ஆதி சங்கரரின் அருமை பெருமைகளைத் தமிழர் அனைவருக்கும் ஒருவாறு அறிவிக்கும் என்று நம்புகிறோம்."

"திராவிட சம்பத்து" என்ற பகுதியில் (ஆ.வி.யில்) 'திராவிட சம்பத்து' என்றால் அப்படி ஓர் இனம் இருந்ததாகவோ இருப்பதாகவோ நாம் ஒப்புக்கொள்ளவில்லை என்று குறிப்பிட்டுவிட்டு, கடைசியாக, ' உண்மையில் திராவிட சம்பத்து என்றால் திராவிட மொழி வழங்கும் பிரதேசத்திலே போற்றி பாதுகாக்கத் தக்க பெரும் செல்வம் என்றுதான் பொருள்" என்று முடிக்கிறது.

ஆனால் மேலே கண்ட புத்தக விமர்சனப் பகுதிப்படி, பாரதியார் கருத்தென்று கூறி, வேறு எதற்கோ விமர்சனம் எழுதும் முறையில் பாரத தேசம் முழுதும் ஆரிய தேசம் அதன் மொழி, கலை, நாகரீகம் யாவும் ஆரிய சம்பத் என்று எழுதுவது எந்த நீதிக்குச் சரி, செல்லும்.(சொல்லும்.) எதற்காக இத்தகைய வேண்டப்படாத விளக்கங்கள், தேவைப்படாத

இடங்களிலே கூட. சிந்திக்க வேண்டுகிறோம். ஆரிய சம்பத்து - திராவிட சம்பத்து இரண்டிற்கும் ஏன் இந்த பேதம் - வீண் விளக்கங்கள்.

திராவிடம் இல்லையென்று கூறுவோர், திராவிட மொழியால், தமிழால் வளர்ந்து, வாழ்ந்த டாக்டர் உ.வே. சாமிநாதய்யரைப் பார்க்கட்டும் என்று அடுத்த கட்டுரையில் கலைஞர் கருணாநிதி சொல்வதைக் கேட்கட்டும்.

தொடருங்கள் மேலே

பதிப்பகத்தார்.

திராவிட சம்பத்து

அரசியல் நோயாளிகள்

கண்ணை மூடிக்கொண்டே படுத்திருப்பார்கள். திடுக்கென கத்துவார்கள். ‘அய்யோ அப்பா’ என்று! இப்படி சில அரசியல் நோயாளிகள் இருக்கிறார்கள். நான் நோயாளி என்கிறேன் அதை அவர்கள் ‘ஸ்டன்ட்’ என்பார்கள். வாயை மூடி வாலைச் சுருட்டி உட்கார்ந்து இருப்பது. எதிர்பாராத நேரத்தில் எழுந்து பாய்வது. அந்தப் பாய்ச்சலில் பயன் இருந்தால் மேலும் மேலும் தாவுவது. இல்லாவிட்டால் பழையபடியே மரக்கிளையில் தொங்குவது. இது நமது அக்ரஹாரத்தின் பிரதிநிதி - அம்மாமிகளின் அபிமானச் செல்வன் ஆனந்த விகடனுக்குப் பழக்கமான சமாச்சாரம்.

வால் ஆடுகிறது

தென்னாட்டுச் செல்வங்களைப் பற்றி எழுத ஆரம்பித்தது, நம்மீது ஒரு பாய்ச்சல் பாய்ந்திருக்கிறது.

திராவிட சம்பத்து! என்று தலைப்பு - அதிலே விகடனின் வால் விநோதமாக - விசித்திரமாக - விபரீதமாக ஆடுகிறது.

“மகிஷாசுர மர்த்தனியின் கதை ஒரு பழைய திராவிடக் கதையாக இருந்து புராணம் புகுந்திருக்கும் என ஊகிப்பது தவறாகாது.”

இப்படி எழுதி இருக்கிறது முதலில். எனக்கு ஆச்சரியமாய் போய்விட்டது நாம் படிப்பது ஆனந்த விகடன்தானே என்று திருப்பித் திருப்பி பார்த்துக் கொண்டேன்.

‘திராவிடக் கதைகளில் புராணம் புகுந்து விட்டது’ இதைச் சொல்வது சாதாரண விஷயமா? அதுவும் விகடன். வேத விற்பன்னர்களின் ஏகக்குரல் - அது எழுதுமா இப்படி? எழுதி இருக்கிறது. எனவே வியப்படைந்தேன்.

‘திராவிடக் கதைகளில் புராணம் புகுந்து விட்டது’ எவ்வளவு அற்புதமான உண்மை. இதை சொன்னதற்காக எவ்வளவு கஷ்டப்பட்டு இருக்கிறோம், நாம்.

புராணம் புகுந்து விட்டது

திராவிடக் கதைகளில் புராணம் புகுந்து விட்டது. ஆமாம்; ராமாயணம் திராவிடக் கதை. ராமனுக்கும் ராவணனுக்கும் நடந்த போர் பற்றி எழுந்த திராவிடக் கதை. அதில் புராணம் புகுந்து விட்டது என்று கூறினோம்.

அதை எதிர்த்தார்கள்; இப்போது விகடன் கூறுகிறது... மகிஷாசுரமர்த்தனி என்ற திராவிட கதையில் புராணம் புகுந்து விட்டது என்று!

நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறோம்; தாமதமாகவாவது புத்தி வந்ததே என்று! ஆனால் விகடன் அவ்வளவு பைத்தியக்காரன் அல்லவே... பழைய பழக்கத்தை அறவே விட்டுவிடவில்லை. கட்டுரையின் முடிவிலே கொஞ்சம் விஷத்தை அல்லவா கக்கியிருக்கிறான்.

விஷம வேலை

எங்கே திராவிடக் கதை என்று கூறுவதால் ‘திராவிட நாடு’ பிரச்சனைக்கு இடம் கொடுத்து விடுவோமோ என்று பயந்து கொண்டு “திராவிட சம்பத்து என்றால் அப்படி ஒரு இனம் இருந்ததாகவோ இருக்கிறதாகவோ நாம் ஒப்புக்கொள்ளவில்லை.”

விகடனின் விஷமத்தைப் பாருங்கள் “இனவெறிக் கொள்கை ஒரு மித்(Myth) அதாவது புராணக் கற்பனை என்கிறார்கள் இன்றைய விஞ்ஞான அறிஞர்களும் ஆராய்ச்சியாளரும்.”

விஞ்ஞான அறிஞரை ஆராய்ச்சியாளரை எதற்குப் பயன்படுத்துகிறார் கவனியுங்கள், விகடனார்! இன வெறிக்கொள்கை ஆகாதென்கிறார்களாம் அறிஞர்கள். இந்த வார்த்தைகளை வைத்துக்கொண்டு நம் இனமுழக்கத்தைப் பாழாக்கக் கனவு காண்கிறார் நகைச்சுவை குரங்கார்!

இனவெறி – இனப்பற்று

இனவெறி கூடாதுதான். அதைத்தான் ஆரிய இனத்திற்கு அடிக்கடி சுட்டிக்காட்டி வருகிறோம். மனிதனைத் தொடக்கூடாது என்ற மமதையை - மகேஸ்வரனை நீதான் பூஜை செய்ய வேண்டும் என்ற மண்டைத் திமிரை - இன வெறியை - விட்டுவிடு என்று கூறுகிறோம். நமக்கு ஏற்பட்டிருப்பது இன வெறியல்ல இனப்பற்று. இனவெறி... இன்னொரு இனத்தை அழித்து அடக்கி, தன் இனத்தை வளர்ப்பது. இனப்பற்று ... தன்னை இனத்தைப் பாதுகாத்து இன எழுச்சி ஏற்படுத்துவது.

முன்னது ஆரிய முறை. பின்னது திராவிடர் முறை, நம் முறை.

விஷமம் செய்ய எண்ணிய ஆரிய ஆஞ்சநேயர் முன்னுக்குப்பின் முரணில்லாமலாவது எழுதினாரா என்றால் அதுவுமில்லை.

ஆப்பசைத்த குரங்கு

முதலில் திராவிடக் கதையில் புராணம் புகுந்தது என்று நமது குரல் குரலில் பேசினார்.

பிறகு இனவெறி கொள்கை கூடாது என்று அவர் மொழியில் கர்ச்சித்தார்.

இறுதியில் அதற்கு ஆக்கந்தேடுவதற்காகப் புறப்பட்டு ஆப்பசைத்த குரங்காகிறார், பாப! "திராவிட சம்பத்து என்றால் திராவிட மொழி வழங்கும் பிரதேசத்தில் போற்றிப் பாதுகாக்கத் தக்க பெரும் செல்வம் என்பது தான் பொருள்."

விகடரின் விளக்கம் போகும் போக்கு இப்படி! திராவிட இனத்தை மறுத்தவர் - அப்படி ஓர் இனம் இருந்ததில்லை என்றவர் - திராவிட மொழியை ஒத்துக் கொண்டு அது வழங்கிய பிரதேசத்தையும் ஒத்துக் கொண்டிருக்கிறார்.

குப்பைமேட்டுக் குயில்கள்

ஆங்கில மொழி வழங்கிய இடம் ஆங்கில நாடு. பிரஞ்சு மொழி வழங்கிய நாடு பிரான்சு நாடு. திராவிட மொழி வழங்கிய நாடு திராவிட நாடு என்பது ஏனோ தெரியவில்லை ஆனந்த விகடருக்கு? தெரியாமல் இல்லை தெரிந்தும் அதை மறைக்கும் தைரியம் இன்னும் கொஞ்சம் ஒட்டிக்கொண்டு இருக்கிறது அவருக்கு! பிரதேசம், நாடு இவற்றை விட்டு விடுவோம். திராவிட மொழி பேசியவர்கள் திராவிடராய்த்தானே இருக்க வேண்டும் விகடரே. கிரேக்க மொழி பேசியவர்கள் கிரேக்கர் என்பது போல விகடரே! விஷமத்தனத்தால் உண்மைகளை விஷமாக்குவது உமது பரம்பரை வேலை. இப்போது நான் தந்த விளக்கத்தால் நீர் நாளைக்கே மரத்தை விட்டு இறங்கிவிடுவீர் என்று நிச்சயமாக நினைக்கவில்லை. திராவிடம், திராவிட மொழி திராவிட... எல்லாம் கற்பனை கோட்டை என்று கத்துகிறீர்களே! அந்தக் குப்பைமேட்டு குயில்களின் பேச்சிலே பொதுமக்கள் ஏமாந்து விடக்கூடாது என்பதற்குத்தான் இதைச் சொல்ல நேரிட்டது. நீங்கள் போகலாம் வாலைச் சுருட்டிக்கொண்டு!

★★★

ஐயர் அறிவிக்கிறார்

சென்னை கடற்கரையில் நின்று கொண்டிருக்கிறார் அந்த ஐயர். போவார் வருவார் எல்லாம் அவரைப் பார்த்துப் போகிறார்கள். பூணூல் அணிந்தவர் தான். போட்டிருக்கும் சட்டைக்குள்ளே நூல் மறைந்திருக்கிறது அவ்வளவுதான். கடற்கரை பக்கம் வருகிறவர்களைப் பார்த்து, அவர், "நாட்டினரே! நாட்டினரே! ஒரு சேதி" என்கிறார். அதோடு விடுவதில்லை அவர். "திராவிடம் என்றோர் சொல் உண்டு. அது தித்திக்கும் தேன்மொழி கற்கண்டு" என்று பாடுகிறார் ஆச்சரியப்படுவீர்கள் நீங்கள்.

அய்யராவது திராவிடத்தை ஒத்துக்கொள்வதாவது என்று திடுக்கிடுவீர்கள். உண்மை நண்பர்களே உண்மை! அன்றைக்கு ஒருநாள் நானும் என் நண்பர்களும் கடற்கரையில் அந்த ஐயரைச் சந்தித்தோம். மேலே சொன்ன பாடலை அவர் பாடினார்.’ திராவிடம் திராவிடம்’ என்று கூறினார். திராவிடம் என்றாலே தீயை மிதித்தது போல் துள்ளும் ஏனோ தானோ கட்சிக்காரர் ஒருவரும் அந்த ஐயரின் முழக்கத்தைக் கேட்டு விட்டுத் தலை குனிந்து போய்விட்டார்.

நீங்கள் உடனே சென்னை கடற்கரைக்குச் செல்லுங்கள் ரெசிடென்சி கல்லூரி வாயிலிலே நின்றுகொண்டிருக்கிறார் அந்த அய்யர்.. நான் சொன்னது உண்மையா அல்லவா என்பது தெரியும்..

தெரிந்த பிறகு அந்த ஏனோதானோக்கள் - எங்கேயோ கிடந்துகள் - இடம், தேடிகள் ஆகியவர்களிடம் சொல்லுங்கள் போய் பார்க்கும்படி - அதோடு கீழ் உள்ளவற்றையும் கவனமாய்ப் படியுங்கள்.

சென்னை கடற்கரையில் பிரெசிடென்சி கல்லூரி வாயிலில் இருக்கும் டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் சிலையின் கீழே எழுதப்பட்டிருக்கும் வாசகங்கள்.

“மகா மகோபாத்யாய திராவிட வித்ய பூஷண டாக்டர் சாமிநாத அய்யர்” என்பவை!

■

கவிதை

ம.வீ. கனிமொழி

விரும்புவதில்லை

நதியின் தடங்களைத்
தேடிச் செல்லும்
மீன்கள் கடலில்
வாழ முடியுமா?

எத்தனை ஆழமான
உறவிருந்தாலும்
பந்தங்கள் துவர்க்கலாம்

துவர்ப்பிற்குக்
காரணமான
சொற்களைத்
தூர் வாரலாம்
அல்லவா
என்ற உங்கள்
கேள்விக்குக்
காலத்திடம்
பதில்கள் இல்லை

பறவைகள் கூட
இலையுதிர்
கிளைகளை
இளைப்பாற
விரும்புவதில்லை!

kanimozhi.mv@gmail.com ■



சிறுகதை

முகிலை இராசபாண்டியன்

பேச்சியம்மை

“ஏ... என்ன புள்ளை பொறந்திருக்கி....?”

“பொம்பளைப் புள்ளை...”

“பொம்பளைப் புள்ளையா....” என்ற பேச்சிக் கிழவி வேகமாக வீட்டிற்குள் நுழைந்தாள். அது ஓர் ஓட்டு வீடு. ஒரே அறை மட்டும்தான் உண்டு. அதையொட்டி மண்கட்டைத் தடுப்பு இருந்தது. அதற்கு அந்தப் பக்கத்தில் அடுப்பு இருந்தது. அந்த அறையில் நார்க்கட்டிலில் கிடந்தாள் செல்லத்தாயி. அவளுக்கு இன்னும் நினைவு திரும்பவில்லை.

கட்டிலில் கிடந்த குழந்தையைக் கையில் தூக்கினாள் பேச்சிக் கிழவி. குழந்தையை எப்படித் தூக்க வேண்டுமோ அப்படி அவள் தூக்கவில்லை. ஒற்றைக் கையில் அந்தக் குழந்தையைத் தூக்கியதால் அது அழுதது.

இவ்வளவு நேரமும் தனது மகளுக்கு அருகே நின்றுகொண்டிருந்த பத்திரகாளி இப்போதுதான் ஒதுங்குவதற்காக வளவுக்குப் போயிருந்தாள். பேத்தியின் அழுகுரல் கேட்டதும் வேகவேகமாக ஓடி வந்தாள்.

ஒற்றைக் கையில் குழந்தையைத் தூக்கிய பேச்சிக் கிழவி அதன் மார்பைப் பிடித்து நசுக்குவதற்குப் போனாள்.

“ஏ... கெழவி... ஒனக்கு என்ன எழவு எடுக்குவு...? எங்க புள்ளையை என்ன பண்ற...?” என்றபடி ஓடிவந்தாள் பத்திரகாளி.

“ஏ... எழவு மொவள... என்னத்துக்கு இப்பிடிக் கெடந்து கொரைக்கிற...? ஒனக்க பேத்தியை நான் கொன்னா போடுவேன்...?”

“நீ கொன்னாலும் கொன்னு போடுவே... எங்கிட்ட தா புள்ளையை...!” என்று சொல்லிவிட்டு குழந்தையைப் பிடுங்குவதற்குப் போனாள்.

குழந்தையை ஒற்றைக் கையில் பிடித்துக்கொண்டே வேறு பக்கமாகத் திரும்பினாள் பேச்சிக் கிழவி.

வலியைத் தாங்க முடியாத அந்தப் பச்சைக் குழந்தை கதறியது. சேனைத் தண்ணீர்

மட்டும் குடித்த அந்தக் குழந்தைக்கு அழுவதற்கும் சக்தி இல்லை. தாய் இன்னும் பாலூட்டவில்லை. தனது உயிர் வலி அந்தப் பிஞ்சுக்குக் கூடத் தெரிந்திருக்கும். அதனால்தான் அது அப்படிக் கத்தியது.

வெளியே புளிய மரத்தின்கீழ் பேசிக்கொண்டிருந்த செல்லத்தாயியின் கணவன் முத்துச்சாமி உள்ளே ஓடி வந்தான். அவன்தான் முதலில் பிள்ளையைக் கையில் வாங்கினான். பெண் பிறந்த சந்தோஷத்தில் அவன் எல்லோரிடமும் பேசிக்கொண்டிருந்தான்.

மாமியார் வீட்டுக்குள் ஓடியதைப் பார்த்த அவனுக்கு உள்ளே சத்தமும் கேட்டதும் 'என்னமோ ஏதோ' என்று நினைத்தான். பதைப்புடன் உள்ளே வந்தான்.

பேச்சிக் கிழவி அவனது பாட்டிதான்.

முத்துச்சாமியைப் பார்த்ததும், "ஏலே... மக்கா....! இந்தச் சனியன், வெவரம் இல்லாம நிக்கிறா பாத்துக்க....! பொம்பளைப் புள்ளையை எப்பிடி வளக்கணும்னு இவளுக்குத் தெரியுமா..." என்றபடி மீண்டும் அந்தக் குழந்தையின் மார்பில் கையைக் கொண்டு போனாள்.

கிழவியின் கையைத் தட்டிவிடப் போன பத்திரகாளி குழந்தை கீழே விழுந்துவிடக் கூடாது என்று முதலில் குழந்தையை வாங்குவதற்கு முயற்சி செய்தாள். ஆனால் கிழவி கொடுக்கவில்லை.

"ஒனக்க பேத்தியை ஒண்ணும் பண்ணமாட்டன்....! சொல்லியதைக் கேளு. ஒனக்க அம்மை, அப்பன் காலத்திலேயிருந்து செய்யறதைத்தான் செய்வேன்....!" என்ற அந்தக் கிழவி அந்தக் குழந்தையை முகத்துக்கு அருகில் கொண்டுபோய் முத்தம் கொடுத்தாள்.

அவளது செய்கையைப் பார்த்ததும் பத்திரகாளிக்குப் பயமாக இருந்தது.

மீண்டும் குழந்தையை வாங்குவதற்குக் கையைக் கொண்டு போனாள்.

வெளியில் சத்தம் கேட்டது. அதற்குள் மற்ற பெண்களும் ஓடி வந்தார்கள். அழுத குழந்தைக்குச் சேனைத் தண்ணீரைக் கரைத்துக்கொண்டுவந்தார்கள். அவர்களைப் பேச்சிக் கிழவி கவனித்த நேரத்தில் லாவகமாகப் பேச்சியின் கையிலிருந்த குழந்தையைப் பறித்தாள் பத்திரகாளி.

முதல் குழந்தை பெண் பிள்ளையாகப் பிறந்ததில் மனம் குளிர்ந்திருந்த முத்துச்சாமிக்கு அங்கே என்ன நடக்கிறது என்பது புரியவில்லை.

வீட்டுக்குள் கேட்ட அந்தச் சத்தம் செல்லத்தாயிக்குக் கனவில் நடப்பது போல் கேட்டது. பேச்சிக் கிழவியின் பெருவாய் சத்தம்தான் அவளை எழுப்பியது. கட்டிலில் எழுந்து உட்கார நினைத்தாள். அவளது மேலே போர்த்தியிருந்த சேலை நழுவியது.

ஓடிப்போய் அந்தச் சேலையை எடுத்து அவளது மார்பை மறைத்தான் முத்துச்சாமி.

"மக்கா... இப்ப நீ மறைச்சா பத்தியா.... அதுக்குத்தான் நான் ஆலாப் பறக்கிறேன்...! இந்தப் பத்திரகாளிப் பேய் உடமாட்டேங்குது....." என்றதும் பத்திரகாளி உண்மையிலேயே பேய் போலக் கத்தினாள்.

"ஒனக்க பேரனுக்க புள்ளைதான் இது. ஆனா ஒனக்கு உரிமை இல்லை பாத்துக்க. எனக்க பேத்தி இது. இந்தப் புள்ளைக்கி என்ன பண்ணணும்னு எனக்குத் தெரியும்..."

"ஏ... ஒனக்கு என்னத்தைத் தெரியும். இந்த நாட்டுல என்னென்ன நடந்திச்சின்னு ஒனக்குத் தெரியுமா? கணக்க தெரிஞ்சவ போலப்பேசிறியே...! எத்தினை புள்ளையளு எப்பாடெல்லாம் பட்டாங்கன்னு தெரிஞ்சிருந்தா இப்பிடிப் பேசமாட்டா..." என்றபடி குழந்தையைப் பறிப்பதற்குக் கையை நீட்டினாள். அப்போது அவளது மேல் சேலை நழுவி விழுந்தது. வற்றிப்போன அந்த மார்பில் மார்பகம் என்ற பெயரில் வற்றிப்போன புள்ளிகள் மட்டுமே இருந்தன.

தனது சேலையை எடுத்து மீண்டும் மார்பில் போட்ட அவள் அதைத்

தோளுக்குப் பின்னால் போட்டாள்.

மயக்கம் தெளிந்த செல்லத்தாயி குழந்தையைப் பார்த்தபடியே இருந்தாள்.

“எத்தே.... அந்தப் பிள்ளையை அவகிட்ட குடுங்க...” என்று முத்துச்சாமி சொன்னதும் பத்திரகாளி வேகமாகப் போய்க் கொடுத்தாள்.

குழந்தையை மார்பில் அணைத்தபடி அப்படியே அந்த நார்க்கட்டிலில் சாய்ந்தாள். அந்தக் குழந்தையை எப்படி அணைத்துப் பிடிப்பது என்று அவளுக்குத் தெரியவில்லை.

பத்திரகாளி உடனே அருகில் போனாள். எழுந்து உட்காரச் சொன்னாள். செல்லத்தாயியால் முடியவில்லை. முத்துச்சாமி அவளது இரண்டு கைக்கும் இடையில் தனது கைகளை வைத்துத் தூக்கி உட்கார வைத்தான். அவள் மிகவும் சோர்ந்து போயிருந்தாள். அவளது கண்கள் மட்டும் குழந்தையையே பார்த்துக்கொண்டிருந்தன.

குழந்தையை எடுத்து அவளது மடியில் வைத்தாள் பத்திரகாளி. அவிழ்க்கப்படாமலேயே அவளது மார்பு வெளியே வந்தது. குழந்தையை மார்புக்கு அருகில் கொண்டுபோனாள். அழுத வாயுடன் இருந்த அந்தக் குழந்தையின் வாய்க்குள் மார்பினை வைத்தாள். அது வாய்க்குள் நிற்கவில்லை. அருகில் போன பத்திரகாளி அந்தக் குழந்தையின் வாய்க்குள் மார்பினை வைத்து அழுத்திப் பிடித்தாள். வாய்க்குள் பால் போனபிறகு அந்தக் குழந்தை பரபரவென்று சப்பியது. அப்படியே தூங்கியும் போனது.

“ஏ... பிள்ளைய ஏங்கிட்ட தா மொவளே...” என்று செல்லத்தாயியிடம் கேட்டாள் பேச்சிக் கிழவி. அந்தக் கிழவியையும் தனது தாயையும் மிரண்டுபோய்ப் பார்த்தாள் அவள்.

அருகில் நின்ற முத்துச்சாமிக்கு எதுவுமே தெரியவில்லை. ‘தனது பாட்டியிடம் குழந்தையைக் கொடுத்தால் என்ன’ என்று அவனுக்குத் தோன்றியது. செல்லத்தாயிக்கும் அப்படித்தான் தோன்றியது.

கிழவி செய்ய நினைப்பதை எப்படி எடுத்துச் சொல்வது என்று தெரியாமல் திகைத்தாள் பத்திரகாளி.

“எனக்க பேச்சைக் கேக்க மாட்டியா...? பின்னால இந்தக் கொழந்தைக்கி எந்தத் தொந்தரவும் வரப்புடாதுன்னுதான் நான் நெலையழிஞ்சி நிக்கேன்... பாத்துக்க. என்னை வெவரம் தெரியாதவன்னு நெனைக்காதே...” என்ற பேச்சிக்கிழவி தனது தோள் சேலையை எடுத்துக் கீழே போட்டாள். என்னைப் பாத்தியா...? இதுக்கும் நான் வரி கெட்டுனேன் பாத்துக்க...! அந்த வரியைக் கட்டுறதுக்கு நான் எப்பாடு பட்டேன் தெரியுமா? ஏமான்னு சொல்லிக்கிட்டு எத்தனை பேரு வந்து பாத்தானுவ தெரியுமா...? அத்தனை பேருக்கும் நான் கொமரா இருந்தப்ப எடுத்துக் காட்டுனேன்...! அவனுவ போட்ட வரியைக் குடுத்த பெறகுதான் என்னைத் தோள் சேலை போட உட்டானுவ...! ஒனக்க கொம்மையைப் போய்க் கேட்டுப் பாரு...! அவளுக்க காலத்துல எப்பிடியெல்லாம் கொடுமைப் படுத்துனானுவன்னு சொல்லுவா...?” என்ற பேச்சிக் கிழவி தனது தோள் சேலையை எடுத்து வற்றிப்போன மார்பை மறைத்தாள்.

அவளது உள்ளம் இன்னும் குமுறியது.

“சுசீந்திரம் கோவில் திருவிழா பாக்கிறதுக்குப் போய் நாங்க பட்ட அவமானம் ஒனக்குத் தெரியாது பாத்துக்க. நீ அவுத்தேரத்துக்காரி. நீங்க பத்திரமா இருந்தவங்க...! இந்த வழுக்கம்பாறைக்கி அந்தப் பக்கம் போனா ஒனக்குத் தெரியும்.

சுசீந்திரம் கோவில்ல எங்களை எல்லாம் வரிசையா நிக்க வச்சானுவ. மாட்டுக்குப் பல்லைப் பாக்கிறது போல ஒவ்வொரு கொமரியையும் சேலையை எடுத்துப் பாத்தானுவ. அவனுவ குடுத்திருந்த ஓலை ஏங்கிட்ட இருந்ததால அந்தச் சனக் கூட்டத்துல என்னை உட்டானுவ. ஒசரவெளைக்காரி கிட்ட ஓலை இல்லைன்னு தனியா கூப்பிட்டானுவ...! அவ



போவமாட்டேன்னு சொன்னதுக்கு அவளுக்க தலைமுடியைப் பிடிச்சி இழுத்துக்கிட்டு மண்டபத்துக்குப் போனானுவ…! அதுக்குள்ளால நம்ம ஊர்க்காரனுவ வந்ததால அவ தப்பினா பாத்துக்க…! இல்லன்னா இந்தச் சின்னச் சாதி பயிலுவ என்னைப் பண்ணியிருப்பானுவன்னு ஒனக்குத் தெரியாதா…'' என்ற பேச்சிக் கிழவி மூச்சு வாங்கினாள்.

அருகிலிருந்த சொம்பிலிருந்து தண்ணீரை எடுத்துக் குடித்தாள். முத்துச்சாமிக்கு ஏதோ புரிவதுபோல் தெரிந்தது.

''நான் பொறந்த வூட்டுக்குள்ளயே எனக்க மார்பைக் கசக்கி விட்டதால தான் நான் இப்பிடி இருக்கேன். இல்லன்னா நாங்க பாடுபடுறதை எல்லாம் அந்தப் படுபாவியளுக்குக் குடுத்துட்டுத்தான் அலையணும் பாத்துக்க. இந்தப் பச்சப் பிள்ளைக்கி என்ன தெரியும். நாமதான் எடுத்துச் சொல்லணும்'' என்ற பேச்சிக் கிழவி தனது கையை நீட்டினாள்.

''பொறு பேச்சியம்மா….!'' என்று தடுத்த முத்துச்சாமியின் கையைத் தட்டிவிட்டு குழந்தையைக் கையில் எடுக்கப் போனாள் பேச்சி. பத்திரகாளியால் எதுவும் சொல்ல முடியவில்லை. அவள் ஐந்தாம் வகுப்பு வரை படித்தவள். ஒரு காலத்தில் அவருடைய தந்தையார் தவசிமுத்து இதுபற்றி எல்லாம் சொல்லியிருக்கிறார். இவ்வளவு கொடுமை நடந்திருக்கும் என்று அவளுக்குத் தோன்றவில்லை. வயதுக்கு வந்த பெண்களின் சேலையை இழுத்து மார்பின் அளவைப் பார்த்து வரிவிதித்த கொடுமையைப் பற்றி எல்லாம் இப்போதுதான் உணர்ந்தாள். அதனால் வாயடைத்துப் போய் நின்றாள்.

''பேச்சியம்மா….! அந்தக் காலத்துல அப்பிடித்தான் நடந்திருக்கு. இந்தக் காலத்துல அப்பிடி எல்லாம் ஒண்ணும் பண்ண முடியாது. இப்ப நம்ம நாட்டை நாமதான் ஆளறோம். அந்தக்கால திருவிதாங்கூர் இல்லை இது. இனிமேபட்டு நீ சொல்றதுபோல அப்பிடி எல்லாம் நசுக்க வேண்டாம்'' என்றான்.

''நாலெழுத்துப் படிச்சிட்டேன்னு பேசிறியா…? எந்தக் காலத்திலயும் அந்த எருமை மாடுங்க என்ன வேணும்னாலும் பண்ணும். மனுசனுவ இல்லை பாத்துக்க அந்தச் சின்னச்சாதி நாய்ங்க…! இங்க உள்ள ஆசான்மாருக்கு பயந்துகிட்டுத்தான் இங்ஙன வராம வாலை ஒடுக்கிக்கிட்டு அலையறானுவ…! அந்தால பறக்கை பக்கத்துல போய்ப் பாரு…! அவனுவ பண்ணுய கேடுகெட்ட தனமெல்லாம் ஒனக்குத் தெரியும்''

''சரி…! பேச்சியம்மா…! இந்தக் காலத்துல எவனும் நம்மளை ஒண்ணும் பண்ண முடியாது. இப்பல்லாம் போலீஸ்ல நம்ம ஆளுவ நெறைய பேரு இருக்காவ…! அதுனால நீ நெனைக்கிறது போல ஒண்ணும் செய்ய வேண்டாம்…!'' என்றான் முத்துச்சாமி.

''போலீசு என்ன மக்கா போலீசு…! அவனுவ ஆள், அம்புன்னு அடிக்கிறதுக்கும் வெட்டுறதுக்கும் நின்ன காலத்துலதான் ஒனக்க தாத்தன் இந்தச் சாமிதோப்புக்கு

வடக்க இருக்கிற வடக்குத் தாமரைக்கொளத்து வயலுக்குள்ளதான் ரெண்டு ஏமானை வெட்டினாரு...! ஒனக்கு நான் சொல்லுயது வெளங்காது பாத்துக்க...! பனங்காட்டுக்குள்ள பயினிப் பானையைத் தூக்கிக்கிட்டு வந்த ஏங்கிட்ட வம்பு பண்ணானுவன்னுதான் ஓட ஓட வெரட்டிப் பாளை சீவுற அருவாள்ல சீவுனாரு ஒனக்க தாத்தன். அன்னைக்கிக் காணாம போனவருதான். என்ன ஆனாருன்னு தெரியாது பாத்துக்க. ஒனக்க அப்பனை வளக்கிறதுக்கு நான் என்ன பாடு பட்டேன்னு ஒனக்குத் தெரியாது பாத்துக்க. ஒனக்க அப்பனும் எனக்க முன்னால போய்ட்டான். அவன் இருந்திருந்தா ஒனக்குச் சொல்லியிருப்பான். இந்தப் பேச்சி எப்பிடிப்பட்டவன்னு ஒனக்குத் தெரியாது மக்கா...! நான் ஒத்தைக்கி நின்னு ஒன்பது ஏமான வெட்டுவன் பாத்துக்க...! என்னைப் போலப் பொம்பளையளுவ இருந்ததாலதான் அந்த எச்சிப் பொறுக்கி நாயளு இங்ஙன தலை காட்டலை.

நான் சொல்லுயேன் மக்கா...! என்னும் அம்பது, அறுபது வரியத்துல பாரு...! அவனுவ நம்ம தலைக்கி மேல ஏறி நின்னு ஆட்டம் போடுவானுவ பாத்துக்க...! ஒனக்க தரத்துல இருக்கிற பயலுவ எல்லாம் என்னமோ கத்திக்கிட்டு அலையறானுவ...! இவனுவளுக்க போக்கு சரியில்லை...! தாத்தன்மாருக்க மீசையைப் புடிச்சு இழுத்த பயலுவளுக்குக் காவடி தூக்கிக்கிட்டு அலையறானுவ...! தாலியை அறுத்த பயலுவளுக்கு இவனுவ சலாம் போட்டுட்டு அலையறானுவ...! இப்பிடியே போய்க்கிட்டிருக்கட்டும்... பாரு... பாரு..." என்ற பேச்சிக் கிழவி அப்படியே தரையில் உட்கார்ந்தாள். அவளது கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

அந்த ஓட்டு வீட்டுக்குள் மொத்த ஆளும் கூடி விட்டார்கள்.

செல்லத்தாயி மெதுவாக எழுந்து பேச்சிக்கிழவியின் அருகில் வந்தாள்.

"பேச்சிப் பாட்டி...! ஒங்க புள்ளதான், எனக்க புள்ளை பாத்துக்கிடுங்க...! நீங்க என்ன வேணும்னாலும் செய்யலாம். இந்த ஊரு நாட்டுல நடந்தது ஒங்களுக்குத் தெரியும். நாங்க இப்ப சொகமா இருக்கிறோன்னா அந்தக் காலத்துல ஒங்களைப் போல உள்ளவங்க பட்ட கஷ்டந்தான்ங்கறது எனக்குத் தெரியும்" என்று அவளைத் தனது மார்போடு அணைத்துக்கொண்டாள்.

"இல்லை மக்களே...! ஒண்ணும் இல்லை. புள்ள பெத்த பச்ச ஒடம்புக்காரி நீ. இப்பிடி நீ தரையில இருக்காத...! சீதளம் புடிச்சுக்கும் பாத்துக்க..." என்ற பேச்சிக்கிழவி அவளைத் தூக்கினாள். அவளால் முடியவில்லை. அதற்குள்ளாக இருவரையும் வந்து தூக்கினான் முத்துச்சாமி. இருவரும் கட்டிலின் ஓரத்தில் உட்கார்ந்தார்கள்.

"பத்திரகாளீ..." என்றாள் பேச்சிக் கிழவி.

"இல்லம்மை...! நீங்கள்லாம் எங்களுக்க தெய்வம். நீங்க தான் எனக்க மொவளுக்கு அம்மை...! ஒங்கள போல உள்ளவங்க இருக்கிறதாலதான் இந்தக் காலத்துல எங்களுக்கு இதெல்லாம் தெரியுது. நீங்க ஒங்க இஷ்டம் போலச் செய்யுங்க...! அதுதான் நல்லது" என்ற பத்திரகாளி குழந்தையை எடுக்கப்போனாள்.

"வேண்டாம் மக்ளே... வேண்டாம் பாத்துக்க. காலங்காலமா நடந்த கொடுமை எங்க நெஞ்சுக்குள்ள நெறைஞ்சி போச்சி. அதுனாலதான் அப்பிடிச் செய்றது வழக்கம்னு நான் நெனைச்சேன். ஆனா ஒன்னையும் ஒனக்க மொவளையும் பாத்தா பெறந்த வீட்டில ஒங்களுக்கு இப்பிடி ஒண்ணும் பண்ணல்லைன்னும் தெரியுது...! வேண்டா... ஒனக்க பேத்தி ஒன்னைப் போலவே இருக்கட்டும் விட்டிடு..." என்ற பேச்சிக் கிழவியின் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள் பத்திரகாளி.

muhilairaja@gmail.com ■



அஞ்சலி
ஜீவகரிகாலன்



முற்றுபெறாத பயணம்

நண்பரும் எழுத்தாளருமான திரு அ.நாகராசனின் மறைவு சற்றும் எதிர்பாராதது. பொதுவாகவே நமக்கு வேண்டப்பட்டவர்கள் எவரது மரணத்தையும் நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாததுதான். ஆனால் திடீரென்று ஏற்படும் மரணம் முதலில் நம்புவதற்கே கடினமானதாய் இருக்கும். ஒரு படைப்பாளியாக அ.நாகராசன் அவர்களின் வாழ்க்கை அவரது சிறுகதை வெளியாகும் இதழ் ஒன்றிலேயே அவரது அஞ்சலி கட்டுரையும் வெளியாகின்ற அளவிற்கு எதிர்பாராத பிரிவாக இருப்பது சற்று அதிர்ச்சியானதுதான்.

எனக்கு கணையாழியின் வாயிலாகவே அ.நாகராசனோடு தொடர்பு ஏற்பட்டது. அப்போது நானும் கணையாழியில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அவரது குறுநாவல் ஒன்றை சிலாகித்துப் பேசியபடி இருந்த நாள் ஒன்றில், ஆசிரியர் ம.ரா. அவர்கள் அப்போது வருகை தந்த திரு நாகராசன் அவர்களை அறிமுகம் செய்துவைத்தார்.

அவர் அறிமுகமாகும் போதே அவர் ஏற்கனவே தி.ஜா நடத்திய குறுநாவல் போட்டியில் பரிசு பெற்றவர் என்கிற அறிமுகமும் கிடைத்தது. 1980களில் இருந்து எழுதிக்கொண்டிருப்பவர் பணி நிமித்தம் அவரது இலக்கிய ஈடுபாட்டில் இருந்ததாக அவர் சொன்னார். இடைவெளிகள் இருந்தாலும் அவரது கதைகள் சமகாலத்தில் எழுதப்படும் தரமான கதைகளின் வரிசையில் இடம்பிடிக்கின்றன.

தமது பணி ஓய்வுக்குப் பின்னர் முழுநேர எழுத்தாளராக நிறையவே கனவுகளைச் சுமந்துகொண்டிருந்தவர். மாத இறுதிகளில் மெய்ப்பு திருத்தும் பொருட்டு இதழின் படைப்புகள் எப்படி வந்திருக்கின்றன என்று எங்களுக்குள் கதைத்துக்கொள்வோம். கல்லூரிகளில் கணையாழி சார்பாக நடத்தப்பட்ட விழாக்களில் மாணவர்கள் பங்கேற்கும் போட்டிகளில் நடுவர்களாக அவரோடு அமர்ந்திருக்கிறேன். கிட்டத்தட்ட இருவரது ரசனையும் ஒன்றாகவே இருப்பதை நாங்கள் உணர்ந்திருக்கிறோம்.

திராவிடக் கொள்கை மீது மிகப்பெரிய பற்றுள்ளவர். அரசியல் நீக்கம்பெற்ற நயமான இலக்கியம் குறித்த அவநம்பிக்கைகளை அவர் வெளிப்படுத்தியிருக்கிறார். தன்னை திராவிட மரபில் இருந்து உதித்த ஓர் எழுத்தாளனாகப் பெருமை கொண்டவர். நான் முழுநேர பதிப்புத் தொழிலில் ஈடுபடுத்திக்கொள்வதற்காக கணையாழில் இருந்து விடைபெறும்போது அவரது படைப்புகளை நானே வெளியிடுகிறேன் என்று

கேட்டுக்கொண்டேன். ஆனாலும் அது கொரோனா காலத்தால் தள்ளிப்போனது. பின்னர் ஜனவரி 2023ல் அவரது முதல் தொகுப்பான, 'கல் தேர் ஓடி அல்லது ஜே.கே. சிலாகித்த ஆழி தேர் & பிற கதைகள்' எனும் சிறுகதைத் தொகுதி யாவரும் பதிப்பகம் வழியாக வெளியீடு கண்டது. இந்த தலைப்பிலான கதையும் கணையாழியில் வெளியான சிறுகதையே.

நல்ல கதைகள் கொண்ட தொகுப்பு என்று அந்த ஆண்டில் வெளிவந்திருக்கின்ற நூல்களின் பட்டியலில் இக்கதை வரும். இந்த முதல் தொகுப்பில் இந்த ஆண்டு இடைவெளியில் வெவ்வேறு காலங்களில் புனையப்பட்ட 13 கதைகள் இடம்பெற்றுள்ளன.

அண்மையில் இந்த நூல் குறித்த ஒரு அறிமுகக் கூட்டத்தை நடத்த வேண்டும் என பேசிக்கொண்டிருந்தோம். நான் அவரை அவ்வப்போது மேடவாக்கம் சந்தைக்கருகே சந்திப்பதுண்டு. தனது துணைவியாரின் உடல்நலம் பொருட்டு முழுமையாக உடனிருப்பதாகச் சொன்னார். அடுத்த தொகுப்பு குறித்தும் பேச ஆரம்பித்திருந்தோம். சில நாட்கள் உடல்நிலை சரியில்லை என்று சொல்லி இருந்தார். ஆப்ரேஷன் வரை செல்லக்கூடும் என்றும் சொல்லியிருந்தார்.

அவர் என்னிடம் பகிர்ந்ததை வைத்து மட்டும் சொல்வதாயின் தனது படைப்புலகின் அடித்தளத்தை மட்டுமே அவர் கட்டி முடித்திருக்கிறார். அவரது வாகனத்தை ஓட்டும் விதத்தை கவனித்திருக்கிறேன். அவர் வயதை மீறிய உற்சாகத்தை உள்ளத்தில் வைத்திருந்தவர். அந்த உள்ளத்திலிருந்து எழுந்த படைப்புணர்வும் அவரை இளமையாகவே வைத்திருந்தது என்பது பயணம் எனில் அவரின் இழப்பு - அவருடைய எழுத்துலகில் நடந்த விபத்து.

தன்னை முழுநேர எழுத்தில் ஈடுபடுத்திக்கொள்ள அவர் தன்னை தயார்படுத்திக்கொண்டிருப்பதாகவே அவர் எப்போதும் என்னிடம் சொல்வார். அவரின் மறைவை அறிந்து அவரது வீட்டிற்கு ஆசிரியர் ம.ரா. அவர்களோடும் கோபு அவர்களோடும் சென்றபோது அவர் கடைசியாக என்ன செய்துகொண்டிருந்தார் என்று எங்களிடம் பகிர்ந்தார். உடல் பலவீனமடையும் வரை ஏதோ ஒரு கதையை எழுதத் தொடங்கி இருந்தாராம்.

ஒருவேளை அவர் அதை எழுதி முடித்திருந்தால் அடுத்த மாத கணையாழியிலோ ஆண்டு இறுதியில் எமது பதிப்பகத்தில் நூலாகவோ வெளிவந்திருக்கும்.

அவரது கனவு ஒரு முற்றுபெறாத பயணம். இதுவரை கிட்டத்தட்ட முப்பது கதைகள் வெளிவந்துள்ளன. அவர் நம்மோடு இல்லை, ஆனாலும் அவரது கதைகளின் கதைசொல்லியாக ஜீவிக்கிறார்... ஜீவித்தபடி இருப்பார்.

அ.நாகராசன் - இவரின் தாய் தந்தையர் சரஸ்வதி மற்றும் அமிர்தலிங்கம் ஆவர். பிறந்த ஊர் கரூர் என்றாலும் மத்திய அரசு ஊழியராக பணி நிமித்தம். புதுச்சேரி, ஓணம் எனப் பல ஊர்களில் கல்வி பயில நேரிட்டது.

கல்லூரிப் படிப்பை திருச்சியில் முடித்தபின் 1980ல் பணி நிமித்தம் செகந்திராபாத்திற்கு இடம்பெயர்ந்தார்.

இதுவரை 30 கதைகளும் 15க்கும் மேற்பட்ட விமர்சனக் கட்டுரைகளும் எழுதியிருக்கிறார்.

இவரது முதல் சிறுகதை மலேசிய இதழான 'தமிழ் மலர்' நடத்திய சிறுகதைப் போட்டியில் முதல் பரிசை வென்றது. கணையாழி நடத்திய குறுநாவல் போட்டியிலும் முதல் பரிசை வென்றது.

கணையாழி, கனவு பூத்தது, மானுடம், மகாகவி, கண்ணதாசன் போன்ற இலக்கியப் பத்திரிகைகளிலும், சாவி, இதயம் பேசுகிறது போன்ற வெகுஜன

இதழ்களிலும் இவரது படைப்புகள் வெளிவந்துள்ளன. இவர் தனது இறுதிக் காலத்தில் தனது துணைவியார் அமுதாவுடன் சென்னை மேடவாக்கத்தில் வசித்து வந்தார். அவருக்கு எமது அஞ்சலி.

jeev.karikalan@gmail.com ■



கவிதை

வ.ஐ.ச.ஜெயபாலன்

பாடா அஞ்சலி

உதிர்கிற காட்டில்
எந்த இலைக்கு நான் அஞ்சலி பாடுவேன்?

•

சுனாமி எச்சரிக்கை கேட்டு
மலைக் காடுகளால் இறங்கி
கடற்கரைக்குத் தப்பிச்சென்றவர்களின்
கவிஞன் நான்.
பிணக்காடான இந்த மணல் வெளியில்
எந்த புதைகுழியில் எனது மலர்களைத் தூவ?
யாருக்கு எனது அஞ்சலிகளைப் பாட?

•

வென்றவரும் தோற்றவரும் புதைகிற
உலகோ
ஒரு முதுகாடாய் உதிர்க்கிறது.
எந்தப் புதைகுழியில் என் மலர்களைச் சூட?
எந்த இலையில் என் அஞ்சலிகளை எழுத?


•

இந்த உலகிலும் பெரிய இடுகாடெது?
பல்லாயிரம் சாம்ராச்சியங்களைப் புதைத்து
புதிய கொடிகள் நாட்டப்படுகிற
பெரிய அடக்கத்தலம் அது.
நடுகற்களின் கீழ்
அடிபட்ட பாம்புகளாய்
கிழிந்த எங்களூர் சிறுமிகளின்
இறுதிச் சாபங்கள் அலைகிறதே.
எந்த சாபத்துக்கு நான் கல்வெட்டுப்
பாடுவேன்.

•

அகலும் வலசைப் பறவைகளின்
புலம்பல்கள் தேயும் மண்ணில்
மொட்டை மரங்கள் பாடுகின்றன.
"வரலாறு காடுகளைப் பூக்கச் செய்யும்."

visjayapalan@gmail.com ■



கட்டுரை

முனைவர் பே.சக்திவேல்


புகையிலை வரலாறும் வழக்காறும்

வாய்மொழி வழக்காறுகள் தேவைக்காக உருவாக்கப்படுபவை, தேவைக்காகப் பயன்படுத்தப் பெறுபவை. தேவையில்லையேல் மறைந்து விடுபவை. ஒரு மக்கள் குழு தம் வாழ்வியல் சூழலில் பயன்படுத்தும் பொருட்கள் குறித்த தம் கருத்தாக்கங்களைப் பல்வேறு வழக்காறுகளாக உருவாக்கிக்கொள்கின்றது. இத்தகைய வழக்காறுகளின் வழியே அப்பொருட்கள் குறித்த அம்மக்கள் குழுவின் பல்வேறுப்பட்ட சிந்தனைகள், கருத்துகள், நோக்கு நிலைகள் ஆகியனவற்றை நாம் அறிந்துகொள்ள முடியும். எனவே மக்கள் வாழ்வில் இடம்பெறும் பயன்படு பொருட்கள், நுகர்வுப் பொருட்கள் குறித்த அவதானிப்பு அண்மைக் காலத்தில் கூர்மையாகி வருகின்றது. குறிப்பாக மக்களின் வாழ்வோடு நெருங்கிய உறவு கொண்டு விளங்கும் தாவரங்கள் சார்ந்த வழக்காறுகள் குறித்த ஆய்வுகள் மேற்கிளம்பி வருகின்றன. பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன் தமிழரின் தாவர வழக்காறுகள் குறித்துக் குறிப்பிடத்தக்க ஆய்வுகளைச் செய்துவருபவர். பனைமரம், நொச்சி, ஆவாரை, நெல் ஆமணக்கு, எருக்கு முதலான தாவரங்கள் குறித்தும், தாவரங்களிலிருந்து பெறப்படும் எண்ணெய் குறித்தும், விளக்குமாறாகும் தாவரங்கள் குறித்தும், ஒட்டப்பிடாரம் பகுதி கத்தரிக்காய் குறித்தும் நுணுக்கமாக ஆய்வுசெய்து தாவர வழக்காறுகள் எனும் ஆய்வுத்தடத்தை அமைத்துள்ளார். இந்த ஆய்வுத் தடத்திலிருந்து வெளிவந்துள்ள நூலே பேராசிரியர் இரா.காமராசு எழுதியுள்ள ‘புகையிலை வரலாறும் வழக்காறும்’ எனும் நூல்.

முன்னுரை, பொருளும் பண்பாடும், புகையிலை எனும் தாவரம், இலக்கியத்தில் புகையிலை, வழக்காறுகளில் புகையிலை, புகையிலைப் பொருட்கள், வாய்ப்புகையிலை, நன்றும் தீதும், முடிவுரை, தகவலாளர்கள், புகையிலை விவசாயக் கலைச்சொற்கள், படங்கள் எனும் வகையில் அமைந்துள்ள இந்த நூல் புகையிலை குறித்த ஒருமுழுச் சித்திரத்தை வாசகருக்குக் காட்சிப்படுத்துகின்றது.

மனித வாழ்வில் பயன்படும் பொருட்கள் வெறும் பயன்படு பொருட்களாக மட்டுமல்லாமல் பயன்பாட்டுப் பொருள்களாகவும் நிலைபெறுகின்றன. பொருளும் பண்பாடும் இணைபிரியாதவை என்பனவற்றைத் தெளிவுபடுத்தும் நூலாசிரியர், புகையிலை எனும் தாவரத்தின் தோற்றம் தொடங்கி உலக நாடுகளில் அதன் பரவல், பயிரிடல் என்பன குறித்து நுட்பமாக விவரித்துச் செல்கின்றார்.

இலக்கியம் சமூக விளைபொருள் எனும் அடிப்படையில் அது சமூக வாழ்வியலை வெளிக்காட்டக் கூடியது. இந்த வகையில், இலக்கியத்தில் புகையிலை குறித்து இடம்பெற்றுள்ள பதிவுகளை எடுத்துக்காட்டி விளக்கும் நூலாசிரியர், எழுத்திலக்கிய மரபின் இணை மரபான வழக்காற்று மரபில் புகையிலை குறித்த பதிவுகள் இடம்பெற்றுள்ளதை நாட்டுப்புறப் பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், கதைகள், வழிபாடு, நம்பிக்கைகள் உள்ளிட்ட வழக்காறுகள் வழியே எடுத்துரைத்து, மக்கள் மரபில் புகையிலை குறித்த சிந்தனைகள், கருத்தாக்கங்கள் எவ்வாறு தோன்றி, நிலவி வந்துள்ளன என்பதைச் சுவையாக விவரித்துள்ளார். தொடர்ந்து புகையிலையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் பொருட்கள் குறித்தும் வாய்ப்புகையிலைக் குறித்தும் தெளிவாக விளக்கும் நூலாசிரியர் புகையிலை மருந்தாகவும் நச்சாகவும் அதாவது உயிருக்குத் தீங்கானதாகவும் இருப்பது குறித்து அக்கறையுடன் பதிவு செய்துள்ளார்.



புகையிலை எனும் தாவரம் குறித்து ஏராளமான தரவுகளைத் திரட்டி இந்நூலை உருவாகியுள்ள நூலாசிரியரின் உழைப்பு பாராட்டத்தக்கது. சமூகவியல், பண்பாட்டியல் பின்னணிகளில் புகையிலை எனும் தாவரம் பெற்றுவந்துள்ள பெறுமதியை இந்நூல் சிறப்பாக ஆவணப்படுத்தியுள்ளது.

புகையிலையின் வரலாற்றோடு அரசியல், சமூகவியல், பண்பாட்டியல் வரலாறு பின்னிக் கிடப்பதைத் தரவுகளின் வழி இந்நூல் தெளிவுபடுத்தியுள்ளது. சுருக்கமாகச் சுட்டினால் தாவர வழக்காறுகள் குறித்த எதிர்கால ஆய்வுகளுக்கு மிகச்சிறந்த கருவி நூலாக இந்நூல் அமையும் தன்மையுடையது எனலாம்.

புகையிலை வரலாறும் வழக்காறும் / ஆய்வு / இரா. காமராசு / உயிர் பதிப்பகம் 4, 5வது தெரு, சக்தி கணபதி நகர், திருவொற்றியூர், சென்னை / தொடர்புக்கு 98403 64783, பக்கங்கள் 164 / விலை ரூ.200

kanimozhichella@gmail.com ■



கவிதை

சீ.பாஸ்கர்

பூமியின் வாசிப்பு

மனைகளாகாமல் மிச்சமிருக்கும்
மண் தாளில்
ஏர்முனை வரைந்த நேர்க்கோட்டின் வழியே
விதை எழுத்துகளை உழவன்
தன் விரல்களால் எழுதியதும்
பச்சைப்பட்டு உடுத்தி
பூமி வாசிக்கும் விளைச்சல் கவிதையை
காற்று காது கொடுத்து கேட்பதை
வியப்புடன் பார்க்கிறது
நகரத்திலிருந்து வந்த குழந்தை

baskee1981@gmail.com ■



கட்டுரை
கவிதைக்காரன் இளங்கோ

அபத்த வாழ்வின் அண்மைக்குள் வெளிப்படுகின்ற கலைஞன்: அப்பாஸ் கியாரராஸ்தமி

(திரைமொழிப் பார்வை)

இயக்குனர் அப்பாஸ் கியாராஸ்தமி (Abbas Kiarostami) பிரபலமான பல பெர்ஸிய மொழிப் படங்களை எடுத்த இரானிய இயக்குனர். 1990-ம் ஆண்டு அவர் இயக்கி வெளியான முக்கியமான திரைப்படம் Close-Up. இதன் கதைச் சுருக்கத்தைச் சொல்லுவதற்கு முன்பாக இன்னொரு பிரபல இரானிய இயக்குனர் பற்றியும் கொஞ்சம் சொல்லியாக வேண்டும். அவர் மோஷென் மக்மல்பஃப் (Mohsen Makhmalbaf). மக்மல்பஃப் தம் பதினைந்தாவது வயதிலேயே இரானில் நடைப்பெற்ற இஸ்லாமிய புரட்சி காலக்கட்டத்தில் இளைஞர்களுடன் இணைந்து தனிப்படை அமைத்து அன்றைய அரசை எதிர்த்துப் போராடியவர். அதன் காரணமாக நான்கு ஆண்டுகள் சிறைவாசம் இருந்தவர். தீவிர அரசியல் செயல்பாட்டாளர், பின்னர் நாடகாசிரியர், நாவலாசிரியர் என அவருடைய இருப்பு இன்றைய நாள்வரை ஒரு முக்கியமான தவிர்க்கவியலா அடையாளம். அவருடைய திரைப்படங்கள் பெரிதும் போற்றுதலுக்குரியது. பார்வையாளர்களை உணர்வுரீதியாகவும் உளரீதியாகவும் ஈர்க்கக்கூடியது. அதிலொன்று 1987-ம் வருடம் அவருடைய இயக்கத்தில் வெளியாகியிருந்த The Cyclist திரைப்படம். ஓர் ஆஃப்கானிய அகதி இரானில் தன்னுடைய வாழ்வாதாரத்திற்காக அனுபவிக்க நேர்கின்ற தினப்படி பாடுகளை எப்படி எதிர்கொள்கிறான்? தனது குடும்பத்திற்காக எந்தெந்த வழிகளில் முயற்சிக்கிறான்? அவனுடைய செயல் நோக்கிற்கு பின்புலமாக அன்றைய அரசியல் என்னவாக இயங்குகிறது? எனப் பலத் தளங்களில் அடுக்கடுக்கான குறியீடுகளுடனும் அப்பட்டமான காட்சிகளினாலும் புதிய திரைமொழியைக் கொண்டு மக்மல்பஃப் அதனை உருவாக்கியிருப்பார். உலகளவில் அத்திரைப்படம் கவனிக்கப்பட்டது.

அதிலிருந்து மூன்றாண்டுகள் கழித்து வெளிவந்த Close-Up திரைப்படத்திற்கும் The Cyclist திரைப்படத்திற்கும் இடையே எதிர்பாராத விதத்தில் ஒரு சம்பந்தம் உருவாகின்றது. அதற்கு காரணம் ஒரு சாதாரண இரானிய பிரஜை. அவனொரு சினிமா ஆர்வலன். அவன் பெயர் ஹோஸைன் சப்ஸியன் (Hossain Sabzian). சப்ஸியனுக்கு சினிமா இயக்குனர் ஆகவேண்டும் என்கிற விருப்பம் உண்டு. The Cyclist

திரைப்படத்தின் திரைக்கதைப் புத்தகத்தை கையில் வைத்துக்கொண்டு ஒருநாள் பேருந்தில் பயணிக்கிறான். அவனருகில் சகப் பயணியாக திருமதி. அஹான்கா உட்கார்ந்திருக்கிறார். சப்ஸியனின் கையிலிருக்கும் புத்தகத்தைப் பார்த்துவிட்டு தான் அந்தப் படத்தின் தீவிர விசிறி என்கிறார். பதிலுக்கு சப்ஸியன் அந்தப் படத்தை இயக்கிய இயக்குனர் நான்தான் என்று பொய் சொல்லுகிறான். திருமதி. அஹான்கா, தன்னுடைய இரு மகன்களுக்கும் திரைப்படத்தில் நடிக்கின்ற ஆசை இருப்பதை தெரியப்படுத்துகிறார்.

அதனையொட்டி நீள்கின்ற உரையாடலின் முடிவில் சப்ஸியன், அஹான்காவுடன் அவர்களின் இருப்பிடத்திற்கு போகிறான். அவர்கள் மிகவும் வசதியானவர்கள். சப்ஸியன், தான் அடுத்து எடுக்கவிருக்கும் திரைப்படத்திற்கான கதாபாத்திரமாக அவருடைய மகன்களைத் தேர்ந்தெடுத்து அதற்கான கதையை விவரித்து கதைக்களமாக அவர்களின் வசதியான அந்த பங்களாவையே தீர்மானித்திருப்பதாகச் சொல்லி அவர்களின் சம்மதத்தைப் பெறுகிறான். அடுத்த இரண்டு வாரங்களில் ஒவ்வொரு நாளும் அவர்களின் வீட்டுக்கு வந்துவிடும் சப்ஸியன் கதைக்கான ஒத்திகைகளைச் செய்கிறான். ஒருமுறை தன்னுடைய கார் பயணச் செலவுக்காக 1,900 தொமான்களை (இரானிய பணம்) கடனாகக் கேட்கிறான். முதல் சந்தேகம் அங்கிருந்து முளைக்கிறது. ஒரு பிரபலமான இயக்குனரிடம் இதற்கு கூடவா கையில் பணம் இருக்காது. அடுத்ததாக திரு.அஹான்கா ஒரு பத்திரிகையில் இயக்குனர் மோஷென் மக்மல்பஃபின் புகைப்படத்தைப் பார்க்கிறார். அதில் இயக்குனருக்கு கருப்புநிற தலைக்கேசம் இருக்கிறது. ஹோஸைன் சப்ஸியனுக்கோ சாம்பல்நிறம் கலந்த தலைக்கேசம். இவன் யாரோ மோசடிப் பேர்வழி. தன் வீட்டைக் கொள்ளையடிக்க திட்டமிட்டிருக்கிறான் என்கிற முடிவுக்கு அவர் வருகிறார்.

தன்னுடைய நெருங்கிய நண்பரை அழைத்து ஆலோசிக்கிறார். அதேபோல தனக்கு நன்கு அறிமுகமுள்ள ஒரு பத்திரிகையாள நண்பரின் கவனத்திற்கு ரகசியமாக இந்த விஷயத்தைக் கொண்டுபோகிறார். அவரை வைத்து இந்த விஷயத்தை உறுதி செய்தபடி ஹோஸைன் சப்ஸியனை போலீஸிடம் பிடித்துக் கொடுப்பதுதான் திட்டம். முடிவு செய்து வைத்தபடியே காரியங்கள் நடக்கின்றன. வழக்கம்போல ஒத்திகைக்காக வந்திருக்கும் சப்ஸியன் எப்போதும்போல மோஷென் மக்மல்பஃபாகவே நடித்தபடி அவர்களோடு உரையாடியபடி இருக்கும்போது பத்திரிகையாள நண்பர் போலீஸுடன் வருகிறார். ஹோஸைன் சப்ஸியன் கைது செய்யப்படுகிறான். அப்போது சப்ஸியன் எந்த எதிர்ப்பையோ தப்பித்து போகும் முயற்சியையோ செய்யவில்லை. தன்னுடைய குற்றத்தை ஒத்துக்கொண்டு போலீஸ் அதிகாரிகளோடு ஒத்துழைத்தபடி அமைதியாக கைதாகி போகிறான்.

பத்திரிகையாளர் ஃபராஸ்மாண்ட் பரபரப்பாகக் காணப்படுகிறார். மிகவும் வித்தியாசமான இந்தக் குற்றம் தனக்குப் பத்திரிகை உலகில் நல்ல பெயர் பெற்றுத்தரும் என்பதை கணிக்கிறார். சப்ஸியன் கைதாகிப் போகும் நிலையை நிறைய புகைப்படங்களை எடுக்கிறார். ‘போலி மக்மல்பஃப் கைது’ என்கிற தலைப்பில் புகைப்படங்களுடன் அந்தக் கட்டுரை வெளியாகிறது.

இந்தக் கட்டுரையை இயக்குனர் அப்பாஸ் கியாராஸ்தமி பார்க்கிறார். அச்சமயம் தன்னுடைய புதிய திரைப்படத்திற்கான வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர், அதனை அப்படியே ஒதுக்கி வைத்துவிட்டு முறையான அனுமதி பெற்று தன் படக்குழுவோடு சிறைச்சாலைக்குப்


போகிறார். அங்கே ஹோஸைன் சப்ஸியனை சந்திக்கிறார். அவனிடம் சில கேள்விகளைக் கேட்டு அதற்கான அவனுடைய பதில்களையும் கையோடு கேமராவில் பதிவு செய்துகொள்கிறார். சிறையதிகாரிகளிடம் மேற்கொண்டு விபரங்களைப் பெற்றுக்கொள்கிறார். அதன்படி, அந்த வழக்கு அடுத்து நீதிமன்றத்திற்கு வரும்போது அதன் வழக்காடும் நிகழ்வுகளை லைவாகப் படம்பிடிப்பதற்கான அனுமதியை அதற்குரிய நீதிபதியை நேரில் சந்தித்துப்பேசி குற்றம் சாட்டப்பட்ட ஹோஸைன் சப்ஸியனின் வாக்குமூலத்தை பதிவு செய்யவேண்டும் என்கிற காரணத்தையும் சமூகத்திற்கான அதன் அவசியத்தையும் முன்வைத்து நீதிபதியின் முறையான அனுமதியையும் பெறுகிறார்.

Close-Up படத்திற்கான முதற்புள்ளி அப்படித்தான் தொடங்கியுள்ளது. பின்னர் அதனையொட்டி நடந்தவை அத்தனையும் ஒரு காலக்கட்டத்தின் வரலாறு. மிக முக்கியமான ஆவணமாகவும் அது உருமாற்றம் அடைகின்றது. நாளது தேதி வரையிலுமே அதனுடைய முக்கியத்துவம் உயிர்ப்போடு பதிவாகிக்கொண்டிருக்கிறது.

ஆங்கிலத்தில் Con man என்று குறிப்பிடப்படுகின்ற பணம் பறிக்கும் ஆள்மாறாட்ட மோசடிப் பேர்வழியாக ஹோஸைன் சப்ஸியன் செயல்பட்டானா என்பதுதான் அந்த வழக்கு வாதங்கள். அவை பதிவு செய்யப்பட்டதின் வழியாக நாம் அதன் பார்வையாளராக மாறுகிறோம்.

வெறும் சினிமா ஆர்வலனான ஹோஸைன் சப்ஸியனுக்கு சினிமாவின் எந்தக் கூறுகளும் தெரியாது. கேமரா பற்றின தொழில்நுட்ப அறிவு சுத்தமாகக் கிடையாது. ஆனால், சினிமா இயக்க வேண்டும் என்கிற ஆசையும் கதைகளை உருவாக்கும் திறனும் அவனிடம் உள்ளது.

ஓர் அச்சகத்தில் வேலை



செய்துகொண்டிருந்த சாமானியன் அவன். அதில் அவனுக்குத் தொடர்ச்சியான வேலை கிடையாது. திருமணமாகி இரண்டு குழந்தைகள் இருக்கின்றனர். ஏழ்மையான குடும்பத்தை சேர்ந்தவன். அவனும் அவனுடைய மனைவியும் ஏழு வருட மண வாழ்க்கைக்குப் பிறகு விவாகரத்தாகி பிரிந்திருக்கின்றனர். ஒரு குழந்தை மனைவியிடமும் இன்னொரு குழந்தை அவனிடமும் உள்ளனர். அவனிடமுள்ள குழந்தையை அவனுடைய அம்மா பராமரிக்கிறார். அம்மாவும் வழக்காடு மன்றத்துக்குள் உட்கார்ந்திருக்கிறார். அவர்தான் இந்த விபரங்களை நீதிபதியிடம் விவரிக்கிறார். ஏழு வருடங்கள் அவனோடு குடும்பம் நடத்திய மனைவி தொடர்ந்த ஏழ்மையையும் வசதியின்மையையும் காரணம்காட்டி இதற்குமேல் இந்த வீட்டில் தனக்கான எதிர்காலம் கிடையாது என்பதைக் குறிப்பிட்டு விவாகரத்து பெற்றுக்கொள்கிறாள். இவற்றைத் தொடர்ந்து ஹோஸைன் சப்ஸியன் தன்னுடைய வாக்குமூலத்தை எடுத்து வைக்கும் விதத்தில் ஒரு சாதாரண மனிதனின் நேர்மையான மனமும் அவனுடைய இயலாமை சூழ்ந்த வாழ்வின்

அபத்தங்களும் அப்பட்டமாக வெளிப்படுகின்றது. அது, தவறு செய்து குற்றவாளியாக நிறுத்தப்பட்டிருக்கும் ஒற்றை மனிதனின் வாக்குமூலமாக மட்டும் தொனிக்கவில்லை.

வலி மிகுந்த வாழ்வின் தனிப்பட்ட அழுத்தமும் அதனை மீறி தனக்கென ஓர் அடையாளத்தை எட்டிவிடலாம், இழந்தவற்றையெல்லாம் மீட்டுவிடலாம் என்கிற எளிய கனவும் ஒரு புள்ளியில் எதிரெதிரே மோதும்போது சமூகத்தில் அதற்குரிய தகுந்த இடமில்லாமல் சிறு பிசகு ஏற்படும்பட்சத்தில் அனைத்தும் சர்வ நாசம் அடைந்துவிடும் என்பதும் உண்மையே. அதற்கு ஹோசைன் சப்ஸியனின் வாழ்வும் வழக்கும் ஓர் உதாரணமாக திரையில் மெல்ல விரிந்தபடி இருப்பதை ஒட்டுமொத்த வழக்காடு மன்றமும் நீதிபதியும் குற்றம் சுமத்தியவர்களும் இவற்றைப் படம்பிடித்துக்கொண்டிருக்கும் இயக்குனர் அப்பாஸ் கியாராஸ்தமியின் காமிரா கண்ணும் பார்த்துக்கொண்டிருக்கிறது. அதனால், பின்னர் நாமும் அதனைப் பார்த்துவிடுகிறோம்.

ஒரு நிஜத்திற்கும் போலச் செய்தலுக்கும் இடையே உள்ள மெல்லிய கோட்டை நிரடிப் பார்த்து உணர்ந்துகொள்வதற்கான சந்தர்ப்பங்கள் மிகவும் அபூர்வம்தான். அதனை சினிமா சாத்தியப்படுத்துகின்றது என்பது பல உதாரணங்களைக் கடந்த நூற்றாண்டு சாட்சியமாகும். தொழிநுட்பம் நம் கையில் ஒரு கருவியை மட்டுமே தரமுடியும். அதன் வடிவம் ஒவ்வொரு காலக்கட்டத்திற்கும் வெவ்வேறாகவும் இருக்கும். ஆனால், கலை மனமும் சமூக அரசியல் நுண்ணறிவும் உள்ள கலைஞன் மட்டுமே அதனூடே ஒரு படைப்பூக்க கண்டடைதலுடன் மேல்மட்டத்திற்கு சுமந்துவந்து நிற்கிறான். அப்போது அது அனைவருக்குமான தவிர்க்கவியலா ஆவணமாய் உருமாற்றம் அடைந்துவிடுகின்றது. படைப்பாளிகளின் பொறுப்புணர்ச்சி தனக்குரிய தனிப்பட்ட அடையாளத்திற்கான தேடலையும் கடந்து முகிழும்போது அது வேறொரு பரிணாம எழுச்சியைத் தொட்டுவிடுகின்றது. அதுவே Close-Up என்கிற ஆவணப் புனைவு (Doc Fiction) சினிமாவில் வெளிப்பட்டுள்ளது.

முன்னதாக, இயக்குனர் அப்பாஸ் கியாராஸ்தமி ஹோசைன் சப்ஸியனிடம் கேமராவைப் பற்றி அவற்றின் இயங்கும்விதம் பற்றி சிறிய அறிமுகம் செய்கிறார். அவனுக்கு அது தெரிந்திருக்கவில்லை. க்ளோஸ்-அப் என்றால் என்ன தெரியுமா என்று கேட்கும்போது தெரியாது என்கிறான். 'இங்கே இரண்டு கேமராக்களை அமைத்திருக்கிறோம். ஒன்று ஒட்டுமொத்த வழக்காடு மன்றத்தையும் அனைவரையும் சேர்த்து படம்பிடித்து காண்பிக்கும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கேமரா க்ளோஸ்-அப்பில் அதாவது மிக நெருக்கமாக முகத்தைப் படம்பிடிக்கும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது. எனவே நீ சொல்ல நினைப்பத்தை க்ளோஸ்-அப்பாக்க அமைக்கப்பட்ட கேமரா இருக்கும் திசையைப் பார்த்து சொல்லலாம்' என்கிறார்.

அதனைப் புரிந்துகொண்ட ஹோசைன் சப்ஸியன் தலையசைக்கிறான். அதிலிருந்து அவன் தன்தரப்பின் பெரும்பகுதிகளைச் சொல்லும்போது அது க்ளோஸ்-அப்பில் தன்னுடைய முகத்தைக் காட்டும் என்கிற அறிவுடன் பேசுகிறான். அது அசலாகவும் பதிவாகிக்கொண்டே இருக்கிறது.

ஆனால், அவனும் அறிந்திடாத க்ளோஸ்-அப்பின் முக்கியத்துவத்தை அப்பாஸ் கியாராஸ்தமி தன் அனுபவத்தில் எப்படி பயன்படுத்துகிறார் என்பதற்கு இத்திரைப்படத்தில் பல உதாரண க்ளோஸ்-அப்கள் உள்ளன. ஹோசைன்

சப்ஸியனின் அம்மா பின்வரிசையிலிருந்து அவனுடைய வாழ்க்கை அமைந்த விதத்தையும் அவன் எப்பேற்பட்ட மகன் என்பதையும் சொல்லும்போது பதிவாகியுள்ள அவனுடைய முகபாவங்கள் நம்மை என்னவோ செய்கின்றன. சினிமா நடிப்பு குறித்த நல்ல பிரக்ஞை உள்ள மனிதன்தான் ஹோஸைன் சப்ஸியன் என்பதையும் நாம் நினைவில் வைத்துக்கொண்டேமேயானால் அந்தக் குறிப்பிட்ட முகபாவங்களின் மீது நமக்கு எழுகின்ற பிரதியுணர்வுகள் வகைப்படுத்த முடியாதவை என்றும் சொல்லலாம்.

ஓர் இயக்குனரின் முன்தீர்மானங்கள் சிதைந்துபோகின்ற தருணத்தை இவ்விதமான கலைவடிவங்கள் உருவாக்குகின்றன. சினிமா போன்ற நிகழ்த்து கலைவடிவங்கள் முடிவில்லா திசையை நோக்கி இன்றும் அசலான படைப்பாளிகளை செலுத்திக்கொண்டிருப்பதற்கான சீரிய காரணங்களில் ஒன்று அதுவாகவும் இருக்கலாம். இவற்றைக் குறித்து பின்னர் அந்தந்தக் காலக்கட்டத்தின் உலகத்தரம் வாய்ந்த விமர்சன ஜாம்பவான்கள் ஆங்காங்கே பதிவு செய்வதிலிருந்து நாம் அறிந்துகொள்ளவும் முடிகின்றது. ஒரு படைப்பு, தாம் உருவாகிய காலத்தை ஊடுருவி தமக்கென ஒரு பிரத்யேக ராஜபாட்டையை போட்டுக்கொள்ள முடிகிறதென்றால் அதன் படைப்பு மனம் கொண்ட கர்த்தாவுமே கூட அக்கணம் வெறும் சாட்சியாக மாறிவிடுகின்ற விந்தையின் விளைவே அது எனலாம்.

ஹோஸைன் சப்ஸியனின் வாக்குமூலத்தில் நீரோட்டமாக வெளிப்பட்டிருக்கின்ற அரசியல் எதார்த்தத்தை நாம் உள்வாங்கிக்கொள்ள வேண்டிய அவசியம் நமக்கிருக்கிறது. அந்த ஒட்டுமொத்த வழக்காடு மன்ற அறையுமே சமூகச் சூழலுக்கான ஒரு மினியேச்சர் எடுத்துக்காட்டாக வடிவங் கொண்டுள்ளதைப் போன்றுள்ளது. இங்கே, சமூகக் கட்டமைப்பினில் பொருளாதார நிலைப்பாட்டின்பால் உருவாகின்ற ஏற்றத்தாழ்வு பேதங்களும், ஒரு சாமானியனின் அகவுணர்வில் வெளிப்படுகின்ற சின்னஞ்சிறிய தீர்மானங்களின் பின்னிருந்து இயங்குகின்ற இயலாமைகளும் அதற்குரிய தற்காலிக தீர்வாக அவன் எடுக்கின்ற நிலைப்பட்டினில் உள்ள குற்ற வாசமும் அசாத்தியமான உளவியல் சரடுகளைப் பிணைத்துள்ளது.

ஹோஸைன் சப்ஸியன் தன்னுடைய வாக்குமூலத்தில் இப்படிச் சொல்லுகிறான் 'அவர்கள் என்னை மோஷென் மக்மல்பஃப் என்று நினைத்து நடத்திய விதம் எனக்குப் பிடித்திருந்தது. ஓர் இயக்குனராக, அதன் பிரபல்யத்தனத்தை என்னால் தற்காலிகமாக அனுபவிக்க முடிந்ததை ரசித்தேன். அசலான நானாக ஹோஸைன் சப்ஸியனாக என்னுடைய எளிய வாழ்க்கைக்கு திரும்புகின்ற ஒவ்வொரு நாளும் எனக்கு வேதனையாக இருந்தது. விடிந்ததும் மீண்டும் மோஷென் மக்மல்பஃபாக பிறப்பெடுத்து வாழத் தொடங்கினேன். அவர்கள் உடைமைகளை கொள்ளையடிக்கும் நோக்கம் என்னிடமில்லை' இதுதான் அவன் சொல்லுவதின் சாராம்சத்தின் மையப்பொருள். இக்கூற்று ஆழ்ந்த உளவியல் அடிப்படையைக் கொண்டுள்ளது.

ஹோஸைன் சப்ஸியன், அதன் தொடர்ச்சியில் முக்கியமான ஒன்றைக் கூறுகிறான். தான் சிறைச்சாலையில் இருக்கும்போது ஒவ்வொரு நாளும் குர்ஆனில் சொல்லப்பட்ட ஒரு வாக்கியத்தை மீண்டும் மீண்டும் நினைவுப்படுத்திக்கொண்டே இருந்தேன். 'பெருந்துயரை அடையும்போது இடையறாமல் அல்லாஹ்வின் பெயரை உச்சரித்துக்கொண்டே இரு. உன்னை



மகிழ்விக்கும் ஆறுதல் உன் இதயத்தை வந்தடையும்'

'ஆனால், என்னால் எவ்வித ஆறுதலையும் உணர முடியவில்லை. எப்போதெல்லாம் எனக்குள்ளே மன அழுத்தம் உருவாகிறதோ அப்போதெல்லாம் இந்த உலகை நோக்கி உரக்கக் கத்தத் தோன்றும். என் ஆன்மாவின் வேதனை, நான் அனுபவித்த வலி, என்னுடைய அனைத்து துயரங்கள் என்று எதனையும் கேட்பதற்கு யாருமே தயாராக இல்லை. அப்போது ஒரு நல்ல மனிதன் வந்து இவற்றையெல்லாம் எனக்காகவே தன் படங்களில் சொல்லியதைப் போல இருந்தது. அதனால் அவருடைய படங்களைத் தொடர்ந்து மீண்டும் மீண்டும் போய் பார்த்தேன். அப்படங்கள், சமூகத்தில் மற்றவர்களின் வாழ்வை தாமே வாழ்கின்ற சாத்தான்களின் முகங்களைத் தோலுரித்துக் காட்டின. பணக்காரர்கள் என்றென்றைக்குமே ஏழைகளின் எளிமையான தேவைகளைக் கூட கண்டுகொள்வதில்லை. அதனால்தான் The Cyclist திரைக்கதைக்குள் எனக்கான மகிழ்ச்சி இருப்பதாக உணர்ந்தேன். அதனைப் பலமுறை வாசித்துக்கொண்டே இருந்தேன். அது எனக்கு மன அமைதியைத் தந்தது.'

திரு. அஹான்காவிடம் நீதிபதி இறுதியாக ஒரு கேள்வியைக் கேட்கிறார். 'இதற்கு முன் வேறெந்த குற்ற அடிப்படைகளும் இல்லாத ஹோஸைன் சப்ஸியன் தனது தவறை ஒத்துக்கொள்வதோடு அல்லாமல் மேற்கொண்டு இதுபோன்ற தவறுகளை செய்ய மாட்டேன் என்றும் ஒப்புதல் கூறுகிறார். கருணையின் அடிப்படையில் நீங்கள் மன்னித்துவிட தயாரா?'

திரு. அஹான்கா சொல்கிறார் 'அதில் எனக்கு சம்மதம்தான். ஆனால், அதற்கான முடிவை என் மகன்தான் சொல்ல வேண்டும். அவன்தான் ஹோஸைன் சப்ஸியனுடன் நடிப்பிற்கான ஒப்பந்தம் செய்துகொண்டது'.

பாதிக்கப்பட்ட மகன் சொல்லுகிறான் 'இது வெறும் ஒரு புகாரோ வழக்காடலோ அல்ல, சமூகப் பிரச்சனையும் இதில் உள்ளது என்பதை நாம் அனைவரும் அறிகிறோம். வேலையின்மை என்பது ஊழலுக்கு வழிவகுக்கும் என்பதனாலும் ஹோஸைன் சப்ஸியன் மனம் திருந்தி முறையான ஒரு வேலையைத் தேடிக்கொள்ள வேண்டும் என்றும் இந்த சமூகத்திற்கான ஒரு நல்ல மனிதனாக வாழவேண்டும் என்றும் விரும்புகிறேன். அதனால் வழக்கிற்கான புகாரைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்'.

அதனைத் தொடர்ந்து நீதிமன்றம் ஹோஸைன் சப்ஸியனியை வழக்கிலிருந்து விடுவிக்கின்றது. இதிலுள்ள மனித மனங்களில் உள்ள அடுக்குகளை கேமரா அமைதியாகப் படம்பிடித்துக் கொண்டிருக்கிறது. அதனை நாம் உலகின் வெவ்வேறு மூலைகளிலிருந்து பார்த்துக்கொண்டிருக்கிறோம். அப்படித்தான் ஓர் ஆவணம் நமக்குக் கிடைத்திருக்கிறது.

இயக்குனர் அப்பாஸ் கியாராஸ்தமியின் க்ளோஸ்-அப் ஷாட்கள் படம்பிடித்திருக்கும் ஒவ்வொரு முகங்களும் நம் காதில் விழுகின்ற அவ்வழக்காற்றின் வாதங்கள், வாக்குமூலங்கள் என விதவிதமான சொல்லாடல்களில் வெளிப்படுகின்ற விஷய கனங்களுக்கு ஏற்ப வினையாற்றும் முகபாவங்களைக் காட்டுகின்றன.

விடுவிக்கப்படுகின்ற ஹோஸைன் சப்ஸியனை சிறை வளாகத்திற்கு வெளிப்புறம் சாலையோரமாக ஒரு மனிதர் எதிர்கொள்கிறார். அவர்தான் நிஜமான மோஷென் மக்மல்பஃப். அவரை அடையாளம் கண்டதும் அவருடைய தோளில் சாய்ந்து குழந்தையைப் போல அழுகிறான். இருவரின் உரையாடல்களும் நமக்கு தொடர்பற்று விட்டுவிட்டுக் கேட்கின்றன. அது ஓர் ஏற்பாடு.

தொலைவில் ஒரு வேனிலிருந்து இவற்றைப் படம்பிடித்துக் கொண்டிருக்கிறது இயக்குனர் அப்பாஸ் கியாராஸ்தமியின் குழு. அக்குழுவின் உரையாடல்களும் நமக்கு கேட்கின்றன. மோஷென் மக்மல்பஃபிடம் பொருத்தப்பட்டுள்ள வயர்லஸ் சவுண்ட் கார்ட் மிகவும் பழைய சாதனம். அது சரிவர வேலை செய்யவில்லை. அதனால் அவர்களின் உரையாடல் தொடர்ச்சியில்லாமல் இருக்கின்றது. அதிலொன்றில் மக்மல்பஃப் சொல்லுகிறார் 'நானே அவ்வப்போது மக்மல்பஃபாக இருக்க முடிந்ததில்லை'. அந்த வசனம் வெறுமனே ஹோஸைன் சப்ஸியனுக்கு ஆறுதலாக அல்லாமல் அர்த்தம் பொதிந்த ஒன்றாகவும் கூர்மையாகவும் ஆழமாகவும் உள்ளது.

மக்மல்பஃப் தன்னுடைய மோட்டார் பைக்கில் சப்ஸியனை ஏற்றிக்கொண்டு அவன் கேட்டுக்கொண்டதற்கு ஏற்ப திரு. அஹான்காவின் வீட்டிற்கு அழைத்துப் போகிறார். போகும் வழியில் ஒரு மலர்ச்செடியை வாங்குகிறான். கையிலிருக்கும் பணம் போதாமல் மக்மல்பஃப் அவனுக்கு மிச்சக் காசைக் கொடுக்கிறார். 'பணம் கவனம்' என்கிறார். ஒரு நண்பனைப் போல ஓர் உதவியாளனுக்கு உற்ற வழிக்காட்டியைப் போல அவனுக்கு அவர் உதவுகிறார். அவர்களின் மோட்டார் பைக் பயணம் தொடர்கிறது. அப்பயணம் அப்பாஸ் கியாராஸ்தமியின் வேனின் ரியர்-வியூ கண்ணாடியில் காட்டப்படுகின்றது.

ஒரு கணம் இந்தப் படத்தில் எது நிஜம் எது சினிமா என்கிற குழப்பத்திற்குள் நாம் மெல்லப் போய்வந்தபடி இருக்கிறோம்.

முதன்முதலாக ஹோஸைன் சப்ஸியனியை சிறைக்குள் போய் படம்பிடித்தது, பின்னர் நீதிமன்றத்தில் நடந்த வழக்கின் படப்பிடிப்பு, அதன் பின்னர் சிறையிலிருந்து விடுதலையாகி வருகின்ற ஹோஸைன் சப்ஸியனை மோஷென் மக்மல்பஃப் சந்திப்பது (அது சப்ஸியனுக்கே தெரியாது) இவை மட்டுமே அசலானவை. மற்றபடி இதில் சம்பந்தப்பட்ட திரு. அஹான்காவின் குடும்ப உறுப்பினர்கள் அத்தனைப் பேரும், பத்திரிகையாளர் ஃபராஸ்மாண்ட் உட்பட ஏற்கனவே நடந்தவைகளை இத்திரைப்படத்திற்காக மீண்டுமொரு முறை நிகழ்த்திக்காட்ட சம்மதித்து நடித்திருக்கிறார்கள்.

ஹோஸைன் சப்ஸியன் மட்டுமே தன் நிஜமான கதாபாத்திரத்தை தானே ஏற்றதின் வழியே இம்முறை நிஜ நடிகனாகப் பரிமாணம் அடைந்திருக்கிறான். இவ்வகையில்தான் Close-Up திரைப்படம் சினிமா உலகிற்கு காணக் கிடைக்கின்றது.

இந்தப் படம் 1990-ல் இரானில் வெளியான சமயத்தில் அதற்கான சினிமா மதிப்புரைகள் மெச்சும்படியாக இல்லை. ஆனால், வெளிநாடுகளில் திரையிடப்பட்ட பிறகுதான் அது கவனம் பெற்றது. அப்போது 'த நியு யார்க் டைம்ஸ்' பத்திரிகையின் சினிமா விமர்சகரான ஸ்டீஃபன் ஹோல்டன் Close-Up திரைப்படத்தை 'முழுமையான சினிமாத்தன பாணியை பின்பற்றாத ஈர்ப்பற்ற அதன் தன்மை எது நிஜம்? எது மறுகட்டமைக்கப்பட்டுள்ளது? என்கிற மங்கலானத் தன்மைக்கு உதவியுள்ளது'



எனச் சொல்லியபடி 'பிரிலியண்ட்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

சமீபமாக 2022-ல் கூட British Film Institute-ன் விமர்சன வாக்கெடுப்பில், எக்காலத்திற்குமான தலைசிறந்த 50 படங்கள் என்கிற வரிசையில் Close-Up திரைப்படத்திற்கு 17வது இடம் தரப்பட்டுள்ளது.

இவ்வாறாக நிஜத்தையும் சினிமாவையும் கோடு பிரித்துக் காட்டும் எல்லையை தம் கலைநோக்கில் சரியாகக் கையாளத் தெரிந்த இயக்குனர் அப்பாஸ் கியாராஸ்தமியின் பெரும்புகழ் இன்றளவும் உலகம் முழுவதுமுள்ள அனைத்து சினிமா கலைஞர்களின் உள்ளத்திலும் மரியாதைக்குரிய இடத்தைப் பெற்றுத் தந்துள்ளது.

ஹோஸைன் சப்ஸியன் இயக்குனர் அப்பாஸ் கியாராஸ்தமியிடம் உதவியாளராகப் பணியாற்றினான். அதன் பின்னர் 1996-ல் Close-Up Long shot என்னும் ஓர் ஆவணப்படத்தில் ஹோஸைன் சப்ஸியன் நடித்தான். அதில் சினிமாவைப் பற்றிய தன்னுடைய அனுபவங்களை அவன் பகிர்ந்துகொண்டான். ஆறு வருட வாழ்க்கையின் முன்னும் பின்னுமான அவனுடைய எண்ணவோட்டத்தை பதிவு செய்ததன் வழியே நாம் வேறு தீர்மானங்களுக்கு வர இயலும். வாழ்வின் எதார்த்த நசிவை அனுபவங்களைக் கொண்டே நம்மால் அளந்து பார்க்க முடியும் என்பதற்கு Close-Up Long shot ஆவணப்படம் சாட்சியாக உள்ளது.

2006-ல் தன்னுடைய ஐம்பத்தியிரண்டாவது வயதில் ஆகஸ்ட் மாதத்தின் ஒரு நாளில் திடீர் மாரடைப்பு ஏற்பட்டு கோமாவிற்குள் போய்விட்ட ஹோஸைன் சப்ஸியன் செப்டெம்பர் மாத இறுதியில் இறந்துவிட்டார்.


உலகத்தரம் வாய்ந்த ஒரு சினிமாவின் தாக்கம் என்பது மானுட வாழ்வின் வெவ்வேறு பரிமாணங்களில் என்னென்ன வினையாற்றிடக் கூடும் என்பதற்கு இயக்குனர் அப்பாஸ் கியாராஸ்தமியின் Close-Up திரைப்படம் முக்கியமான உதாரணமாக உள்ளது.

இயக்குனர் அப்பாஸ் கியாராஸ்தமி 2016-ம் ஆண்டு தன்னுடைய 76வது வயதில் ஃபிரான்ஸில் காலமானார்.

இயக்குனர் மோஷென் மக்மல்பஃப் இந்த வருடம் 2024 மே 29-ல் தன்னுடைய 67வது வயதைப் பூர்த்தி செய்து இன்னும் தன்னுடைய கலைப் பயணத்தைத் தொடர்ந்தபடி இருக்கிறார். 2023-ல் Talking with Rivers என்கிற ஐம்பது நிமிட படம் அவருடைய இயக்கத்தில் வெளியாகி பரவலான கவனத்தைப் பெற்றுள்ளது.

காலம் எவருக்காகவும் காத்திருப்பதில்லை. எவரெல்லாம் தத்தம் தேவைக் கருதி அவற்றை தனக்கே உரிய பாணியில் கைப்பற்றிக்கொள்கிறார்களோ அவர்களோடு சற்றைத் தொலைவிற்கு ஓர் உற்ற தோழனைப் போல உடன் பயணிக்கவும் கலை என்கிற அம்சம் பயன்படுகிறது.

elangomib@gmail.com ■



சிறுகதை

இ.தியாகலிங்கம்

கிளிக்

சிறைக்குள் அடைத்து புலியைக் காவலுக்கு வைத்ததாக இருந்தது எனது வாழ்க்கை. உள்ளேயும் வாழமுடியாது, வெளியேயும் போகமுடியாது. இரண்டு வழிகளும் அடைக்கப்பட்டபோது மூன்றாவது வழி தேடுவது இறுதி முடிவாகியது. மூன்றாவது வழி எப்படிச் சாத்தியமாகும் என்று யோசித்தேன். அதன் பின்பு ரமணனும் சுபத்திராவும் என்ன ஆவார்கள்? அப்படி ஒரு வழியைத் தேடிக்கொள்ளாவிட்டாலும் அவர்கள் என்ன ஆவார்கள்? இனி இந்த அவமானத்தோடு வாழ்வது நித்தமும் தூக்கு மேடைக்குச் செல்லும் மனநிலையைத் தரும். அதுகூட போராளி ஒருவனுக்கு பெருமையாக இருக்கும். எனக்கு? மாறாத சிறுமை. மரணமே தீர்த்து வைக்கும் பிரச்சினை இது. ஆனால் அது எப்படிச் சாத்தியமாகும்? எப்படியாவது சாத்தியமாக வேண்டும். எதையாவது செய்ய வேண்டும். மரணம் என் கையில் இல்லை. இருந்தும் வாழ்வை முடித்துக்கொள்வது பற்றி நான் முடிவு செய்யலாம்.

அதற்கு மேல் ஓய்ந்திருக்க முடியவில்லை. எனது அலமாரியை அவசரத்தோடு காகம் கிண்டுவது போலக் கிண்டினேன். பிறந்தநாள், நத்தார், புது வருடப் பிறப்பு போன்ற கொண்டாட்டங்களுக்கு என் விருப்பப்படி பரிசுப் பொருட்கள் வாங்குவதற்கு ரமணன் எனக்குப் பணமாகக் கொடுப்பது வழக்கம். ரமணன் கொடுக்கும் பரிசு, வாங்குபவர் மனதை முழுமையாக வசீகரிக்க வேண்டும் என்பது அவர் எண்ணம். அந்தப் பணத்தை முழுமையாகச் செலவழித்து விடுவதில்லை. அதில் சேர்த்த 'சொச்சப்' பணம் நான்காயிரம் மிச்சமாக இருந்தது. அதைவிடக் கைச்செலவிற்குத் தந்த பணத்திலும் மிச்சமிருப்பது தெரியும். இரண்டையும் வழித்து எடுத்தால் நினைத்ததைச் செய்து முடிக்கலாம் என்று எண்ணினேன்.

என் முடிவை எண்ண கைகள் நடுங்கின. மனது பதறியது. மயக்கம் வருவதாகப் பயம் கொப்பளித்தது. இதைவிட வாழ்வது அவஸ்தையானது என்பது எனக்குத் தெளிவானபோது இவற்றை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளாது எழுந்தேன்.

எதுவென்றாலும் சுலபமான வழியே பிடிக்கும். இதிலும் என் தெரிவு அப்படியே. நினைத்ததைச் செயலாக்க அந்த தெருவிற்குப் போயிருந்தேன். யாரும் அச்சமின்றி

உலாவ முடியாத தெரு. இருந்தும் அங்கேதான் நினைத்த பொருளை வாங்க முடியும். 'Xanax' பற்றி ஏற்கனவே கேள்விப்பட்டிருந்தேன். அதை எடுப்பது ஆபத்து என்று காவல்கூட எச்சரிக்கை செய்திருந்தது. அதுவே இன்று எனக்கு அவசியமாகியது. அறிந்திருந்த கடைக்கு முன்னே நின்றிருந்த ஒருவனிடம் சென்று, பொருள் வேண்டும் என்று கேட்டேன். அவனுக்கு நம்பிக்கை வரவில்லை. பேசாது கடைக்குள் புயலாகச் சென்றுவிட்டான். போதைப் பொருளிற்கு அடிமையானவர்களின் தோற்றம் சுருங்கிய பழம் போல இருக்கும். என் தோற்றம் அன்று பறித்த பழமாக... பெண்ணின் முனைப்பும், வனப்பும் துருத்தும் கோலமாக... திரும்பிப் போய்விடுவோமா என்று யோசித்தேன். எதற்கும் கடைசியாக ஒருமுறை முயன்றுவிட்டுப் போவதான முடிவோடு, மீண்டும் அருகே சென்று, மசிந்த வண்ணம், இரகசியமான குரலில் 'எனக்கு Xanax அவசரமாக, அவசியமாக வேண்டும்' என்றேன். தலையை ஆட்டிய வண்ணம் 'பணம் இருக்கிறதா?' என்று கேட்டான். பதிலுக்குத் தலையை ஆட்ட, எத்தனை ஆயிரங்கள் என்று அவன் விரல்களைக் காட்டினான். அவன் பார்வையின் கண்டிப்பு என்னை உறைய வைத்தது. இருந்தும் துணிவோடு மூன்று அளவு என்று விரல்களைக் காட்டிவிட்டு, அவசரத்தோடு, இரகசியமாக அவன் கைக்குள் தாள்களைத் திணித்தேன். 'tre?' (மூன்றா?) அதிர்ச்சியோடு, அவநம்பிக்கையோடு பார்த்தான். 'Den er veldig sterk' (இது மிகவும் வீரியமானது) என்றவன், இதற்குமேல் உன் பிரச்சனை என்பது போலச் சுற்றுப்புறத்தை ஒரு முறை தனது கண்களால் அலசிவிட்டு கடைக்குப் பின்னால் சென்றான். அதன் பின்பு ஆளைக் காணவில்லை, பணம் தொலைந்ததோ என்று எண்ணிப் பதட்டமாகினேன். மனதும் உடலும் சோர்ந்து போயிற்று. இனி அந்தத் தொகையைத் திரட்டி, இன்னொருவனைக் கண்டுபிடித்து...

ஐந்து நிமிடம் பார்க்கலாம், இல்லை என்றால் வீட்டிற்குச் செல்லலாம் என்று முடிவு செய்துகொண்டேன். அந்த முடிவின் மூன்றாவது நிமிடம் வித்தைக்காரன் போல வேறு ஒரு தெரு வழியாகக் கடையை நோக்கி அவசரமாக வந்தான். சட்டென என் கைக்குள் பொத்திப் பொருளை வைத்தவன் தொடர்ந்து எங்கோ சென்றான்.

வீட்டிற்குத் திரும்பி வரும்போது இன்று என் இவ்வுலக வாழ்வின் இறுதி நாள் என்று எண்ணியதில் என்னைக் கட்டுப்படுத்த முடியாது வெடித்தேன். கண்ணீர் கடைக்கண்ணால் கட்டுப்பாடு இல்லாது உருண்டது. அவசரமாக அதைத் துடைத்துக்கொண்டேன். வரும் வழியில் 'Mac Donald'-இற்குச் சென்று எனது கடைசி உணவைச் உண்டேன். இந்த உணவு, நான் என்று வாழ்ந்த இந்த உடல், நாளை மண்ணிற்கு என்று எண்ண எனக்கு மீண்டும் அழுகை வந்தது. வீட்டிற்கு வந்ததும் அப்பாவின் 'Vodka' புட்டி ஒன்றையும் எடுத்துக் கொண்டேன்.

★

அம்மா காலில் விழுந்து மன்றாடியும் ரமணனும் திருமுருகன் மாமாவும் சுத்தியலோடு புறப்பட்டு நின்றார்கள். அதுவும் ரமணன் மண்டை கழன்றவர் போல நின்றார். காவலில் முறையிடுமாறு சுபத்திரா மன்றாடினார். காவல் வழமை போல இதையும் கிடப்பில் போட்டுவிடும் என்பதில் ரமணன் பிடியாக நின்றார். இறுதியாக சுபத்திராவை புறங்கையால் விலக்கிவிட்டு அவர்கள் வீர புருசர்களாகச் சென்றார்கள். நான் பேச்சுரிமை பறிக்கப்பட்டவளாக, வாய் திறவாது நின்றேன்.

★

அன்று ரமணனும் சுபத்திராவும்

வெளியே சென்றுவிட்டார்கள். குளியலறைக்குச் சென்ற எனக்கு எப்போதும் கிடைக்காத சுதந்திரம் இப்போது கிடைத்ததான கொண்டாட்டம். என்னை நான் பார்க்க வேண்டும் என்கின்ற ஓர் அடங்காத ஆசை. குளிக்கும்போது, ஆடை மாற்றும் போது, பார்த்திருந்தாலும் அடங்காது தொடரும் அந்த ஆசை. நான் எனது மேலாடைகளை முதலில் களைந்தேன். எனது வெளிறிய மெது மெதுப்பான அங்கங்கள் என்னைப் பார்த்து முறைத்தன. அமுது தருமிடம் கண்கள் போலத் தோன்ற எனக்குள் வெட்கம் பிறந்தது. அது மேலும் மேலும் தன்னைப் பார் என்றது. பார்க்கப் பார்க்க மேலும் மோகம் உண்டாகியது. நான் மொத்தமாகக் களைந்தேன், என் உடலின் அத்தனை செருக்கலையும் வைத்த கண் வாங்காது பார்த்தேன். அத்தோடு என் ஆசை அடங்கவில்லை. திறன் பேசியை எடுத்துப் பல 'கிளிக்' செய்தேன். பின்பு அதைப் பார்த்து 'எவ்வளவு வாளிப்பான உடம்பு' என்று மாய்ந்து மாய்ந்து இரசித்தேன்.

★

சக மாணவன் 'ஸ்தீயான்' ஒரு தொடரி அனுப்பி இருந்தான். அவனே எங்கள் வகுப்பில் கணினியில் மேதை. ஆர்வத்துடன் அந்தத் தொடரியை 'கிளிக்' செய்தேன். எதுவும் நடக்கவில்லை. 'என்ன மேதாவித்தனமோ?' என்று எண்ணிய நான் அதைப் பின்பு மறந்து போய்விட்டேன்.

★

ரமணனும் திருமுருகனும் ஸ்தியானை உதைபந்தாட்ட மைதானத்தில் கண்டார்கள். இவர்களைக்கண்டதும் தனது திறன்பேசியை எடுத்துக் கொண்டு அவன் நழுவ முயன்றான். ரமணன் பாய்ந்து அவன் திறன்பேசியைப் பற்றி நிலத்தில் போட்டு, கொண்டு வந்த சுத்தியலால் சிதறடித்தான்.

விறைத்துப் போய் நின்ற ஸ்தியானைப் பார்த்து, '*Om det skjer igjen, samme skjer til din hodet*' (இன்னுமொருமுறை நடந்தால், இப்படித்தான் உன் தலையும் நொறுங்கும்) என்று கூறிவிட்டு இருவரும் கோபமாக நகர்ந்தார்கள்.

★

ஸ்தீயான் என்ன செய்தான்?

நான் மேற்கொண்டு என்ன செய்திருப்பேன்?

பின்பு எப்படி உயிர் பிழைத்து இந்தக் கதையை உங்களுக்குச் சொல்கிறேன்?

அவை உங்கள் கற்பனைக்கு...

★

என் அனுபவம் திறன்பேசியில் இரகசியம் என்று நினைத்துப் பாதுகாக்கப்படுபவை ஒரு 'கிளிக்' இல் யார் யாரோ பார்வைக்கு விருந்தாகலாம் என்பதே. நம்புங்கள் இதை. நான் மன்றாடிக் கேட்கிறேன்.

★

இரண்டு நாட்கள் கழித்து ஸ்தியான் என்னைப் பார்த்து மன்னிப்பு கேட்டான். இதுவரை என்னைப் பார்த்துச் சிரித்த மாணவர்கள், முன்னர் போல் வழமைக்குத் திரும்பி இருந்தனர். அவர்கள் முகத்தில் ஒருவித பரிதாபம், பொறுப்பு, குற்ற உணர்வு... ஏதோ ஒன்று. அது எனக்கு இப்போது முக்கியமற்றது.

★

ரமணனும், சுபத்திராவும் நான் தேறிவிட்டேன் என்று நிம்மதி கொள்கின்றனர். என் வாழ்க்கை வழமைக்குத் திரும்புமா என்பதை என் ஆழ் மனதே முடிவு செய்ய வேண்டும். நான் யாரிடம் உதவி கேட்பது என்று யோசித்துக்கொண்டு இருக்கிறேன்.

ratnamt67@gmail.com ■



கவிதை
ஆர். வத்ஸலா

இல்லை

சொல்லி விட்டேன்
அவனிடம்
உன்னிடம் காதலில்லை
எனக்கென்று

சொல்லி விட்டேன்
குடும்பத்தினரிடம்
உயிர்த் தோழிகளிடம்
என்மேல் அக்கறை கொண்ட தோழரிடம்
நிம்மதியுற்றனர்
எல்லோரும்

அவனை எனக்கு பிடித்திருந்தது
பல் வரிசை சற்று அழகு
அன்பாகப் பேசுவான்
அவ்வளவுதான்

சொல்லி விட்டேன்
எல்லோரிடமும்

சொல்லிக் கொண்டேயிருக்கிறேன்
என்னிடம்

vatsala06@gmail.com ■



கவிதை
கனகா பாலன்

பென்சில் கோடென நினைத்துத்தான்
அழி ரப்பரோடு அருகில் சென்றேன்

மூன்று மில்லி மீட்டர்
ஆழமேயான
வறண்ட நதியாக
கீறல் கொண்டிருந்தது சுவர்

சன்னலின் அடிமூலையிலிருந்து
வளைந்து நெளிந்து
தரைக்குச் சற்று முன்னதாகவே
முடிந்து போயிருந்தது அதன் வளர்ச்சி

முந்தைய நாள் வெட்டுக்காயத்திற்கு
மருத்துவமனை சென்று வந்ததன் விளைவு
குட்டிக்குட்டிப் பிளாஸ்திரிகளோடு
வந்த மகள்
ஒவ்வொன்றாகக் குறுக்குவொட்டிடத் தொடங்கினாள்

வரிசையாக நடைபாதை பாலங்கள்
அந்த நீரற்ற
நீர்பாதையின் மேல்

சற்று விலகியொரு
எறும்பு ஆறு
ஓடிக்கொண்டிருக்கிறது
நானதன் இனிப்புக் கடல்காண
பின்தொடருகிறேன் கண்களால்

vmcaksvini@gmail.com ■



கட்டுரை

ஸ்ரீவில்லிபுத்தூர் எஸ். ரமேஷ்

ரயில்வே பீடர் ரோடு

எல்லாச் சாலைகளும் ரோமாபுரிக்கு இட்டுச்செல்லும்!

(All roads lead to Rome)

ஒரு மனிதனின் மறக்கவியலா பருவம் என்பது பள்ளிப்பருவம்தான் என்பதை நீங்கள் அனைவரும் ஒத்துக்கொள்ளுவீர்கள். நான் படிக்கப்போன பள்ளியும் அங்கு எனக்கு நேரிட்ட அனுபவங்களும் அலையலையாய் இன்னமும் வந்து என் நெஞ்சில் மோதிக்கொண்டிருக்கின்றன. வேறு வெளியூர் சுற்றுப்பயணங்கள் எதையும் மேற்கொள்ளாமல், வெளி உலகம் எவ்வாறு இருக்கிறது என்றுகூடக் காணாமல், கிணற்றுத் தவளை போலவே, இதுவே உலகம் என்று எண்ணியபடி, பன்னிரண்டு ஆண்டுகளாய் ஒரே ஒரு வீதியை மாத்திரம் நான் பார்த்துக்கொண்டிருக்க நேரிட்டது என் விதியின் செயலால்தான் என்று சொல்லுவேன்.

ஒரு வீதி என்பதை ஒரு அசேதன வஸ்துவாக எண்ணி விடாதீர்கள். ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு வீதிக்கும் உயிரோட்டம் உண்டு. வீதிகள் நம்மைப் போலவே உயிர் கொண்டவை. அவை மனிதரைப் போலவே வடிவும், பொலிவும், சுவாசமும், ஓய்வும் கொண்டவை என்று அடியேன் திண்ணமாய் நம்புகிறேன். இதை தயவுசெய்து நம்புங்கள். மதுரையில் உள்ள பழைய திண்டுக்கல் ரோடு என்னும் சாலை மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு இட்டுச்செல்லும் தெருவாகும். இந்த வீதி எந்நாளும் உறங்குவதில்லை. உறங்கா நகரின் உறங்கா வீதி அதுதான் என்பேன்.

விருதுநகர் பேருந்து நிலையத்தின் பின்புறமுள்ள கே.வி. சாலா. நடுநிலைப்பள்ளியின் வாசலிலிருந்து துவங்கும் ரயில்வே பீடர் ரோடு என்ற சாலை நீண்டு, மிக நீண்டு, சுமார் ஒரு மைல் தூரம் நீண்டுசென்று ரயில்வே ஜங்ஷனில் முடிகிறது. "விருதுநகர் சந்திப்பு" என்று மூன்று மொழிகளில் உள்ள ரயில்வே அறிவிப்புப் பலகை சொன்னாலும், பயணச்சீட்டில் அதன் பெயர் "விருதுபட்டி" (VPT) என்றுதான் அச்சிடப்பட்டிருக்கும். அந்த ஊருக்கு மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி வந்தபோது அதே ஜங்ஷனில்தான் இறங்கியிருக்கிறார். அங்கு உள்ள காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களைக் கண்டு உரையாடியிருக்கிறார். அங்கு இருக்கும் தேசபந்து மைதானத்தில் (பொட்டல் திடல்) பொதுமக்களிடம் உரையாற்றியிருக்கிறார். அறுபது ஆண்டுகள் கழிந்தாலும் அந்த ரயில்வே பீடர் ரோட்டில் மட்டும் சாலை செப்பனிடும் பணி செய்யப்பட்டதே இல்லை. என்ன விந்தை?!! காரணம், சாலையைச் செப்பனிடும் தேவை என்பது அதற்கு

ஏற்பட்டதே இல்லை. காமராசர் ஐயா காலத்தில் கமிஷன் பெற்றுக்கொள்ளாமல், சிமென்ட் சாலையாக அந்த ரயில்வே பீடர் ரோடு போடப்பட்டது. அந்த ஒரு சாலை மட்டுமல்ல. அந்த விருதுநகரில் உள்ள பெரும்பான்மையான சாலைகள் சிமென்ட் சாலைகள்தான். அவை இன்றும் காலத்தால் சிறிதளவும் சேதமடையாமலும் பள்ளம், குழிகள் விழாமல், செப்பனிடும் செலவுகளை சர்க்காருக்கு மிச்சம் வைத்திருப்பது ஐயா காமராசரின் புகழுக்கு மேலும் மெருகு சேர்க்கிறது.

காலைப்பொழுதில் மதுரையில் உள்ள அரசு அல்லது தனியார் அலுவலகங்களுக்குச் செல்லும் பணியாளர்கள் கூட்டம் அந்தச் சாலையில் தனித்துத் தென்படும். சீராக, இஸ்திரி போடப்பட்ட உடைகள், நேர்த்தியான பேன்ட்கள், சாப்பாட்டுக் கூடை, "சேகர் சார்! நேத்திக்கு என்ன உங்களைக் காணமே?!" என்றபடி வாடிக்கையான நட்பு விசாரணைப் பேச்சுக்கள். காலை ஏழரைக்கு மதுரை செல்லும் பாசஞ்சர் வண்டி. அதே நேரத்தில் மதுரையிலிருந்து புறப்படும் எதிர் பாசஞ்சர் வண்டி, இரண்டும் சந்திப்பது திருமங்கலத்தில். மதுரைக்காரர்கள் இங்கு வந்து இறங்கி, அதே வீதியில் எதிர்திசையில் நடைபோட, ஓர் அலுவலக நாளின் துவக்கம் அதுதான் என்று சொல்லாமலே புரிந்துவிடும்.

ஒரே கூட்டமாய், சொல்லி வைத்தாற்போல இந்தப் பணியாளர்கள் எப்படித்தான் புறப்படுகிறார்களோ என்ற ஆச்சரியம் எப்போதும் என்னுள்ளே எழும். இரவில் பணி முடிந்து அதே வீதியில், அதே கூட்டம். அதே பேச்சு. அதே சந்தடி. அதே மனிதர்கள். இவர்களில் பல மனிதர்களைப் பார்த்துப் பார்த்து, எனக்கு அந்த முகங்கள் மிகவும் பரிச்சயமாகி விட்டது. நாற்காலியைத் தேய்க்கும் குமாஸ்தாக்கள், கணக்கர்கள், டெஸ்பாட்ச் க்ளார்க்குகள், தட்டச்சர்கள், கேஷியர்கள் என்று அவர்கள் எல்லோருமே இருபதாம் நூற்றாண்டு கண்ட மூளை உழைப்பாளி வர்க்கம். கிட்டத்தட்ட அனைவருமே நடுத்தர வர்க்கம்தான். இவர்கள் தந்த ஆதரவில்தான் அந்த மதுரை - விருதுபட்டி பாசஞ்சர் (விருதுபட்டி – மதுரை) தடையறாது ஓடிக்கொண்டிருந்தது. நிதி ஆண்டின் முடிவில், மார்ச்சு மாதத்தில், 'ட்ரெயின் டே' கொண்டாடப்படுவதும் உண்டு. வருடம் முழுவதும் அனுசரணை காட்டிய ட்ரெயின் ஓட்டுனருக்கு மாலையிட்டு, இனிப்பு வழங்கப்படுவது உண்டு.

இந்த வீதியின் அமைப்பு என்னவென்றால், அது ரயில்வே ஜங்ஷனின் வாசலில் துவங்கி, அது சரிவாக இறங்கிக்கொண்டே செல்கிறது. கே.வி. சாலா பள்ளியின் வாசல் அருகே அந்தச் சரிவு முடிகிறது. எனக்குத் தெரிந்து சிறு வயதில் இதே வீதியில்தான் எல்லா சரக்கு வண்டிகளும் செல்லும். சுட்டெரிக்கும் வெயிலில், கனமான பெரிய மரச்சக்கரங்கள் பொருத்தப்பட்ட சரக்கு வண்டியை சட்டை போடாத கூலியாட்கள், உடம்பெங்கும் வியர்வை மினுமினுத்து ஆறாய் வழிந்தோட, முதலாளியிடம் கூலி வாங்கும் வேகத்தில் செருப்பு கூட போட்டுக்கொள்ளாமல் இழுத்துக்கொண்டு செல்லுவது என் உள்ளத்தைப் பிழிய வைக்கும். அதே வீதியில் பெடல் ரிக்க்ஷாக்களும் நிறைய செல்லுவதுண்டு. காலை ஏழு மணி வாக்கில் மதராசிலிருந்து வந்துசேரும் கொல்லம் மெயிலின் பயணிகள் பலரையும் அள்ளிக்கொண்டு ஊருக்குள் கொண்டுபோய் விடுவது இந்த பெடல் ரிக்க்ஷாக்கள்தான். ஆனால் இந்த ரயில்வே பீடர் ரோட்டில் உள்ள சௌகரியம் என்னவென்றால் அந்தச் சாலையின் சரிவான அமைப்பினாலே பெடலை மிதிக்காமலே ரிக்க்ஷா சாலையில் ஓடிக்கொண்டிருக்கும். இரண்டு பேர் மட்டும் போகக்கூடிய அந்த ரிக்க்ஷா வண்டிக்காரருடன் நடக்கும் வழக்கமான கூலி பேரம். காக்கி அரை டிராயர் அணிந்த அந்த ரிக்க்ஷாக்காரர் ஒரு ரூபாய் கூலி உயர்வுக்காக வாதாடிக்கொண்டிருப்பார்.

எல்லா ஊர்வலங்களும் எங்களுக்குப் பொழுதுபோக்குதான். அடியேன் குடியிருந்த "பதினெட்டு ஸ்டோர்" எனப்படும் வீடுகள் கொண்ட வரிசை வீடு காம்பவுண்டு இதே சாலையில்தான் இருந்தது. ரெட்டை வரிசையாக, ஒவ்வொரு வரிசையிலும் ஒன்பது வீடுகள். க.இ.ச.ச.கு. பாலகிருஷ்ணன் செட்டியார்தான் அந்தக் காம்பவுண்டில் உள்ள ஒன்பது வீடுகளின் உரிமையாளர். கிழக்கு பார்த்த வாசல் கொண்ட அந்தக் காம்பவுண்டில் எல்லாருமே நடுத்தரக் குடும்பம்தான். திரைப்படக் கொட்டகைக்குச் செல்லுவதுதான் ஒரே பொழுதுபோக்கு என்று இருந்த அந்நாளில் எந்த ஒரு சிறிய நிகழ்வும் பொழுதுபோக்காக நோக்கத்தக்கதுதான். எங்கள் காம்பவுண்டை ஒட்டி தொலைபேசி அலுவலகம் இருந்தது. பெரிய மூன்றுமாடிக் கட்டிடம். இரவும் பகலும் ஓய்வு ஒழிவில்லாது இயங்கிக்கொண்டிருக்கும். ட்ரங்கால் பேச இந்த தொலைபேசி இணைப்பகம்தான் வழிசெய்யும். தொலைபேசி ஊழியர்கள் என்.ஃஎப்.பி.டி. (NFPTE) என்ற தொழிற்சங்கத்தில் இருந்தார்கள். மாதந்தோறும் அந்த அலுவலகம் வாசலில் கூட்டம் நடக்கும். ஏதாவது கோரிக்கைகளை வைத்துக்கொண்டு ஊழியர்கள் கைகளை உயர்த்திக்கொண்டு கொள்கை முழக்கமிடுவார்கள். எல்லாமே இடதுசாரி முழக்கங்கள். "என்.ஃஎப்.பி.டி ஜிந்தாபாத்! இன்குலாப் ஜிந்தாபாத்! இன்குலாப் இன்குலாப் இன்குலாப் ஜிந்தாபாத்!" என்று வலது கைகளை உயர்த்தி அவர்கள் மாலை வேளைகளில் கோஷமிடுவார்கள். என்ன கோரிக்கைகள், என்ன போராட்டம் என்று நாங்கள் கேட்காமலேயே அந்தத் தொலைபேசி ஊழியர்கள் கோஷமிட்டு அதைத் தெரிவித்துவிடுவார்கள். சில நேரங்களில் அந்த வீதியில் அனைவரும் காணும்வண்ணம் நிஜ வீதி நாடகங்களும் நடப்பதுண்டு. ஒப்பனை, பின்புலம், இசை, திரைகள் எதுவும் இல்லாமல் நாடகம் போடும் அந்தப் பணியாளர்களின் திறமையைக் கண்டு வியந்திருக்கிறேன். எந்த ஒரு சத்தம் காம்பவுண்டு வாசலில் கேட்டாலும் ஜனக்கூட்டம் அங்கு வாசலில் கூடிவிடும். சாலையில் போவோர் வருவோருக்கெல்லாம் தொலைபேசி ஊழியர்களின் சங்கப் போராட்டம், வேடிக்கை பார்த்துப் பொழுது கழிக்க ஒரு நல்ல வழிதான்.

அந்தச் சாலையில் மேற்கு நோக்கி வாசல் இருந்த "அருள்மிகு கூடலிங்க விலாஸ் லாண்டரி" ஒன்றுதான் அந்த வீதியில் வாழ்வோருக்கு சலவை வேட்டி உடுத்த சேவை செய்துவந்தது. நான் பார்த்த எல்லா நாட்களிலும் அந்தக் கூடலிங்க விலாஸ் லாண்டரியின் உரிமையாளர் ஒரு தடவை கூட புதுச்சட்டை, புது வேட்டி வாங்கியதே கிடையாது. ஆனால் எல்லா நேரங்களிலும் அவர் தூய மல்லிகைப்பூ நிறத்தில் வேட்டி, சட்டை அணிந்து காட்சியளிப்பார். அவரது லாண்டரிக்கு அடுத்து ஒரு பஞ்சு மில்லின் பரந்த முன்புறத் திடல் இருந்தது. எப்போதும் சுண்ணாம்புக்கல் குவியல் குவியலாகக் கொட்டிக் கிடக்கும் அந்த வளாகத்தின் ஒரு மூலையில், சிறிய கட்டிடத்தில் மேற்குப்பக்கம் பார்த்திருந்த வாசல்கொண்ட சிறு சாயாக்கடை ஒன்றை குட்டையன் சின்னையா நடத்தி வந்தார். மில் முதலாளிக்கு மாதா மாதம் தவறாமல் வாடகை தந்துவிடுவார். இந்தக் குட்டையன் சின்னையாவின் கடைக்கு நேர் எதிரே ஒரு முனிசிபல் சத்திரம் இருந்தது. "முனிசிபல் சத்திரம்" என்று தமிழிலும், "Municipal Choultry" என்று ஆங்கிலத்திலும் எழுதப்பட்ட முகப்புகொண்ட அந்தக் கட்டிடம் 1960-களில் கட்டப்பட்டது என்று நினைக்கிறேன். வெளியே இரும்புக்கம்பி கதவு. உள்ளே முன்புறம் விரிந்த அகலமான வெளி. இடது பக்கம் பூங்கா. இந்த வளாகத்தின் பின்புறம்தான் அந்த சத்திரம். கிழக்கு பார்த்த வாசல்கொண்ட இந்த முனிசிபல் சத்திரம் அந்த ரயில்வே பீடர் ரோடின் முக்கிய ஸ்தல அடையாளம். பகலில் பெரும்பாலும் ஒருசில ஆட்களின்

நடமாட்டம் என்று இருக்கும் இந்த ஸ்தலம் அரசுக் கட்டிட வளாகம் என்பதற்கான சகல கல்யாண குணங்களையும் கொண்டிருந்தது. பெரும்பாலும் துப்புரவுப் பணியாளர்களின் வருகை அதிகமாக இருக்கும் இந்த இடத்தில் வீட்டைவிட்டு விரட்டப்பட்ட சகல ஆதரவற்றோரும் அடைக்கலம் கொண்டிருந்தனர்.

இங்குதான் நான் முதன்முதலாக வாடகை சைக்கிள் ஒன்றை எடுத்துக்கொண்டு சைக்கிள் ஓட்டக் கற்றுக்கொண்டேன். ஒவ்வொரு நாள் மாலையிலும் நான் சைக்கிள் கற்றுக்கொள்ளும் போது உடலில் காயங்கள் நேராமல் இருக்காது. சமையலில் காண்பது பெருங்காயம். எனக்கும் பெருங்காயம் என் உடலெங்கும் இருக்கும். விழுப்புண்களைப் பெற்றுக்கொள்வதே வீரனுக்கு அழகு. விழுப்புண்கள் இல்லாதவன் என்ன வீரன்!? அந்நாளில் ஒருமணி நேரத்துக்கு சைக்கிள் வாடகை ஒரு ரூபாய் என நினைக்கிறேன். எனக்கு சைக்கிள் ஓட்டக் கற்றுத்தந்த மூத்தவர்கள் பலரும் சொல்லித் தந்த சைக்கிள் விடும் பால பாடங்கள் எதுவும் எனக்கு பிடிபடவில்லை. ஆனால் இன்று மொபெட் வண்டியைத் திறம்பட ஓட்டுகிறேன் என்றால் அதற்கு நான் அந்நாளில் அந்த முனிசிபல் சத்திரத்தில் பெற்ற சைக்கிள் ஓட்டும் பால பாடங்கள்தான் காரணம் என்று சொல்லுவேன். எனது பன்னிரண்டு ஆண்டுகால பள்ளி வாழ்வில் அந்த நகராட்சி சத்திரம் முக்கிய பங்கு வகித்தது. அங்கு அமர்ந்து நான் வீட்டுப்பாடம் எழுதியிருக்கிறேன். பள்ளிப் பாடங்களைப் படித்திருக்கிறேன். எனது சக பதினெட்டு ஸ்டோர்வாசிகளான நண்பர்களுடன் அரட்டை அடித்திருக்கிறேன்.

மாலை வேளைகளிலும் விடுமுறை நாட்களிலும் நாங்கள் இங்குதான் "பதினெட்டு ஸ்டோர்" சிறுவர் குழாமுடன் சேர்ந்து கிரிக்கெட் விளையாடினோம். உடலுக்கு மேலே சந்தனநிற ஜெர்சி போட்டுக்கொண்டு டென்னிஸ் பந்தை வைத்துக்கொண்டு ஃபோர், சிக்ஸ் என்று விளாசிவிட்டு, எங்களை நாங்களே "கிரிக்கெட்டின் சூப்பர் ஸ்டார்கள்" என்று முடிசூட்டிக்கொண்டோம். என்னோடு கிரிக்கெட் விளையாடிய ஸ்ரீதர், புஷ்பா(ஆண் தான்), மூர்த்தி, சிவா, ஸ்ரீகாந்த், ராஜேஷ், சுகுமார், கிருஷ்ணன், தங்கமாரி, பாஸ்கர் ஆகியோர் இன்று இந்தியாவிலும், அயல் தேசங்களிலும் நல்ல நிலையில் இருக்கிறார்கள். நான் மட்டும்தான் இலக்கியம் எழுதிக்கொண்டு உருப்படாமல் இருக்கிறேன்.

பகல் நேரத்தில் சத்திரமாகவும் மாலை நேரங்களில் விளையாட்டு மைதானமாகவும் இருக்கும் இந்த சர்க்கார் இருப்பிடம் இரவு வேளைகளில் பாலியல் தொழில் செய்து வயிற்றைக் கழுவிக்கொள்ளும் பெண்களுக்கும் வழிவகை செய்யும். இதே இடம் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் கல்யாண நிகழ்ச்சிகளுக்கு வாடகைக்கு விடப்படும். சனிக்கிழமை மாலையில் ஒரு பெடல் ரிக்க்ஷா வண்டியில் மைக் செட் கட்டுபவர் அரை தூக்கத்தில் இந்த சத்திரத்துக்குள் நுழைவார். தனது ஒலிபரப்பு சாமான்களை அங்கு வைத்துவிட்டு, ஒரு பீடியை பற்ற வைத்துக்கொள்ளுவார். வயர் இணைப்புகளைப் பொருத்திவிட்டு குழாய் ரேடியோ ஸ்பீக்கர்களை அங்கு இருக்கும் வேப்ப மரத்தில் ஏறி கட்டிவிட்டு, ரெகார்ட் ப்ளேயரை எடுத்து வைத்துக்கொண்டு, அதில் கிராமபோன் ரெக்கார்டுகளைப் போட்டு ஒலிபரப்பை ஆரம்பித்து விடுவார். இதில் மின்சாரத்தில் இயங்காமல், கையால் சுழற்றி இயங்க வைக்கும் கிராமபோன் ரெக்கார்டுகளை அவர் இயக்குவதையும் நான் கண்டிருக்கிறேன். ஒரு விசையை கையால் முறுக்கி, அந்த இயந்திரத்தின் உள்ளே இருக்கும் ஸ்பிரிங் கம்பியை முறுக்கேற்றி, அதன் மூலமாய், ரெக்கார்டுகளை பேச வைக்கும் தாமஸ் ஆல்வா எடிசன் காலத்து தொழில் நுட்பத்துடன் அந்த கிராமபோன் கருவி

இயக்கப்பட்டதைக் காணும்போது காலம் பின்னோக்கி ஒரு நூற்றாண்டுக்கு முன்பு போனதைப் போல உணர்ந்தேன். தன் வேலையைச் சுலபமாக்க வேண்டும் என்பதற்காகவும் வாங்கிக்கொண்ட காசுக்கு வஞ்சனை வைக்கக்கூடாது என்பதற்காகவும் தான் கொண்டுவந்த அனைத்து எல்.பி அரக்கு ரெக்கார்டுகளையும் ஒலிபரப்பிவிட வேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் இருப்பார் அந்த மைக்செட்காரர். அவர் ஒலிபரப்பும் இசை அந்த முனிசிபல் சத்திரத்தின் ஸ்பீக்கர் கட்டப்பட்ட வேப்ப மரங்களிலிருந்து புறப்பட்டு, கிழக்கு பார்த்த இரும்புக்கம்பிக் கதவின் வழியாக அந்த வளாகத்தைவிட்டு வெளியேறி அந்த தென்-வடல் சாலையை இசை வெள்ளத்தால் மூழ்கடிக்கும்.

நீண்ட நேரம் ஒலிபரப்பாகும் ரெக்கார்டுகள் என்ன என்னவென்று அறிந்து வைத்திருக்கும் அந்த சாமர்த்தியசாலி, “திருவிளையாடல்”, “சரஸ்வதி சபதம்”, “தில்லானா மோகனாம்பாள்”, “பதினாறு வயதினிலே” ஆகிய படங்களின் ஒலிச்சித்திரங்களைக் கொண்ட ரெக்கார்டுகளைப் போடுவார். ஒரு திரைப்படத்தின் வசனப்பகுதியை மட்டும் தனித்துப் பிரித்தெடுத்து, அதை இசைத்தட்டுக்களில் பதிவுசெய்து அதைக் கேட்கும் ரசனை என்பது அந்நாளில் இருந்தது என்பதை இன்றைய தலைமுறை அறியாது. அந்நாளைய திரைப்படங்களில் அத்தனை அளவுக்கு வசனங்களின் பகுதி (Talkie Portion) இருந்தது. “திருவிளையாடல்”, “சரஸ்வதி சபதம்”, “தில்லானா மோகனாம்பாள்”, “பதினாறு வயதினிலே” “காதலிக்க நேரமில்லை” ஆகிய படங்களின் ஒலிச்சித்திரம் ஒவ்வொன்றும் ஒருமணி நேரத்துக் குறையாமல் இருக்கும். ஒரு எல்.பி ரெக்கார்டை எடுத்து அதைக் கிராமபோன் ரெக்கார்டில் போட்டுவிட்டு, அந்த மைக்செட்காரர் எங்கோ போய்விடுவார். அப்படி என்னதான் அவருக்கு முக்கியமான வேலை இருக்குமோ யாருக்குத் தெரியும்? இந்த மைக்செட்காரர்கள் பலர் “தூள்” கசக்கி புகை இழுக்கும் ஆட்கள் என்பதைக் கண்டுகொண்டேன். இந்த ரெக்கார்டுகளில் ஒன்றைப் போட்டுவிட்டு அவர் காணாமல் போய்விடுவார். பல இடங்களிலும் பல ஆண்டுகளாக பல தடவைகள் பயன்படுத்தப்பட்டு, தேய்மானம் அடைந்துள்ள அந்த அரக்கு ரெக்கார்டின் வைர முள் ஒரு குறிப்பிட்ட பள்ளத்துக்குள் சிக்கிக்கொண்டு, ஒரே குறிப்பிட்ட வசனத்தை திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருக்கும். “பதினாறு வயதினிலே” படத்தின் நாயகி “மயிலு” (ஸ்ரீதேவி) படத்தின் இறுதிக்காட்சியில் புகைவண்டி நிலையத்தில் நின்றுகொண்டு, “நீ நிச்சயமா திரும்புவ. இந்த மயிலு உனக்காக எப்பவுமே காத்துக்கிட்டிருப்பா!” என்ற வசனம் திரும்பத் திரும்ப ஒலித்துக்கொண்டிருக்கும். அது எத்தனை தடவை என்று எண்ணுவது கூட சுவாரசியமாக இருக்கும். இதைத்தான் கீறல் விழுந்த கிராமபோன் ரெக்கார்டு என்று சொல்லுவதுண்டு. பழைய செவ்வியல் தமிழ்த் திரைப்படங்களின் வசனங்களைக் கேட்டுக்கேட்டு எனக்கு சலிப்பு எற்படவில்லை. மாறாக, எனக்குத் தமிழ் வசன நடையை அவை கற்பித்தது என்பேன். ஒரே முனிசிபல் சத்திரம் தங்குமிடமாகவும், பூங்காவாகவும், விளையாட்டுத் திடலாகவும், நகராட்சி ஒப்பந்தகாரர்கள் கட்டிடம் கட்ட வாங்கும் பொருட்களை இருப்பு வைத்துக்கொள்வதற்காகவும், கல்யாண மண்டபமாகவும், வருவோர் போவோர் தங்கும் சத்திரமாகவும், அதன் முன்புறக் கட்டிடங்கள் வர்த்தகக் கடைகளாகவும், இரவு நேரங்களில் மதன காமராஜனின் மணிமண்டபமாகவும், காலை வேளைகளில் கராத்தே பயிற்றுவிக்கும் இடமாகவும் இன்னும் என்னென்ன விதங்களில் சாத்தியமோ அத்தனை விதங்களிலும் அது பயன்பாட்டிற்குத் தக்கதாக தன்னை உருமாற்றிக்கொள்ளும். அரசியல் கட்சியின் மாநாடு மற்றும் ஐ.நா.சபையின்

பொதுக்குழுக் கூட்டம் தவிர வேறு எல்லா நிகழ்ச்சிகளும் அங்கு நடந்தன. திருமால் எடுத்தது தசாவதாரங்கள். ஆனால் அந்த ரயில்வே பீடர் ரோடு எடுத்தது அதையும் தாண்டி பலப்பல அவதாரங்கள் என்று சொல்லுவேன்.

அது 1984–ஆம் ஆண்டு என்று எண்ணுகிறேன். அந்த முனிசிபல் சத்திரத்தைக் காலிசெய்து தரும்படி உத்தரவு வந்தது. ரெண்டு வாரத்தில் அந்த சத்திரம் காலியானது. அதன் சிதிலமடைந்த பூங்காவின் இருக்கைகள், மற்றும் கான்கிரீட் கட்டுமானத்தால் ஆன விளையாட்டு அமைப்புகள் எல்லாம் இடிக்கப்பட்டு, அங்கிருந்த காய்ந்த மரம், செடிகொடிகள் எல்லாம் வெட்டி அகற்றப்பட்டு, அந்த இடத்தில் "பஜார் காவல் நிலையம்" என்ற பலகை மாட்டப்பட்டது. கோடை விடுமுறை நாட்களில் நாங்கள் ஆசைதீர விளையாடிய அந்தத் திடலில் இப்போது காக்கிச் சட்டைக்காரர்களின் அணிவகுப்பு பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருந்ததைக் கண்டோம். எங்களுக்கு சொந்தமான இடம் ஒன்றை வேறொருவர் அபகரித்துக் கொண்டதைப் போன்ற உணர்வு எனது விளையாட்டுத் தோழர்களுக்கு வந்தது.

முனிசிபல் சத்திரத்துக்கு நேர்வடக்கே சற்றுத்தொலைவில் ஸ்டேட் பாங்க் இந்தியா வங்கி அலுவலகம். கிழக்கே பார்க்கும் அந்த வங்கியின் பார்வையில் நேரே இருப்பது ராமமூர்த்தி ரோடு. அந்நாளைய "மீசைக்கார" எம்.எல்.ஏ ஒருவரின் வீடு அங்குதான் இருந்தது. ராமமூர்த்தி ரோடு, ரயில்வே பீடர் ரோட்டில் இணைந்து சந்திக்கும் இடம் ஒரு முச்சந்தி. முதலில் ஒரு வீட்டில் குடியிருந்த அந்த எம்.எல்ஏ., ஏதோ ஓர் அதிர்ஷ்டத்தில் அமைச்சரானார். அதன் பின்பு அந்த ராமமூர்த்தி ரோட்டில் இருந்த அத்தனை வீடுகளையும் கட்டிடங்களையும் விலைக்கு வாங்கிவிட்டார். ஒருவேளை அவர் முதலமைச்சராகி இருந்தால் அந்த விருதுநகரையே விலைக்கு வாங்கியிருப்பார்.

தெலுங்கு பேசும் ஒரு கூட்டம் வாழ்ந்துவந்த ரெட்டை வரிசை குடியிருப்பு ஒன்று அதே ரோட்டில் இருந்தது. அதற்கு அடுத்ததாக, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கியின் கிளை அலுவலகம். அந்த அலுவலகத்துக்குச் சற்றுத் தொலைவில், வருமானவரி அலுவலகம். அதன் அருகே சிறு வர்த்தகக் கடைகள். ஒரு பழைய இரும்புச் சாமான்கள் வாங்கும் ஒரு கடை. ஒரு ஐஸ் பேக்டரி. ஒரு லாரி புக்கிங் ஆபீஸ். அதன் வாசலில் ஒரு புளியமரம். அந்த மரத்து நிழலில் அமர்ந்திருக்கும் ஆஞ்சநேயர் சுவாமிக்கு அநேக பக்தர்கள் இருந்தனர். ஒவ்வொரு வருடமும் அந்த சுவாமிக்கு நிறைய பொருட் செலவில் அனுமன் ஜெயந்தி விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்படும்.

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி கிளைக்கு அருகே முச்சந்தியில் கிழ-மேல் சாலையான ராமமூர்த்தி சாலையை நோக்கிய வண்ணம் ஒரு அகன்ற மேடை அமைக்கப்பட்டு மூன்று நாட்கள் அங்கு கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். இங்கு வந்து நிகழ்ச்சி நடத்திய கலை உலகப் பிரபலங்கள் அநேகம். சீர்காழி கோவிந்தராஜன், கோவை சௌந்தரராஜன், எல்.ஆர். ஈஸ்வரி, அபஸ்வரம் ராம்ஜி, எம். ஆர். விஜயா, விஜயலட்சுமி நவநீதகிருஷ்ணன் என்று அநேகர் இந்த விழாவில் கச்சேரிகள் நடத்தியிருக்கிறார்கள். குன்னக்குடி வைத்தியநாதன் மற்றும் வலையப்பட்டி சுப்பிரமணியம் இணைந்த இரட்டை அமர்க்களமான இன்னிசைக் கச்சேரியைக் கேட்டுள்ளேன். திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் சொற்பொழிவும் நடந்தது. சில சமயங்களில் சரித்திர நாடகங்கள் நடந்ததுண்டு. பெரும்பாலும் சென்னையில் வாசமாயிருக்கும் கலைஞர்களே இங்கு வருவார்கள். அவர்களைப் பார்க்கப் பெரும் கூட்டம் திரளும். அந்த விழாக்கால இரவுகளில் அந்த ரயில்வே பீடர் ரோடு கலையெனும் அலையில் மூழ்கிவிடும்.

சில நாட்களில் பெருமழை வந்து கலை நிகழ்ச்சியை முடித்து வைக்கும்.

அந்த வீதியின் இரைச்சலும், மனிதர்களின் கனத்த குரல்களும், வணிகக் கடைகளின் சத்தங்களும், அதில் தொடர் வலம்வந்து கொண்டிருக்கும் மனிதர்களும், வாகனங்களும், அந்த வீதியை உயிர்ப்போடு வைத்திருக்கும். இந்த மனிதர்களும், வாகனங்களும் எதை நோக்கிப் போகின்றன, எதைச் சாதிக்கப் போகின்றன என்ற எண்ணங்களை என்னுள்ளே எழுப்பும். வடக்கிலிருந்து ஊருக்கு வந்துசேரும் எவரும் ரயில்வே பீடர் ரோட்டைக் கடக்காமல் செல்ல முடியாது. அந்த வீதியே அந்த ஊரின் நுழைவாயில்.

பகல் பொழுதுகளில் அங்கு சண்டை சச்சரவுகளுக்குப் பஞ்சமிருக்காது. உப்புப்பெறாத விஷயங்களுக்கெல்லாம் மனிதர்கள் ஆக்ரோஷமாக சண்டையிட்டுக் கொள்ளுவதைக் கண்டிருக்கிறேன். சண்டை துவங்கியதும் முதலில், மற்றவரின் பிறப்பு குறித்த அச்சிட முடியாத வசவுகள்தான் இருவரின் வாய்களிலிருந்து வெளியே வரும். அந்த இடத்தில் திருவள்ளுவ நாயனார் நெற்றி நிறைய விபூதி அணிந்துகொண்டு பிரசன்னமாகி, "என்னப்பா இது? நான் என்ன எழுதியிருக்கிறேன் என்று நீங்கள் படிக்கவில்லையா? "...கனியிருப்பக்காய் கவர்ந்தற்று" என்று உபதேசித்தால் அந்த வள்ளுவரின் காதும் கூசும் அளவுக்கு அவருக்கும் வசவுகள் பிறக்கும். தென் தமிழக மக்களின் அன்றாட பேச்சு வழக்கை முனைவர் பட்ட ஆய்வுசெய்ய யாராவது முனைந்தால், அவர் அந்த ரயில்வே பீடர் ரோட்டுக்கு வந்து ஓரிரு நாட்கள் நின்றுகொண்டால் போதும். தெக்கத்தி சனங்களின் பேச்சு வழக்கு பாஷை குறித்து முழுமையாய் அறிந்துகொள்ளலாம். பகல்வேளைகளில் வீதிச்சண்டைகள் அங்கு சகஜம். சண்டை தொடங்கியதும், "என்னப்பா, இதுக்காவா போயி சண்டை அடிச்சுக்கறீங்க!? போங்கையா... போயி அவங்க அவங்க வேலையைப் பாருங்கையா" ன்னு சொல்லி அவர்களைப் பிரித்துவிட்டு சமாதானம் செய்து அனுப்பி வைக்கும் வயசாளிகளும் அங்கு உண்டு. எல்லாத் தெருச்சண்டைகளும் அந்த வீதி மக்களுக்கு இலவச கேளிக்கை நிகழ்ச்சிகள்தான்.

ஒருநாள் இரவில், என் வீட்டில் என் தம்பிகளோடு சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். வெளியே சாலையில், "ஐயோ, அம்மா!" என்ற அலறல் சத்தம் கேட்டது. எல்லோரும் வெளியே ஓடிப்பார்த்தால், யாரோ ஒருவர் கத்திக்குத்து பட்டு, ஓடி வந்துகொண்டிருந்தார். உடலிலிருந்து ரத்தம் வழிந்துகொண்டிருக்க, அதன்மேலும் அவரால் ஓட முடியாமல், அவர் தளர்ந்து விழுந்த இடம் குட்டையன் சின்னையாவின் சாயக்கடை முன்புதான். காவல்துறை வந்தது. இறந்தவரின் சரீரம் அந்த சிமெண்ட் ரோட்டில் கிடந்தது. அந்த வீதியே அந்த இடத்தில் திரண்டு நின்றது. இன்ஸ்பெக்டர் அங்கு இருந்தவர்களை விசாரித்துக்கொண்டிருந்தார். இறந்தவரின் சரீரம் கிடந்த சாலையில் அருகே இருந்த குட்டையன் சின்னையாவை அங்கு வரவழைத்து, அந்தக் கொலை பற்றி விசாரித்தார். சின்னையாவும் அந்தக் குத்துப்பட்டு இறந்த ஆள் எந்தத்திசையிலிருந்து ஓடி வந்தார்; அவரை யார் துரத்திக்கொண்டு வந்தார்; எந்த இடத்தில் வைத்து, கொலைகாரன் எப்படி அந்த ஆளைக் கத்தியால் குத்தினான் என்று இன்ஸ்பெக்டரிடம் தெளிவாகக் கையை ஆட்டி ஆட்டி விளக்கினார். பதினெட்டு ஸ்டோர்வாசிகள் யாவரும் வெளியே வந்து வீதியில் நின்று அதைப் பார்த்துக்கொண்டிருந்தோம். "குட்டையன் எவ்வளவு தைரியமா போலீஸ் கிட்ட பேசுறான் பாரு!" என்று எங்கள் ஸ்டோரில் வசித்த பரிமளா ஆச்சரியப்பட்டுச் சொல்ல, "ஆமா. ஆனா, போலீஸ் கூப்புடுறபோது, கோர்ட்டுல போயி சாட்சி சொல்லணுமே!" என்று ஒருவர் கவலைப்பட்டார். "கோர்ட்டுல போயி சாட்சி சொல்லிட்டு

இவர் பத்திரமா இருக்கணுமே!" என்று இன்னொருவர் அக்கறைப்பட்டார். நாங்கள் மீண்டும் எங்கள் வீடுகளுக்குள் புகுந்துகொண்டோம். எனக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. நான் என் அம்மாவிடம், "நான் இனிமேல், தம்பியோட சண்டை போட மாட்டேன்" என்று உறுதிமொழி தந்தேன்.

பஞ்சு மில் ஃபேக்டரி வளாகத்தின் தென்மூலையில் மேற்கு பக்கம் வாசல் பார்க்க இருந்த சிறு அறையில் தன்னுடைய சாயாக்கடையை நடத்தி, தன்னுடைய வயிற்றையும் தன்னுடைய குடும்பத்தினரின் வயிறுகளையும் கழுவிக்கொண்டிருந்த குட்டையன் சின்னையாவுக்கு திடீரென்று நெருக்கடி வந்தது. அவரது கடையைக் காலிசெய்து தரும்படி குட்டையனுக்குச் சொல்லப்பட்டது. பஞ்சுமில் முதலாளி சொன்ன பேச்சைத் தட்டாமல் குட்டையனும் தனது சின்ன சாயாக்கடையைக் காலி செய்துவிட்டுப் போக, அந்தப் பஞ்சுமில்லின் காலித்திடலில் இருந்த சுண்ணாம்புக் கற்களின் குவியல்கள் அகற்றப்பட்டு, பூமி பூஜை போடப்பட்டு, கட்டிடம் ஒன்று அங்கே எழும்பியது. கட்டிட வேலைகள் முடிந்த பிறகுதான் அங்கே ஒரு திரையரங்கம் வரப்போவது எங்களுக்குத் தெரிந்தது. நிறைய பொருட்செலவில், புத்தம் புது கட்டிடத் தொழில் நுட்பத்தில், நல்ல ரசனையோடு எழுந்த அந்த கான்க்ரீட் கட்டிடம் "அப்சரா" என்ற பெயரைத் தாங்கி நின்றது. ப்ரொஜெக்டர் போன்ற சாதனங்களைப் பொருத்திவிட்டு, அதுவரை கட்டிடப்பணி செய்த எல்லோரும் காணும்வண்ணம் தேவர் தயாரித்த "தெய்வம்" திரைப்படத்தை இலவசமாகத் திரையிட்டுக் காட்டினார்கள்.

முதன்முதலாய் அந்தத் திரையரங்கில் திரையிடப்பட்ட படம் ரஜினிகாந்த், சுகாசினி நடித்த தேவர் பிலிம்ஸ் தயாரிப்பான "தாய் வீடு" என்ற படம். ஏற்கனவே பகல் முழுக்க சந்தடி குறையாமல் ஜேஜே என்று மனித ஆரவாரங்களோடு இருக்கும் அந்த ரயில்வே பீடர் ரோட்டில் இந்தத் திரையரங்கம் சுத்துமுத்து கிராமங்கள், பட்டி தொட்டிகள் என எங்கிருந்தெல்லாமோ மனிதர்களைக் கொண்டுவந்து அங்கு குவிய வைத்தது. அந்த வீதியின் குவிமையமாக "அப்சரா" மாறியது. இரவில் பத்து மணிக்கு ஓய்வுகொண்ட அந்த வீதி, இப்போது நடுஜாமம் தாண்டியும் ஓய்வின்றி, உறக்கமின்றி இருந்தது. இரவு பத்துமணி ஆட்டத்துக்கு அரங்கத்தின் பக்கவாட்டுக் கதவுகள் அகலமாகத் திறக்கப்பட்டிருக்க, ஸ்டீரியோ ஸ்பீக்கரில் அலறும் அதன் வசனங்களும் பாடல்களும் அந்த வீதியெங்கும் நிரம்பி வழிந்தன. ஏற்கனவே பக்கத்தில் இருந்த "நியூ முத்து டாக்கீஸ்" என்ற பழைய மஞ்சள் காவி அடிக்கப்பட்ட காரைக்கட்டிடம் கொண்ட பாடாவதி திரையரங்கிற்குப் போட்டியாக உதித்த "அப்சரா" விரைவில் விருதுபட்டி மக்களின் ஏக பொழுதுபோக்கு மையமாகி விட்டது.

தினசரி நான்கு காட்சிகள், சனி, ஞாயிறு ஐந்து காட்சிகள் என்று சக்கை போடு போட்ட தொடர் ஓட்டத்தால் அந்த "அப்சரா" திரையரங்கத்தின் உரிமையாளர்களான நான்கு அண்ணாச்சிகளும் போட்ட முதல் பணத்தை ரெண்டே ஆண்டுகளில் எடுத்துவிட்டனர். எந்தத் திரைப்படத்தை எடுத்தால் அது ஓடும் என்று வெகுசன ரசனைகளையெல்லாம் தெரிந்து வைத்திருந்த முதலாளிகள் அவர்கள். பாலியல் விஷயங்களோடு தொடர்புடைய "முருங்கைக்காய்" சமாச்சாரம் தெரிந்த நிபுணரான பாக்கியராஜ் என்பவர் இயக்கிய "முந்தானை முடிச்சு" என்ற திரைப்படம் அங்கு அந்தச் சின்ன ஊரில் முப்பது நாட்கள் அப்சராவில் ஓடியதாக நினைவு. கல்லாப்பெட்டி நிரம்பி வழிந்ததற்கு அந்தத் திரைப்படமும் ஒரு காரணம். "அப்சராவில்" படம் பார்க்க ஒருமணி நேரத்துக்கு முன்பாகவே வந்து காத்திருக்கும் கிராமத்துக் கூட்டம். ஞாயிற்றுக்கிழமைகளில், ஆறரை

மணிக்காட்சிக்கு, மனைவிகளோடு வரும் புது மாப்பிள்ளைகள். ஒருநாள் கூட தவறாமல் கூட்டம் நிரம்பிவழியும் கேளிக்கைத் தலமாகி விட்டது “அப்சரா”. ரயில்வே பீடர் ரோடின் ஜன ஆரவாரம் குறையவே வழியில்லாமல் போனது. ஊரின் மற்ற சினிமா வழிபாட்டுத் தலங்களான சென்ட்ரல், அமிர்தராஜ், ஸ்ரீராம், நாராயணசாமி ஆகிய திரையரங்குகளின் 1960-ஆம் ஆண்டின் பழைய மோஸ்தர் கட்டிடங்களைப் பார்த்துப் பார்த்து, அலுத்துப்போன விருதுபட்டி ஜனம் “அப்சரா” தியேட்டரில் ஏதோ இகபர லோகங்களின் பேரானந்தம் இருப்பதாக நினைத்துக்கொண்டு இங்கே வந்துசேர, திருவாளர் ரயில்வே பீடர் ரோடு அவர்கள் குறைவில்லா மக்கள் கூட்டத்தால் நிறைக்கப்பட்டு கொஞ்சம் கர்வமும் கொண்டார்.

மற்ற மாதங்களில் எப்படியோ, பங்குனி மாதத்தில் அவர் முழுக்களையோடு திருக்காட்சி நல்குவார். விருதுநகர் பராசக்தி மாரியம்மன் கோவிலில் ஆண்டுதோறும் நடந்தேறும் பங்குனிப் பொங்கல் கொண்டாட்டங்கள் என்பது தேசப்பிரசித்தம் பெற்றது. பத்து நாட்கள் நடைபெறும் அந்தக் கோலாகல விழாவில், ஜனக்கூட்டத்தால் ஊரே நெளிந்துபோகும். ஊரே மக்கள் கூட்டத்தால் நெளியும்போது, ரயில்வே பீடர் ரோடு மட்டும் அதற்கு விதிவிலக்கா? ம்ஹூம்... அந்தப் பங்குனிப் பொங்கலில் அம்மனைச் சேவிக்க வரும் மொத்தக் கூட்டமும், இதே ரோட்டின் வழியாகப் போய்வர, அந்தச் சாலைக்கு மூச்சுத் திணறிப்போகும். போதாக்குறைக்கு தேசபந்து மைதானத்தில் (பொட்டல் திடல்) பெரிய ஓலைக்கொட்டகை போடப்பட்டு அங்கு வள்ளி திருமணம், அரிச்சந்திரா மயான காண்டம், பவளக்கொடி, நந்தனார் சரித்திரம் என்று தினந்தோறும் ஒரு மேடைக்கூத்து நடைபெற, நகரின் மையத்தில் எள் போட்டால் எள் விழ இடமில்லாது போகும். பங்குனிப் பொங்கல் கொண்டாட்டத்தில் அக்கினிச்சட்டி ஏந்தி நேர்த்திக்கடன் செலுத்த வரும் அனைவரும் இதே ரயில்வே பீடர் ரோடு வழியாகத்தான் வந்தாக வேண்டும். நையாண்டி மேளம் முழங்க, நாதஸ்வரங்கள் ஸ்வரப்பொழிவு நிகழ்த்த, எங்கள் பதினெட்டு ஸ்டோர் மக்கள் அம்மன் பக்தர்களின் அக்கினிச்சட்டியில் எண்ணை ஊற்றி, வேண்டுதல் செய்துகொள்ளுவார்கள். சட்டி ஏந்திவரும் பக்தர்களைக் குளிர்விக்க குடம்குடமாய் மஞ்சள் கலந்த தண்ணீரைத் தலையில் ஊற்றுவதும் உண்டு. பொசுக்கும் பங்குனி மாச வெயிலில் காலணி ஏதும் இல்லாது கையில் அக்கினிச்சட்டி ஏந்திவரும் அடியவர்களின் மஞ்சள் ஆடைகளாலும் சாலையெங்கும் ஓடும் மஞ்சள் நீராலும் அந்தச்சாலை மங்கலமான மஞ்சள் நிறத்திற்கு மாறிக்கொள்ளும்.

பங்குனிப் பொங்கல் கொண்டாட்டங்களில் இன்னொரு முக்கிய விஷயத்தையும் அங்கே அரங்கேற்றுவார்கள். மாலை வேளைகளில் பணக்காரர்களின் வீடுகளுக்கு வெளியே மர சோபாக்கள், நாற்காலிகள் போடப்பட்டு வீட்டினர் எல்லோரும் அமர்ந்துகொள்ளுவார்கள். ஒவ்வொரு பெண்ணின் கழுத்திலும் அரைக்கிலோ தங்க நகைகள் அலங்கரித்துக் கொண்டிருக்கும். இந்த நாற்காலிகளின் நடுவே ஒரு நாற்காலியில் முழு அலங்காரத்தோடு ஓர் இளம்பெண் அமர்த்தப்பட்டிருப்பார். சுற்றி இருக்கும் மற்றவர்களிலிருந்து அந்த இளம்பெண் வித்தியாசமாய்த் தோற்றமளிப்பார். திருவிழாவின் ஊர்வலத்தில் வரும் ஆட்களோடு ஒருவர் உடனே கூடவந்து, அந்தக் குறிப்பிட்ட வீட்டை அடைந்ததும், அங்கு வீட்டு வாசலில் அலங்கரித்து வைக்கப்பட்டிருக்கும் பெண்ணை ஒருவருக்குச் சுட்டிக் காட்டுவார். அந்த வீதியின் வழியே போகும் குடும்பத்தார் அந்த அலங்கரித்து வைத்திருக்கும் பெண்ணைப் பார்த்துக்கொள்ளுவார்கள்.

இது ஒரு திறந்த வீதியில் பெண் பார்க்கும் படலம் என்பது பின்னாளில்தான் எனக்கு தெரிய வந்தது. தெக்கத்தி கிராமங்களில் குல தெய்வத்திற்குச் சாமி கும்பிட ஒரே குடும்பத்தின் அங்காளி பங்காளிகளெல்லாம் ஒன்றுகூடி, கிடாக்களைப் பலியிட்டு, பொங்கல் வைத்து, ஒன்றாக அரசமரத்தடியில் உண்டுக் களித்து, கேலிப்பேச்சுக்கள் பேசி, சந்தோஷித்து இருக்கும் ஒருநாளில் இளம் பெண்களும் வாலிபர்களும் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ளும் வாய்ப்புகள் ஏற்படும். அது நாட்டுப்புறப்பெண் பார்க்கும் வைபவம். அவ்வண்ணமே இந்த விருதுபட்டி பங்குனிப் பொங்கல் விழாவும் பெண் பார்க்கும் படலம் அரங்கேறும் வாய்ப்பைத் தரும்.

பங்குனி மாசம் முழுக்க விருதுநகர் எங்கும் கோலாகலம்தான். ஒரே திருவிழாக் கூட்டம், ஜனங்களின் ஆரவாரம், இடையறாத போக்குவரத்து, அலறும் ஒலிபெருக்கிகள், பெண்களின் நலம் விசாரிப்புகள், வீதியெங்கும் விரிக்கப்பட்ட வியாபாரக் கடைகள், அங்கே எழும் பேரிரைச்சல், இத்தியாதிகள். இவற்றோடு ஜன சமூகம் ஒன்றாய்க் கலந்து ஒருமித்து சங்கமமாவதைப் பார்த்தால், "விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை / அணைந்துகொள் உன்னைச் சங்கமமாக்கு / மானிட சமுத்திரம் நானென்று கூவு" என்பாரே பாரதிதாசன் அதுபோல அந்தப் பொழுதுகள் உணரப்படும்.

ஓர் ஊரின் எல்லா வீதிகளும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. பெருநகர வீதிகள் வேறுவிதம். ஒரே ஜன சந்தடி. ஓயாத போக்குவரத்து. வாகனாதிகள். பையும் கையுமாக அலுவலகம் விரையும் நடுத்தர வர்க்கம். சிறுநகரங்களின் வீதிகள் வேறுமாதிரி இருக்கும். கிராமங்களின் வீதிகள் இவை எல்லாவற்றிலும் இருந்து வேறுபடும். அங்கு காலைப்பொழுதுகளில் குடியானவர்களின் போக்கும் வரவும் இருக்கும். பிற்பகல் வேளைகளில் அது சோர்வுகொள்ளும். தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு கொட்டாவி விட்டு, சோம்பல் முறிக்கும். மாலை வேளைகளில் பொன்னிற ஆதவனின் கதிர்கள் அங்கு சாய்வாக வீழும்போது, பின்புறத்தில் மலைகள் தென்பட, வானில் இரைதேடப் போன பறவைகள் கூடுகளுக்குத் திரும்பும் காட்சி மனதில் இன்பமூட்டும். மேற்சொன்ன விதங்களிலிருந்து மாறுபட்டு, ரயில்வே பீடர் ரோடு தனித்திருக்கும். அந்த வீதியை பன்னிரண்டு ஆண்டுகளாகக் கூர்ந்து அவதானித்தவன் என்ற முறையில் அதன் ஜீவநாடியை நான் அறிந்தவன். சாலைகளுக்கும் உயிர் உண்டு. என்னைப் போல நீங்களும் அவைகளோடு உறவாடிப்பார்க்கலாம். ஒரு சாலையை உயிரற்ற வஸ்து என்று எண்ணிவிடாதீர்கள். உயிரற்ற வஸ்துவாகிய ஒரு வாகனத்தோடு கூட நீங்கள் அளவளாவி மகிழலாம். "என் கார் என்னோடு பேசும்" என்பார் ஜெயகாந்தன்.

"எல்லாச் சாலைகளும் ரோமாபுரியை நோக்கி" *(All Roads Lead to Rome)* என்றொரு ஆங்கிலச் சொலவடை உண்டு. இது ஒருவிதத்தில் சரிதான். ரயில்வே பீடர் ரோடின் எல்லை ரயில் நிலையத்தில் முடிகிறது. அங்கிருந்து பெருநகரங்களுக்குப் பயணிக்கலாம். அந்த இத்தாலியில் உள்ள ரோமாபுரிக்குக்குக் கூட செல்லலாம். ரயில் நிலையம் அருகே அரசு நூலகம் இருந்தது. என் விடுமுறை நாட்களில் அங்கு சென்றுதான் தீவிர வாசிப்பில் ஈடுபடுவேன். வீதியின் ஒவ்வொரு இடமும் ஸ்தலமும் எனக்கு வெகு அத்துபடியானது. ரயில் நிலையம் அருகே இருந்த ரங்கநாதப் பெருமாள் கோவிலில் சாமி கும்பிட என் குடும்பத்தோடு வாரந்தோறும் செல்லுவோம். கோணிச்சாக்குகளை இழுத்து வைத்து தைக்கும் கடைகள் அங்கு அநேகம் உண்டு. அந்தக் கடைகள் முழுக்க தூசி பறந்துகொண்டிருக்கும். சுவாசத்துக்கு இடையூறு செய்யும் அந்தத் தொழிலில் நூற்றுக்கணக்கானவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

அவர்களின் வயிற்றுப்பாடு அதுதான். விருதுநகர் வியாபார நகரம். அரிசி, பருப்பு முதல் சகல மளிகைப் பொருட்களுக்கும் தென்னகச் சந்தையின் விலை நிர்ணயம் அங்குதான் செய்யப்படும். வியாபார நிறுவனங்களிலிருந்து வெளியேறும் எல்லா வர்த்தகப் பொதிகளுக்கும் அந்த ரயில்வே பீடர் ரோடு ஒன்றே வழி. பொழுதுபோக்கு வசதிகள் எதுவும் அதிகம் இல்லாத அந்நாட்களில் சாலையில் மூடை மூடையாக நுகர்பொருள் சாக்குகளை கைவண்டிகளில் வைத்து, மூச்சிழுக்க அவற்றை இழுத்துச் செல்லும் முரட்டுக் கூலித்தொழிலாளர்களின் கஷ்டப்பாடுகளைக் கூர்ந்து கவனிப்பதில் எனது நீண்ட நேரத்தை செலவழித்திருக்கிறேன்.

நம்மைச் சுற்றி உள்ளவைகளைக் கூட கவனிக்க நேரமில்லாத இயந்திர மயமான உலகில் வாழ்ந்துகொண்டிருக்கும் யுகம் இது. "இது மிஷின் யுகம்" என்று புதுமைப்பித்தன் சொல்கிறார். இக்காலத்தில் ஏதோ ஓர் ஆர்வத்திற்காகக் கூட ஒரு சாலையின் நடபடிகளை ஆவலோடு கவனிப்பவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று அடியேன் அறியேன். என்னோடு அணுக்கமான தோழனைப் போல் உறவாடிய அந்தச் சாலையைப் பள்ளி நாட்களில் நான் உன்னிப்பாகக் கவனித்ததைப் போல இந்நாட்களில் வேறு எவரும் கவனிப்பார்களா என்பதை அறியேன். இந்நாளில் ஏதோ ஒரு பணியின் நிமித்தமாக நான் விருதுபட்டிக்குச் செல்லும்போது, அதே ரயில்வே பீடர் ரோட்டில் என் பாதங்கள் பதித்து, அந்த சிமென்ட் சாலையில் நடக்கும்போது, ஏதோ ஒன்று என் நெஞ்சைப் பிழியும். என் மனதில் காலத்தால் அழியாத தடங்களை அழுத்தமாய் ஏற்படுத்திவிட்ட அந்நாளைய நினைவின் பதிவுகள் மீண்டும் ஒருமித்து, சரேலென பேரலையாய் மீள எழும். அந்த உணர்வை என்னவென்று என்னால் ஒருபோதும் வகைப்படுத்தவியலாது.

rameshzillion@hotmail.com ■



கவிதை
கவிஜி

மாயங்கள்

வழியில் அடிபட்டிருந்த
மயிலைக் காப்பாற்றினான்
நா வறண்ட குட்டி நாய்க்கு
போத்தல் திறந்து நீரூட்டினான்
கொன்றைப்பூக்கள் கொஞ்சி
கால் படாமல் கடந்தான்
கை உடைந்த கிளையை
மேல் நோக்கி இணைத்து
மரம் மகிழ நடந்தான்
நடு சாலையில் நகர்ந்த பாட்டி
கரம் பற்றி ஓரம் விட்டான்
வெயில் தின்ற பாம்பு
இடமிருந்து வலம் செல்ல
காத்திருந்தான்
வரைபட குளறுபடி
வந்த வழியே
சென்று கொண்டிருக்கிறான்
மாயங்கள்
நல்லோனுக்கு சாத்தியம்
அவன் சேருமிடம்
சேர்ந்திருந்தான்...!

chevijay80@gmail.com ■



சிறுகதை

சுஜாதா செல்வராஜ்

கந்தாயி

மார்கழிப் பனி மென்மையாக இறங்கிக்கொண்டிருந்தது. கந்தாயி அம்மாளுக்கு விழிப்பு வந்தது. அவர் விழித்துக்கொண்டால் மணி அதிகாலை நான்கை நெருங்குகிறது எனக்கொள்ளலாம். வானில் மீன்கள் நல்ல மலர்ச்சியுடன் மினுங்கிக்கொண்டிருந்தன. இந்த வருசம் பனி கொறச்சல்தான் எண்ணியபடியே படுக்கையை சுருட்டி வைத்தார். கந்தாயிக்கு படுக்கை எப்போதும் வெளி வாசலில்தான். செல்லம்மா வாக்கப்பட்டு வந்தநாள் முதல் பார்த்துக்கொண்டிருக்கிறாள்,

பட்டாசாலைல படுங்கம்மா என்று எத்தனேயோ முறை சொல்லிப் பார்த்துவிட்டாள்.

‘அட, வெளியதான் காத்தோட்டமா இருக்கும். ஊட்டுக்குள்ள மூச்சடைக்கறாப்ல இருக்கு’என்று சொல்லி மறுத்து விடுவார். மழை பெய்யும் காலங்களில் மட்டும் கட்டிலை எடுத்து உள் திண்ணையில் போட்டுக்கொள்வார். வையாபுரி தாத்தாவுக்கு எப்போதும் உள் திண்ணையில்தான் படுக்கை. மனைவி கந்தாயி அப்படி உள்திண்ணையில் படுக்கும் நாட்களில் அந்த மழை இரவில் மனைவியுடன் பேசிக்கொண்டிருப்பது அவருக்குப் பிடித்தமான ஒன்று.

‘ஏங்க... மின்னலு வெட்டுது கட்ல தூக்கி பட்டாசாலைல போடவா?’

‘ஏ.. . அதெல்லாம் வேண்டாம். இந்த வட்டம் மழை கம்மி தான்’

‘ஆமாம். ஆனா மேற்கால கெணத்துல தண்ணி மேல கெடக்கு. வெள்ளாமைக்கு பங்கம் இல்ல’

‘நம்ம சின்னவன் நேத்து சீல வாங்கியாந்திருக்கான் போல!’

‘ஆமா... பேரனுக்கு மொட்டை அடிக்க துணி எடுக்க போனவன் எனக்கும் சீல வாங்கியாந்திருக்கான். செலவு பண்ண அஞ்சறதே இல்ல சின்னவன். ஹ்ம்... சீலைய பாத்தீங்களா?’

‘ம்... பாத்தேன்... ஏல எப்ப பாரு அந்த ஊதா கலரு இல்லனா பச்ச கலரு தானா? லேசா சருக வச்சு செவப்பு, மஞ்சள் னு எடுப்பான கலரு எடுத்து கட்ட மாட்டியா நீ! எப்ப பாரு பித்தறச்சியாட்டம் ஒரே கலரு. உம்மவங்காரனும் அதே கலரு வாங்கியாந்திருக்கான்’

‘ஆமா எனக்கு இப்பதான் வயசு திரும்புது சரிகை சீல எடுத்து கட்ட. அவன் கூட மருமவளும் போனாள்ல, அவளுக்குத் தெரியும் நான் என்ன நெறம் கட்டுவேன்னு அதான் வாங்கியாந்திருக்கா. ஏ சீல நல்லா தானே இருக்கு!’

இப்படி அவர்களுக்கான தனித்த நேரம் அவ்வப்போது அமைவது உண்டு.

வீட்டிற்கு இரண்டு மருமகள்கள் வந்து பேரன் பேத்தி ஆன பின்னும் கந்தாயிக்கு வாசலில் படுக்கும் பழக்கம் தொடர்கிறது. பிள்ளைகளுக்கு ஆயா கட்டில் என்றால் ஒரே குஷி. கட்டிலில் கம்பளி விரித்து அதற்குமேல் ஜமுக்காளம் விரித்து தலையணை வைத்திருக்கும். ஆயா கட்டிலுதான் வெதுவெதுன்னு இருக்கு என்று பொழுது சாய்ந்தால் அதில் ஏறி விளையாட வந்துவிடுவார்கள். படுத்துக்கொண்டு வானில் நட்சத்திரங்களை எண்ணுவார்கள். வீட்டின் வெளிச்சுவரை ஒட்டியே ஒரு ஒட்டுத்திண்ணை உண்டு. அங்கு அமர்ந்துதான் ராச்சோறு தின்பார் கந்தாயி அம்மாள். வட்டலில் சாப்பிட மாட்டார், கிண்ணியில்தான் சோறு உண்பார். சோற்றை உருண்டையாக உருட்டி கிண்ணியில் இருந்து ஒரு வீச்சு, சோற்று உருண்டை நேராகப் போய் வாயில் விழும். அப்படி எச்சில் படாமல் சாப்பிடுவதுதான் அவர் வழக்கம். சமயத்தில் பிள்ளைகளும் ஆயா சோறு வாங்கித் திங்க சூழ்ந்துகொள்வதுண்டு.

கந்தாயி படுக்கையைச் சுருட்டி வைத்துவிட்டு சும்மா சாத்தியிருக்கும் கதவைத் திறந்துகொண்டு உள்ளேபோனால் அந்த வீடு விழித்துக்கொள்ளும். காப்பிக்கு பற்ற வைக்கும் அடுப்பு, இட்லி சுட சோறு வடிக்க குழம்பு வைக்க, டீ போட என்று நாளெல்லாம் எரிந்து கொண்டேதான் இருக்கும். செல்லம்மா மூத்த மருமகள். அவள் வீட்டிற்கு வந்த முதல்நாளே மாமியார் சொல்லித் தந்த முதல் பாடம் எப்பவும் ஒராள் சோறு மிச்சம் இருக்கறாப்ல சமைக்கணும். யாராவது ஒருவர் எந்த நேரத்திலும் சாப்பாட்டிற்கு வந்துகொண்டே இருப்பார்கள். அப்படியே சோறு மிச்சமானா மாடு குடிச்சுட்டு போகுது என்பார். ஆரம்பத்தில் செல்லம்மா பயந்துதான் போனாள். திருமணத்துக்கு முன்பு அவள் சமையல்கட்டுப் பக்கம் போகவே மாட்டாள். காட்டு வேலை செய்யச் சொன்னால் சலிக்காமல் செய்பவளுக்கு வீட்டுவேலை என்றாலே ஆகாது. மாமியார்தான் வாழைத்தண்டில் எப்படி நார் எடுத்துவிட்டுச் சமைக்க வேண்டும் என்பது முதல் அம்மியில் கறிக்குழம்புக்கு மசாலா அரைப்பது வரை அத்தனையும் மருமகளுக்குச் சொல்லித் தந்தார்.

அந்த வீட்டில் கந்தாயிதான் நாட்டாமை. வையாபுரித் தாத்தா பொண்டாட்டி பேச்சை மீறமாட்டார். அவ வந்துதான் பண்ணையம் ஒன்றுக்கு நாளாக பெருகுச்சுன்னு அடிக்கடி சொல்வார். கந்தாயி நல்ல தொலி உளுந்து நிறம். குட்டையான உடல் வாகு. கையில் நகராத மாதிரி இறுக்கிப் பிடிச்சாப்ல வளையல், உக்கழுத்து செயினு பதக்கம், காது பொன்னு, கொப்பு என்று கருத்த மேனியில் தங்கம் எடுப்பாக மின்னும். வையாபுரி பொண்டாட்டிக்கு நேர் எதிர் நிறம். மச்சம் கூட செவப்பா இருக்கும். நல்ல உயரம். அந்த காலத்துல பொண்ணு பாத்து பிடிச்சிருக்கா என்றெல்லாம் கேட்டு நடக்கறதில்ல கல்யாணம். பெரியவங்க பாத்து முடிவு பண்ணினா கட்டிக்கிட்டு பொழப்பு பொழைக்கணும். எல்லாரும் உள்ளூர்ல, இல்லனா அக்கம்பக்கம் சொந்தத்துல பாத்து கட்றதுதான். வெவசாயம் பாக்க பையனுக்கு வலு இருக்கா, சோறாக்கிப் போட்டு பிள்ளப் பெத்து புருசனோட காட்ல வேலைல ஒத்தாசையா இருப்பாளா பொண்ணு, அவ்வளவுதான் எதிர்பார்ப்பு.

நெல்லு, கடலை, சோளம், எள்ளு எதுனாலும் கந்தாயிய கலந்துக்காம வெல பேசறதில்ல. இப்ப ரெண்டு பசங்களும் தலையெடுத்த பின்னாடியும் அம்மாவ ஒரு வார்த்தைக் கேட்டுக்கிட்டுதான் எதுனாலும்

செய்யறது.

ஏங்ப்பா... பசு மாடு ஒன்னு வெலைக்கு வருது, வாங்கிடலாமா?

ஒங்கம்மாவ ஒரு வார்த்தை கேட்டுக்க கண்ணு.

நெல்லு யாவாரி வராராம். பெரியவனே ஒரு எட்டு வண்டி எடுத்துட்டு போய் அம்மாவ தோட்டத்துக்கு கூட்டியா.

இப்படி எல்லாவற்றிற்கும் கந்தாயியை கூப்பிட்டாக வேண்டும் வையாபுரிக்கு.

இன்னைக்கு குச்சி காடு (மரவள்ளி கிழங்கு காடு) களை வெட்டு இருக்கிறது. மேற்காலக் காடு எருவடிக்கிற வேலையும் இருக்கு. எரு அடித்து நிலத்தை நிரவி வைத்தால்தான் தை மாசம் எள்ளு தெளிக்கத் தோதாக இருக்கும். வெள்ளாமை நிலம் இருபத்தி நாலு ஏக்கர், மேட்டாங்காடு இருபத்தி நாலு ஏக்கர். எருமை மாடு ஏழு எட்டு உருப்படி, பசுமாடு ஐந்து, உழவு மாடு நான்கு. உழவு மாடுகளையும் எருமைகளையும் மேய்ச்சலுக்கு ஓட்டிப்போவதில்லை. அவை சீராகத் திரும்பிவரத் தெரியாதவை. கொட்டாய்லயே கட்டிப்போட்டு கூளம் புடுங்கிப் போட்டால் அசை போட்டுக்கொண்டு படுத்துக் கிடக்கும். பசுமாடுகள்தான் மேய்ச்சலுக்குப் போகும். பசுமாடுகளைக் காலையிலேயே அவிழ்த்து ஓடை வரை கொண்டுபோய் விட்டால் அவைகளாகவே ஊரையொட்டி உள்ள கரட்டில் ஏறி மேய்ந்துகொள்ளும். குடிக்க ஆங்காங்கே குட்டையில் கிடக்கும் தண்ணீர் போதும். எல்லோரும் மாட்டை அப்படி அவிழ்த்துவிட்டு விடுவதுதான் வழக்கம். மேய்ந்துவிட்டு நூல் பிடித்த மாதிரி பொழுதுசாய கரடுவிட்டு மாடுகள் இறங்கி வரும். பண்ணை ஆட்கள் ஓடையில் போய் ஓட்டிவந்து கொட்டகையில் கட்டினால் போதும். வெகுசில சமயங்களில் மாடு மேய்ச்சல் மும்முரத்தில் வழிமாறி விளைச்சல் நிலங்களில் இறங்கி விடுவதுண்டு. அப்படி வரும் மாடுகளை அந்தக் காட்டுக்காரர்களே ஓடைக்கு விரட்டி விட்டுவிடுவார்கள், அல்லது பிடித்துத் தொண்டுப்பட்டியில் அடைத்துவிடுவார்கள். தொண்டுப்பட்டியில் அடைத்தால் பின் தண்டம் கட்டித்தான் மாட்டை ஓட்டிவர வேண்டும்.

கந்தாயி காப்பித் தண்ணியை அவசரமாகக் குடித்துக்கொண்டிருந்தார். அவருக்கு வேலைதான் முக்கியம். சோறு தண்ணி எல்லாம் ரெண்டாம் பட்சம்தான். சமயத்தில் நேரமாகி விட்டால் அவசரத்திற்கு காப்பியைக் கிண்ணியில் ஊற்றி ஆற வைத்து குடித்துவிடுவார், பச்சைத் தண்ணீரை சுடு காப்பியில் கலந்து குடித்துவிட்டு ஓடிய நாட்களும் உண்டு.

கந்தாயி குரல் உசத்தி வேலைக்கு ஆட்களை கூப்பிட்டபடியே நடப்பார்.

'ஏண்டி தனம் இன்னுமா சோறு ஆக்குற? வெயிலு வரத்துக்குள்ள பாதி காடு முடிக்கணும், சீக்கிரம் வா'.

'ஆத்தா ரெண்டு வாய் சாப்ட்டு வரேன். நீ போய்கிட்டே இரு பின்னாடியே ஓடியாந்துடறேன்'

இப்படி வீடு வீடாக விரட்டிக்கொண்டே போவார்.

ரொம்ப கறாரான பொம்பளை.

அன்று மாலை வரை தோட்டத்தில் வேலை ஓயாமல் நடந்துகொண்டிருந்தது. வையாபுரி தாத்தா எருவடிக்கும் வயலைச் சுற்றி வந்தபடியே இருந்தார்.

'ஏங்க... செத்த கொட்டாய்ல உட்காரலாம்ல?! மார்கழி மாசத்துல இப்படி வெயில் மண்டைய பொளக்குது. எல்லாம் கலிகாலம் இப்படி பருவம் தப்பி போய் கெடக்குது'

கந்தாயி சலித்தபடி தாத்தாவுக்கு தண்ணீர் தந்துவிட்டுப் போனார்.

பொழுது சாய வையாபுரி தாத்தா உள் திண்ணையில் படுத்திருந்தார்.

'ஏங்க... சீக்கிரமே படுத்துட்டீங்க?!'

'களப்பா இருக்கு... என்னவோ உடம்பே நல்லால்ல...'

‘மத்தியானம் சோறு தின்னுட்டு கொஞ்சம் படுக்க சொன்னேன் கேட்டீங்களா? வெய்யில்ல வரப்புல சுத்தற வயசா நமக்கு? தைலம் கொண்டாந்து காலுக்கு தேய்க்கட்டுமா?’

‘இல்ல இல்ல... தூங்கி எழுந்தா சரியா போவும்’

வையாபுரி கழுத்தை தொட்டுப் பார்த்தார் கந்தாயி.

‘காச்சல் ஒன்னும் இல்ல. சரி தூங்குங்க... நா வேணா கட்டுல இங்க எடுத்து போட்டுக்கவா இன்னைக்கு?’

‘ஏல... அதெல்லாம் ஒன்னும் வேணாம். நீ போய் படு’

‘சரி முடியலன்னா கூப்புடுங்க’

கந்தாயி கொஞ்சம் ரசஞ்சோறு மட்டும் சாப்பிட்டுவிட்டு கட்டிலில் வந்து அமர்ந்திருந்தார். அப்போது திலகம் அரக்கபறக்க ஓடி வந்தாள். ஒட்டடை அடிக்க, வீடு கழுவ, கம்பு இடிக்க, விசேஷ நாட்களில் பாத்திரம் கழுவ, கூடமாட ஒத்தாசைக்கு என திலகத்தைத்தான் கூப்பிடுவது வழக்கம். ஒத்த வயசு என்பதால் மருமகள்களுடன் நன்றாக ஒட்டிக்கொண்டு உரிமையாக வீட்டிற்கு வந்துபோகிறவள்தான் திலகம்.

‘ஆத்தா எம்புருசன் என்ன வெட்ட அருவாளோட தேடுறானாம், நான் இங்க ஊட்டுக்குள்ள இருந்துக்குறேன் ஆத்தா... அந்தாள் வந்தா சொல்லிடாதிங்க...’ அவள் படபடத்தாள்.

‘ஏண்டி அவனுக்கென்ன கிறுக்கா புடிச்சிருக்கு? சரி நீ உள்ள போ’.

திலகம் திமுதிமுவென்று மாடிப்படி ஏறி ஓடி மேல் அறையில் அடுக்குப்பானை மறைவில் அமர்ந்துகொண்டாள். ரெண்டு அடுக்காகக் கட்டப்பட்ட மச்சு வீடு அது. மேல்மாடியில் ஒரு பகுதியில் தளம் பலகையால் போடப்பட்டிருந்தது. அங்குதான் புளி, மிளகாய், எண்ணை என்று அடுக்குப்பானையில் போட்டு வைப்பது. அந்தக் கலவையான வாசனைக்கு இடையே திலகம் அமர்ந்து விசும்பிக்கொண்டிருந்தாள்.

சற்று நேரத்திற்கெல்லாம் திலகத்தின் புருஷன் வாசலில் வந்து நின்றான்.

‘ஆத்தா... அந்த சிறுக்கி இங்க வந்தாளா?’

‘யார்டா அது, மாணிக்கமா? இந்நேரத்துல அவ ஏண்டா இங்க வரப்போறா? ஏன் என்ன விசயம்?’

மாணிக்கம் மடிந்து தரையில் அமர்ந்துகொண்டான். அவனுக்கு ஆத்திரத்தில் மூச்சு வாங்கியது. ஆதரவுக்கு கந்தாயி உட்கார்ந்து இருந்த கட்டில் காலைப் பிடித்துக்கொண்டான்.

‘ஆத்தா... அந்த முண்ட பால்கார மணிய சேத்துக்கிட்டு இருக்கா... அவள நாளா வகுந்தா தான் என் ஆத்திரம் தீரும்’ அவன் நெஞ்சு ஏறி ஏறி இறங்கியது.

‘அடக் கூறுகெட்ட பயலே யார்றா சொன்னது உனக்கு? நீ பாத்தியா?’

‘இல்ல ஆத்தா ஊர்ல அரசல் புரசலா பேசிக்குறாங்க. என் காதுக்கு இப்பதான் வந்துச்சு’

‘ஊர்ல ஆயிரம் சொல்லுவாங்க. உனக்கு எங்கடா போச்சு புத்தி? ஏண்டா ஒருநாளாச்சும் அவள அடிக்காம இருந்திருக்கியா? குடிக்காம ராத்திரி ஊட்டுக்கு போய் இருக்கியாடா? எனக்கு ஒன்னும் தெரியாதுன்னு பாத்தியா?’

‘ஆத்தா நான் இப்பல்லாம் குடிக்கிறது இல்ல’

‘வாய மூடுடா... அவ ஒத்தைல பாடுபட்டு உனக்கும் கஞ்சி ஊத்துறா... என் கிட்டயே அவ கடன் பாக்கி எவ்ளோ நிக்குதுன்னு தெரியுமா உனக்கு?’

அவன் பேசாமல் தலையை தொங்கப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

‘ஏண்டா எவனோ சொன்னான்னு இப்படி ஊர் பாக்க பொண்டாட்டி மானத்த ஏலம் போட்டுக்கிட்டு வர்றியே உனக்கு புத்தி இருக்குதா?’

அவன் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

‘பொண்டாட்டிய தப்பா பேசுனா அது உனக்கும் சேத்துதானடா மானக்கேடு... அவள வெட்றதுக்கு அருவா தூக்கிக்கிட்டு வந்திருக்கியே உனக்கு என்னடா யோக்கியதை இருக்கு? அவள வெட்டிட்டா பொழப்பு திரும்ப வந்துடுமா... தப்புடா... பொம்பள பாவம் சும்மா வுடாதுடா... மாணிக்கம் பேசாம போய் படு... படுத்துக்கிட்டு நல்லா யோசனை பண்ணி பாரு. இன்னைக்காச்சும் மனுசராட்டம் யோசிடா. நம்ம என்ன கொற வச்சோம்னு யோசிச்சு பாரு... அவ வந்துடுவா... எங்க போகப் போறா... ஊட்டுக்குதானே வருவா. காலைல பேசிக்கலாம். இப்ப போ’.

மாணிக்கம் அருவாளை அங்கேயே போட்டுவிட்டு எழுந்து போனான்.

செல்லம்மாதான் சிறிது நேரத்தில் கந்தாயியிடம் வந்தாள்.

‘அவுரு போய்ட்டாராமா?... அம்மா... நான் ஒன்னு சொல்லுட்டா... மாணிக்கம் சொன்னது நெசந்தான் போலமா... களைவெட்ற காட்ல கூட பேசிக்கிட்டாங்க’.

மருமகள் பேசி முடிக்கும் வரை அமைதியாக இருந்த கந்தாயி பேசத் தொடங்கினார்.

‘இங்க பாரு செல்லம்மா, “பொண்ணுக்கு பொழ (பிழை) பேசக் கூடாது” “கண்ணால கண்டாலும் மண்ணால மறைக்கணும்” ‘பொம்பள பொழப்பு செல்லம்மா..’ அவ மனசுல என்ன கொற கெடக்கோ! நம்மள மாதிரி பொம்பள ஜென்மங்க மனசு எல்லாத்தையும் போட்டு மூடிவச்சு மூடிவச்சு நொதிச்சு போய்க்கெடக்கு. அதையெல்லாம் திறந்து வெளிய கொட்டுனா ஆம்பளங்கற பவுசு எல்லாம் மண்ணாப் போய்டும். நாம பூட்டி வச்சதாலதான் பொழப்பு ஓடுது... அவ எங்க?’

‘மேல மாடியில... அழுதுகிட்டு இருக்கு...’

‘போய் கீழ கூட்டியாந்து சோறு போடு. ராத்திரிக்கு இங்கயே படுக்கட்டும். விடிஞ்சதும் ஊட்டுக்கு போவட்டும்’

செல்லம்மா எழுந்து போனாள். கந்தாயி அம்மாள் கட்டிலில் சாய்ந்தார். மல்லிகைப் பந்தலை விரித்தது போல வானம் நட்சத்திரங்களை வாரி இறைத்திருந்தது.

suji19477@gmail.com ■




கவிதை

சன்மது

காலம்தாழ்த்தி புரிந்தவை

புரட்டிக்கொண்டபோது
இலகுவாக நெளிந்தவை
இப்போது வெகுவாக கனத்து
நின்று புரள்கிறது தாழ்கள்
வார்த்தைகளின் ஆழம் புரிந்துவிடுவது
போல இருந்து மறைகிறது
மறைந்துகொள்ளும் இடத்தில்
நான் நிறைந்துகொள்கிறேன்
நீண்டுகொள்கிற ஒரு கேள்வியாய்
விடை இடைவெளிக்கொள்ளாமல்
நிதானமாக என்னை படித்தபோது
சற்றும் யோசிக்காமல் உடல்முழுவதும்
முளைத்துக்கொண்ட செவியில்
தலைத்த ஈரம் காய்ந்து
வடிவதற்குள்
புதிய பற்களாய் முளைத்து
சிரித்தது முதுமை

karthikedu17@gmail.com ■



கட்டுரை
மு.இராமசுவாமி

‘அச்சத்தால் வீரம் கெடும்’- ‘அச்சப்படும் கோழை கெடும்’- ‘முற்றினால் மூளை கெடும்’!

எப்படித்தான் மூடி மறைக்கப் பார்த்தாலும் மனசெங்கும் அச்ச ரேகைகள் திரளும் மேகக் கூட்டங்களாய், வெப்பச்சூட்டைக் கணந்தோறும் உள்ளில் பெருக்கிக்கொண்டேயிருந்தன. மூச்சுக்காற்று முனை முறிந்ததுபோல் முட்டுச்சந்துக்குள் அதன் கீற்றுகள் சிராய்த்து, ரணத்தைக் கசியவிடுவதாய் உணர முடிந்தது. வெற்றிப் பெருமிதத்தில் சுற்றித் திரிந்த எனக்குள் அச்சம் உள்நுழைந்தது எவ்வாறு? 2024 ஏப்ரல் 19 இல் முதல் கட்டத் தேர்தல் தொடங்கி 44 நாட்கள் கழித்து ஜூன் 1 இல் ஏழாம் கட்டத் தேர்தல் முடிய, அதுவரையுமான காத்திருத்தல்கள் / அதற்குள் நம் கண்முன் கடந்துசென்று கொண்டிருக்கிற, மேலிருந்து கீழ்வரையுமான வில்லங்க விசயங்கள் / உச்சநீதிமன்றத்தில் படிவம் 17C கணக்கை வழங்கவே முடியாது என்று சொன்ன தேர்தல் ஆணையம் மறுநாளிலேயே - தேர்தல் பத்திர வழக்கில் இந்தியா மாநில வங்கி பல்டி அடித்ததுபோல் - அதுவாகவே வெளியிடுவதென்றால், அது எவரொருவரையும் பதட்டப்பட வைக்கத்தானே செய்யும்! தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் ’இறை’யாக நாட்டு மக்கள் கருதும் நாட்டின் தலைமை அமைச்சர் / புதிதாய் இறங்கி வந்திருக்கிறதாய் (தேவதூதர்) தானே அவிழ்த்துவிடும் அவதூறுப் பேச்சுகள் ஆகியன மக்களைப் பக்குவப்படுத்த முனையாமல் பதட்டப்படவே வைக்கின்றன. ‘முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப்படும்’ என்கிறார் வள்ளுவர்! ‘முறைசெய்து காப்பாற்றுதல்’ இன்றி, ‘முப்பொழுதும் கலவர’த்திற்குள்ளேயே மக்களின் மனசை வைக்கப் பார்ப்பது -‘பரிவு’ இன்றிப் பதட்டத்திற்குள்ளேயே மக்களை வைத்திருப்பது, நாட்டின் உயரிய அதிகார பீடங்களுக்கு எப்பொழுதும் அழகேயில்லை. பதட்டம் அச்சத்தின் மன வெளிப்பாடு! அச்சம் குடியிருக்கும் மனதில் பார்க்கும் / கேட்கும் எந்தச் சிறு சிறு அசைவுகளும் சந்தேகங்களையே பூதாகாரமாய் உருப்பெருக்கிக் காட்டும்.

‘அஞ்சுவது அஞ்சாமை பேதைமை’ என்கிறார் வள்ளுவர்! பழி, பாவம், கேடு ஆகியவற்றிற்கு அஞ்சுவது, ‘அறிவார் தொழில்’ என்பது அதன் பொருள்! ஆனால் இதையெல்லாம் கருத்திலேயே கொள்ளாதவர்களை / கலவரத்தை ஏற்படுத்த எந்த எல்லைக்கும் செல்பவர்களை – ‘காவி’க் காடையர்களை - எப்படித்தான்

எதிர்கொள்வது? ‘அச்சம் என்பது மடமையடா / அஞ்சாமை திராவிடர் உடைமையடா’ என்பது கவிஞர் கண்ணதாசன்! பழி பாவத்திற்கு அஞ்சுவதும் ‘ஆறிலும் சாவு, நூறிலும் சாவு, தாயகம் காப்பது கடமையடா’ என்பதை நெஞ்சுக்குள் நிறுத்துவதும், ‘அச்சமில்லை அச்சமில்லை அச்சம் என்பதில்லையே உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும், அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பது இல்லையே’ என்பதை நம் எதிரிக்கு எப்போதும் உணர்த்திக்கொண்டே இருப்பதும், இப்பொழுது அவசியமாயிருக்கிறது. ‘வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி, மக்களின் மனதில் நிற்பவர் யார்? மாபெரும் வீரர் மானங் காப்போர் சரித்திரம்தனிலே நிற்கின்றார்’ என்பதுவே நமக்கான உண்மை! அச்சப்படத் தேவையில்லை - அது கோழைகளின் குணம்! பெருமிதத்திற்கு (வீரம்) எதிரானது அச்சம்! நமக்குத் தைரியம் தர, ஒரு ‘குன்ஹா’வைப் போல், ஒரு ‘சந்திரசூட்’டைப்போல், இன்னும் இதுபோன்ற ஒருவரை வரலாறே தானாக முன்வந்து நமக்கு அனுப்பிவைக்கும் என்றே நம்புவோம்! இது நமக்கு வழங்கப்பட்டிருக்கிற பெரும் சவால்! சனநாயகத்தின் நல்ல பக்கங்களை அரிக்கத் துணிபவர்களை எதிர்த்து, நாம் நடத்துகிற மானம் காக்கிற போர்!

மக்கள் நலன் நோக்காமல், இந்துமதச் சனாதன நலனை மட்டுமே நோக்கமாக்கிச் செயல்படும் மதவெறி பாசிஸ்டுகளை நாம் துச்சமாகவேதான் இதுவரையும் கருதிக்கொண்டிருந்தோம். அன்பை நேசிக்கிற மனிதர்கள் அறிவைக் கொண்டும் சமூகத்தை யோசிப்பார்கள் என்றும் நினைத்திருந்தோம். அந்த அறிவு, ‘குடிசெய்வல் என்னும் ஒருவர்க்குத் தெய்வம் மடிதற்றுத் தான்முந்துறும்’ என்றும் நம்பியிருந்தோம்! - அதன் பொருள், ‘என் குடியை உயர்த்துவேன் என்றேண்ணிக் காரியங்களில் இறங்கும் ஒருவருக்குத் தெய்வமே ஓடிவந்து உதவும்’ என்பதாயிருக்கும். கலைஞரின் உரை, ‘தன்னைச் சேர்ந்த குடிமக்களை உயர்வடையச் செய்திட ஓயாது உழைப்பவனுக்கு, தெய்வச்செயல் எனக் கூறப்படும் இயற்கையின் ஆற்றல்கூட வரிந்து கட்டிக்கொண்டு வந்து துணைபுரியும்’ என்பதாகும். ஆனால் சங்கிகள் நிலையோ பொய்யிலேயே கட்டப்பட்ட ஊடகவலைக் கோட்டைக்குள் இருந்துகொண்டு, உண்மையின்மீது கல்லெறிந்துகொண்டே இருப்பதுதான் - பொய்யையே எந்தக் கூச்ச நாச்சமுமின்றி, அக்கம்பக்கம் பாராமல் உண்மையைப்போல் உரத்துக் கம்பீரமாக, முதிராப் (முஜீரா) பேச்சை வேகவேகமாகப் பேசிக்கொண்டே இருப்பதுதான்! இந்த அசாதாரண, நினைத்துப் பார்க்கவே முடியாத அபாயகரமான சக்தி / பயிற்சி, அவர்களுக்கு எந்த ஊரிலிருந்து கிடைக்கிறது என்பது புரியவில்லை. பொதுவில் சங்கிகளுக்கு, மூளை இருக்கவேண்டிய இடத்திலே அது இல்லை என்பதுதான் கருத்து; அது கொழுப்புக் கட்டியாய்த் தொப்புளுக்குக் கீழே உறைந்து போய்க் கிடக்கிறது என்பதாய் நாமும் அசட்டையாய் அங்கலாய்த்துத்தான் கிடந்தோம். மதுரை நந்தினி ஆனந்தன் குடும்பத்தார் அடுத்தடுத்து கொடுத்து வந்த EVM எச்சரிக்கையைக்கூட நாம் அப்பொழுது பெரிதுபடுத்தவும் இல்லை. அதையும் நமக்குள் மட்டுமே கூடிக்கூடிப் பேசிக் கலைந்தோம். இப்பொழுது உச்சநீதிமன்றம் புதிய தேவதூதரால் பிடித்து வைக்கப்பட்ட தேர்தல் ஆணையத்தைக் கூண்டுக்குள் நிறுத்திவைத்துக் கேட்கிற கேள்விகளைப் பார்க்கையில் இருட்டுச் சந்துக்குள் நாம் எதனிடமோ மாட்டிக் கொண்டிருப்பது மெல்லிதாய் நமக்குப் புரிபடத் தொடங்குகிறது. அதுவே அச்சப் பீதியை நம் மூளைக்குள் நகர்த்திக் கொண்டேயிருக்கிறது.

இதுவே சனநாயக மீட்பிற்கான / அண்ணல் அம்பேத்கர் உருக்கொடுத்த அரசியலமைப்புச் சட்டத்தைக் காப்பதற்கான நமது இறுதிப் போர்! இதில் நாம் வெற்றி பெற்றே ஆக வேண்டும்! நம்மைத் திசைமாற்ற அவர்கள் வானத்தைக் கைகாட்டி, வேடிக்கை வித்தைகள் காட்டிக்கொண்டே இருப்பார்கள். முதலில் அவர்கள் ராமரைக் கைகாட்டினார்கள்; அதன்பின் ராமர் கோவில் என்றார்கள்; ரஹீம் நமக்கு ஆகாது என்றார்கள்; ரஹமத்துல்லா மேல் வெறுப்பை உமிழ்ந்தார்கள்; எருமைகள் பாதிக்குப்பாதி பறிபோகும் என்றும் மிரட்டிப் பார்த்தார்கள்; தாலியே இருக்காது என்றார்கள்; பாகிஸ்தானியரின் பகல்வேடம் இது என்று பிதற்றினார்கள்; தமிழர்களை அரக்கர்கள் / திருடர்கள் என்று பழம் ஆரிய பல்லவியைப் பாடி, வானத்தைக் கைகாட்டிக் குரைத்துக்கொண்டேயிருந்தனர். நாமும் வானத்தைப் பார்த்தே காலத்தைக் கரித்துக் கொட்டிக் கிடந்தோம் - பூமி நம் காலின் கீழே மெல்ல நழுவுவதைப் பார்க்க மறந்தோம். ராமரைக் கைகாட்டியவர் இப்பொழுது, ஆள்காட்டி விரலைத் திருப்பி, ராமரால் (பரமாத்மா) அனுப்பப்பட்ட தேவதூதன் நான்தான் என்கிறார். சூழ்ச்சியால் வாலியை மறைந்துநின்று கொன்ற ராமன் யுத்த அறத்தையும் மற்ற அறங்களையும் கொன்றே அழிப்பான் என்பதை உணராமல் நாம் மக்கள் சக்தி, சனநாயகம் எல்லாருக்கும் எல்லாமும் என்கிற சிந்தனை பலம் - அனைத்தும் நம் பின்னே என்று வற்றாப் பெருமிதம் கொண்டு திரிந்திருந்தோம். எதிரியின் வஞ்சகச் சூழ்ச்சியை / அதன் அடிதாங்கும் அதிகார ரத, கஜ, துரக, பதாதிகளின் செய்வினையை எதிர்கொள்ளும் வகைதேடி, திகைத்து அலைந்திருந்தோம்! விபீடணர்கள் இங்குமிருந்தாலும் அவர்கள் நம்மை மிகச் சரியாகவே, நெஞ்சு நிமிர்த்தி நிற்கும் இராவணனாக மட்டுமே பார்த்தார்கள்! - நாம் அவர்களைச் சூழ்ச்சிக்கார ராமனாகப் பார்க்காது, அசட்டையுடன் ஏளனம் மட்டுமே செய்துகொண்டும், கன்னத்தில் போட்டுக்கொண்டும் இருந்தோம். மக்கள் பலம் / கூட்டணி பலம் நம்மிடமிருக்கிறது யாரென்ன செய்துவிட முடியும் என்று மகிழ்வுடன் சிறகு விரித்தோம்! இப்பொழுது திடீர் அச்சம் வர என்ன காரணம்? தேர்தல் ஆணையம் முடிவை அறிவிக்கும் போதாவது, நியாயத்தின் பக்கம் நிற்குமா என்ற ஐயம் எழுப்புகிற நம்பிக்கை வறட்சிதான் இந்த 'அச்சம்' உள்ளத்தில் படரக் காரணம்!

சனநாயகம் என்பது மக்களைத்தான் நாயகராகக் கொண்டாடுகிறது. நடைமுறையில் பல கோளாறுகள் இருப்பினும் அதுதான் உண்மையில் மக்கள் அதிகாரத்திற்கு வழிநடத்திச் செல்லக்கூடியது. நம் அரசமைப்புச் சட்டத்தின் முன்மொழிவு, '*We the people of India, having solemnly resolved to constitute India into*' என்றுதான் தெளிவுபடத் தொடங்குகிறது. அது, இறையாண்மைமிக்க, சோசலிச, மதச்சார்பற்ற சனநாயகக் குடியரசாக விளங்கும் படியாகத்தான் - சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய அறப்பண்புகளைத் தன் விழுமியங்களாகத் தன் முகப்பில் உறுதிபடத் தெரிவித்திருக்கிறது. ஆயின், மக்களால் / மக்களுக்காகத் தேர்வு செய்யப்பெற்ற ஓர் அரசு மக்களை மறந்து, தன் அபரிமித அதிகாரத்தால், அவர்களின் வருணாச்சிரம வெறுப்பு அரசியலுக்கு, வாகாய் வளைந்து கொடுக்கக்கூடிய விதத்தில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தையே, தன் காலில் மிதித்து நெளிக்கப் பார்க்கிறது. இப்பொழுதே, புதிய 'தேவதூதர்', ஜூன் 10 ஆம் தேதி பதவிப் பிரமாணம் எடுக்கப் போவதாயும், 'சார்க்' நாட்டுப் பிரதிநிதிகளில் யார் யாரை அவ்விழாவிற்கு

அழைக்கலாம் என்றும் வெளிப்படையாகப் பேச ஆரம்பித்துவிட்டதாக, 27-05-'24 நாளிட்ட பாலிமர் செய்தி கூறுகிறது. சென்னை அமைந்தகரையில் அதன் தமிழகப் பொறுப்பாளர்கள் கூடிய அன்றையக் கூட்டத்தில் அதன் மாநிலத் தலைவர், 'இனி வடக்கு / தெற்கு என்று எந்த பிரிவினையும் இருக்காது. தெற்கிலேயே மிகப்பெரிய வெற்றியைப் பெறுவோம். மூன்றாம் முறையாக மிகப்பெரிய வெற்றியுடன் நாம் ஆட்சி அமைக்கப் போகின்றோம். ஜூன் 4 இல் வெற்றிவிழாவைக் கொண்டாட இப்போதே தயாராகுங்கள்' என்று அறைகூவல் விடுக்கின்றார். இது எப்பொழுதும் அள்ளிவிடும் அவரின் 'தமாஷா' பேச்சு என்று தள்ளிவிடவும் இப்போதைய அச்சச் சூழலில் முடியாதிருக்கிறது.

அடுத்த முறையும் அவர்களே பீடமேறினால் விலைவாசி உயர்வதாகட்டும், கார்ப்பரேட் டுகளுக்கான கரசேவகமாகட்டும், கல்வியில் மதவாதமாகட்டும், விவசாய விளைபொருட்களுக்கான அடிப்படை விலை நிர்ணயமாகட்டும், தொழிலாளர்களின் உழைப்பு உத்திரவாதமாகட்டும், வகுப்புவாரி பிரதிநிதித்துவமாகட்டும், குடியுரிமைச் சட்டமாகட்டும் - எல்லாம் ஒருசேர மக்களின் கழுத்தைக் கூடுதலாய் நெரிக்கக்கூடும். இவற்றையெல்லாம் மீறி நம் வலியை நாம் கத்துவதற்கான நம் எத்தனிப்புகள் - அரசியலமைப்பு நமக்கு தந்திருக்கிற நம் சனநாயக உரிமைகள் - பாசிசக் கால்களால் கொடூரமாக நசுக்கப்படும். ஸ்டேன்ஸ் பாதிரியார் போலாகும் நம் அனைவரின் நிலையும்! நிச்சயம் மாற்றங்கள் துரிதமாய் நிகழ்ந்துவிடும் - விட்டு விடுதலையாவோம் என்றே மனசு சொல்கிறது - பெருவாரி மக்களின் அதிருப்தி அலைகளைப் பார்த்து! ஆனால் பாசிஸ்டுகள் தங்கள் கையிடுக்கில் மாய்மாலங்களைப் பதுக்கியிருப்பது வெளித்தெரிய வருகையில் அச்சம் படர்ந்து செல்லும் மேக நகருதலாய், இந்த வெயிலின் புழுக்கத்திலும் நம்மை மெல்லக் கவிந்து மூடத்தான் செய்கிறது. அச்சம் என்பது என்ன? அது ஒருவகையான மனப்பிறழ்வு - மண்ணையும் பொன்னையும் ஒக்கவே நோக்குகிற நடுவுநிலை அல்லாதது - உலகத்து நிகழ்ச்சிகளைக் கண்டு / கேட்டு / உணர்ந்து மனதிற்குள் நிகழ்கிற 'நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை' எனும் உள்ளுணர்வுகளின் சதிராட்டம்தான் மெய்ப்பாடுகள் எனச் சுட்டப்பெறும். எட்டும்! - இது உயிர்கள் அனைத்திற்குமே இயல்பானதுதான்! அடிப்படையில் யோசித்துப் பார்த்தால் வெகுளிக்கு (கோபம்) ஆதாரமாயிருப்பதும் இந்த அச்சமாகவே இருக்கும்! சும்மா போகிறவனைப் பார்த்து, நாய் குரைப்பதென்பது அச்சத்தினால் தான் / அரவம் கேட்டவுடன் பாம்பு சீறுவது என்பதும் அச்சத்தினால்தான்! அச்சத்தின் முன்னெச்சரிக்கைப் பொருமலில் மெல்லிய கோபமும் கலந்தேயிருக்கிறது என்பது தெரிகிறது. அச்சம் பிறப்பது எப்படி?

நாடக நிகழ்த்துதலுக்கான இலக்கண நூலான நாட்டிய சாஸ்திரத்தில் 'பயம்' (bhayanaka) எனும் உணர்ச்சிக் குறிப்பு (bhava) பெண்களிடமும், தாழ்வுணர்ச்சி கொண்டவர்களிடமும் வருவதாகச் சொல்லப்படுகிறது. அரசன், மேலதிகாரியின் மனசை ஒருவன் காயப்படுத்துவதனாலும், காட்டிற்குள் தனித்துத் திரிகையில் யானையைப் பார்த்தோ, பாம்பைப் பார்த்தோ அதிர்ச்சி அடைவதனாலும், மழையில் கும்மிருட்டில் ஆந்தையின் அலறல், மிருகங்களின் ஓலம் ஆகியவற்றைக் கேட்பதனாலும் இவை போன்றவற்றால் பயம் தோன்றும் - இதுதான் பயத்திற்கான

உணர்ச்சிக் குறிப்புச்சூழல் (vibhava) என்கிறது நாட்டிய சாஸ்திரம்! அது எப்படி வெளிப்படும் (anubhava) என்றால் கைகால் நடுக்கம், இதயத் துடிப்பு, பக்கவாதம், வாய் உலர்தல், உதட்டை நனைத்தல், வியர்த்தல், உடல் சிலிர்ப்பு, ஆபத்தை உணர்ந்து பாதுகாப்பான இடத்தைத் தேடுதல், பயந்து ஓடுதல், ஓவென்று ஓலமிட்டு அரற்றல் மற்றும் இவை போன்றவற்றால் பயம் வெளிப்படும் என்கிறது நாட்டிய சாஸ்திரம்! இதை அப்படியே நமக்குள் உருவாகியிருக்கிற அச்சத்தோடு பொருத்திப் பார்க்க முடியாதிருக்கிறது. நம் புதிய தேவதூதரின் படாடோபம், தங்கு தடையற்ற நாடகப் பாங்கிலான அவரின் உரை, நடந்துகொண்டிருகிற மனித மாண்புக்குலைவுகள் கூட அச்சம் உருவாக்குவதற்கான இன்னொரு வெளிப்பாடாகவும் இவர்கள் நடவடிக்கைகளால் தெரியவருகிறது. ஆனால் நம்முடைய தொல்காப்பியம் செய்யுளியலின் ஒரு கூறாகவே மெய்ப்பாட்டைப் பார்க்கிறது.

செய்யுள் உருவாக்கத்தில், 'உலகத்தார் உள்ள நிகழ்ச்சி, ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோர் ஆற்றான் வெளிப்படும் மொழிப் பயன்பாடுதான் மெய்ப்பாடு' ஆகும். அது, 'அகவுணர்வுகளை ஆழ்ந்து ஆராயாமலே யாரும் இனிதறியப் புலப்படுத்தும் இயற்புற உடற்குறியாகும். உள்ளுணர்வை உரிய இயற்புறக் குறியால் புலவன் செய்யுளில் புலப்பட அமைத்தல் வேண்டுமாதலின் செய்யுளுறுப்புகளில் மெய்ப்பாடு சிறப்பிடம் பெற்றது. அதனை விளக்கும் பகுதி மெய்ப்பாட்டியல்' என்கிறார் நாவலர் சோமசுந்தர பாரதியார்! மெய்ப்பாடுகள் எட்டில் ஐந்தாவது மெய்ப்பாடாகத் தொல்காப்பியரால் சொல்லப்படுவது, 'அச்சம்' எனும் மெய்ப்பாடு!

அச்சம் எதனால் உருவாகிறது? இன்றைய அறிவியல் யுகத்தில் உளவியல் நிபுணர்கள் பற்பலக் காரணங்களைக் கூற முடியும். தொல்காப்பியம் அச்சம் எனும் மெய்ப்பாடு பிறக்கும் இடங்களாக, 'அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப் பிணங்கல் சாலா அச்சம் நான்கே' என்று நான்கைச் சொல்கிறது. பேராசிரியர், 'தெய்வமும் விலங்கும் கள்வரும் தமக்கு இறைவராயினாரும் என நான்கு பகுதியான் அச்சம் எனும் மெய்ப்பாடு பிறக்கும்' என் கிறார். நாவலர் பாரதியார், 'இறை' - குற்றங்கடிந்தொறுக்கும் வேந்து என்றும், 'அச்ச ஏதுவாம் தம்மிறையையும் (தவற்றை), அதற்குரிய ஒறுப்பாலச்சுறுத்தும் தம் இறையையும் ஒருங்கே 'தம்மிறை' எனச் சுருக்கி, இரட்டுறமொழிதலாகக் கூறுகிறார் என்கிறார். அதாவது, தம் இறை – தம்மை ஆளும் வேந்தன்; தம்மிறை - தான் செய்த பெருங்குற்றம் என்பதாகவும் பொருள் கொள்ளலாம் என்கிறார். ஆயின் பெருங்குற்றம் செய்தால் தெய்வத்தால் / வேந்தனால் தண்டனை உறுதி என்கிற கருத்தால் எழும் அச்சமாகவே அது அமையும். 'அணங்கு', 'வேந்து' ஆகியவை தண்டிக்கும் என்பதால் அச்சம் வரும் என்பது பொருத்தமாய் இருக்கிறது. தம்மிறை என்பதாய், தான் செய்த தவறுக்காய் ஒருவர் வருத்தப்படுதல் உண்டு; அச்சப்படுதல் உண்டா? - அச்சம் இன்னொருவராலேயே / இன்னொரு இடத்திலிருந்தே வரும். நாவலர் தன் தவறுக்காக அச்சப்படுதல் என்று பொருள் கொள்வது முழுமையும் பொருந்தி வராது என்றே தெரிகிறது. ஏனெனில், 'அணங்கு விலங்கு கள்வர்' மூவரும் புறநிலையில் இருந்தே அச்சத்தை ஏற்படுத்துகின்றனர். 'பிணங்கல் சாலா அச்சமென்றதனான், இவை தன்கட்டோன்றலும் பிறன்கட்டோன்றலு மென்னுந் தடுமாற்றமின்றிப் பிறிதுபொருள் பற்றியே வருமென்பது' என்கிறார் பேராசிரியர்! அந்தவகையில் 'இறை' என்பது, 'வேந்து'

எனும் நிலையில் புறநிலையில் இருந்து அச்சத்தை ஏற்படுத்துகின்றது என்பதே பொருத்தமாகவும் அமைகிறது. தன்னிலையில் தான் செய்த தவற்றிற்காகத் தானே அச்சம் கொள்வது என்பது இந்த இடத்தில் அத்தனைப் பொருத்தமாயில்லை. ஈடிபஸ் அரசன்கூட தான் செய்த தவற்றுக்கான தண்டனையை தானே அளித்துக் கொள்கிறான். தற்கொலைகள் அனைத்தும்கூட பிறரை எதிர்கொள்ள முடியாத அச்சத்தினால்தான்!

முதலாவதாக பேய், பிசாசு, தெய்வத்தின் காரணமாக - அணங்கின் காரணமாக - அச்சம் வருகிறது என்று தொல்காப்பியம் சொல்கிறது. நாத்திகர்கள் இவற்றை ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தபோதும் மக்கள் இவற்றை நம்பத்தான் செய்கின்றனர் என்பதால் இதையும் கணக்கிற்குள் கொண்டுவர வேண்டியதிருக்கிறது. இன்றைய நிலையில் புதிய ‘தேவதூத’ரின் (அணங்கு - பேய், பிசாசு என்று கொண்டாலும் பிழையில்லை) கைப்பாவையாகப் பட்டவர்த்தனமாகச் செயல்படும் தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கைகளைப் பார்க்கையில், தேர்தல் முடிவுகள் என்ன ஆகுமோ என்கிற அச்சம் எப்படித்தான் மூடி மறைக்கப் பார்த்தாலும், நமக்குள்ளே ஒரு தும்மலைப்போல் திடீரென்று வந்து நம்மை நிலைகுலையச் செய்துவிடுகின்றது. திடீரென்று ஆணையம் ஒருகோடி வாக்குகளைக் கூட்டிக் கணக்குச் சொல்லும்போது, அதில் நாலரை லட்சம் தமிழ்நாட்டில் கூடியிருக்கிறது என்பதாய்ச் செய்தி வருகையில் ஏப்ரல் 19/20 ஆம் தேதியே, ‘என்னுடைய ஒரு இலட்சம் வாக்குகளைக் காணோம்’ என்று இங்கு ஓலங்கள் எழுந்ததும், ஓலமிட்டவர்கள் இப்பொழுது அமைதியாய் இருப்பதும், வெற்றிவிழா கொண்டாடத் தயாராயிருங்கள் என்று அறைகூவல் விடுவதும், அச்சத்தை நம் உள்ளத்தில் அழுத்தமாய் எழுதி எழுதியே மேற்செல்கிறது. பதட்டமின்றி அவர்கள், தியான முகத்துடன் நம்மிடம் மட்டும் பதட்டத்தைப் பற்றவைத்து விடுகின்றனர். ஆக, ‘அணங்’கின் அடிப்பொடிகளின் செயல்பாடு நமக்குள் அச்சத்தை விதைக்கிறது என்பது ஒருவகையில் உண்மைதான்!

அடுத்து சிங்கம், புலி, கரடி, பாம்பு எனும் ‘விலங்கு’கள் மூலம் அச்சம் வருகிறது என்றும் பொருள் கொள்ளலாம். ஆனால் குஜராத்தில் சங்கிகளால் ’பில்கிஸ்பானு’ அடைந்திருக்கிற குரூரம் / மணிப்பூரில் மனிதாபிமானமற்று நிகழ்ந்திருக்கிற நிர்வாணக் கொடூரம் / மாட்டுக்கறி வைத்திருந்ததாக உத்தரப்பிரதேசத்தில் அக்லக்கைக் கொன்ற கொலை பாதகம் / அறி =வுஜீவிகளான மராட்டியர்கள் கோவிந்த் பான்சாரே, நரேந்திர தபோல்கர், கன்னடியர்கள் கல்புர்கி, கௌரி லங்கேஷ் ஆகியோர்மீதான ஒரேமாதிரியான கொலைவெறி – இவற்றின் காரணமாய் சமூகத்தில் விரிந்து பரந்திருக்கிற அச்சம் விலங்குகளால்கூட ஏற்படுத்த முடியாதது. அது மூர்க்கத்தனம் கொண்டது. விலங்கைவிடவும் கூடுதல் மிருக புத்தி (விலங்கு மனம்) கொண்டவர்களால் உருவாகும் இவ்வகை அச்சத்தை, ‘விலங்கு’ மூலம் வரும் அச்சம் என்று தொல்காப்பியர் குறிப்பிடுவதோடு இணைத்துத்தான் பார்க்க வேண்டியதிருக்கிறது.

அடுத்து தொல்காப்பியர் சொல்வது கள்வரால் வரும் அச்சம்! அப்பாவி மக்களின் வங்கிக் கணக்கில் தங்கிப்போன பணத்தைக் கொள்ளையடித்துக் கார்ப்பரேட்டுகளுக்குத் தாரை வார்க்கிற பகற்கொள்ளை / பிறப்பு முதல் இறப்பு வரையும் ஜிஎஸ்டி வரி வசூல் கொள்ளை / 10% EWS மூலம் சமூகநிலையிலும் கல்விநிலையிலும் பின்தங்கி இருக்கிற மக்களின் கல்வி / வேலைவாய்ப்புகளைச் சுரண்டிக் கொள்ளை அடிப்பதால் உருவாகியிருக்கிற அச்சம் / சேமிப்பு

என்பதே இல்லாமல் எல்லாவற்றையும் கொள்ளை கொடுத்து, வாழ்வதற்கே அச்சப்பட்டுக்கொண்டிருக்கும் சாதாரண எளிய மக்களின் வாழ்க்கையை நகர்த்துவதற்கான அச்சம் - நவீனரகக் கள்வரால் அமைதி வாழ்வு சூறையாடப்பட்டுக் கொண்டிருப்பதால் வரும் எதிர்கால அச்சம் எல்லோருக்குள்ளும் இருப்பதாய்த்தான் பார்க்கத் தோன்றுகிறது.

'தம் இறை'யின் மூலம் உருவாகும் அச்சம் என்று நான்காவதைக் குறிப்பிடுகிறது தொல்காப்பியம்! பாதுகாப்பு வளையத்திற்குள்ளேயே பவனிவரும் புதிய 'தேவதூதர்' மக்கள் அவதிப்படும் சமயங்களிலெல்லாம் பாராமுகமாய் இருந்துவிட்டு, உதவிக்கரம் கொடுக்க ஓராயிரம் உப்புச்சப்பில்லாத உருட்டுக் கணக்குகள் சொல்லி புதிய 'தேவதூதர்' படாடோபமாய் 'வீதி உலா' வருகையில் அதைப் பார்ப்பதற்கே நமக்கு அச்சமாகத்தான் இருக்கிறது. தண்டிக்கப்பட வேண்டியவர்கள் தன் காவி இறக்கைக்குள் மடங்கி இளைப்பாறினால் அவர்களைப் புனிதர்களாகப் புடம்போட்டுக் காட்டும் போஷாக்கு மருந்தும் மடங்க மறுத்தால் ஈ.டி, தாடியென்று பயமுறுத்தும் பல மாய முகமூடிக் கண்ணடிகளைக் கைவசம் வைத்திருக்கும் புதிய 'தேவதூதர்' அச்சந்தரத் தக்கவராயேயிருக்கிறார் - தேர்தல் இன்னும் முழுமையாக முடியாதிருக்கையில் தேர்தல்கால நடைமுறைகள் களத்தில் இருக்கும்போது இராணுவக் கூடுதல் தலைமைத் தளபதிக்குப் பணி நீட்டிப்பு கொடுத்திருப்பது இன்னொரு புதிய அச்சத்தை எல்லோருக்குள்ளும் ஏற்படுத்தும்தானே!

தொல்காப்பியம் சொல்லாத இன்னுமிரண்டு அச்சங்களும் இன்றைய நிலையில் கவனத்திற்கு வருகின்றன. ஒன்று கொரொனா கால அச்சம்! கொரொனா கொடுத்துக் கொண்டிருந்த பீதியும், இப்பொழுது மூன்றாவது முறை தொடரும் என்று சொல்லுகிற பீதியும் ஒரே மாதிரியான உணர்வையே தருகின்றன.

இப்பொழுது நினைத்தாலும் கொரொனாவின் அந்த அச்சத்திலிருந்து தப்பித்தது மறுபிறவி எடுத்தது போலத்தான் இருக்கிறது. தொல்காப்பியர் காலத்து இதுமாதிரியான பெருநோய்கள் அவருக்கு அறிமுகமாகாது இருந்திருக்கலாம். அவர் காலத்துப் 'பிணி'யை, இளிவரல் மெய்ப்பாட்டிற்குள் அவர் கொண்டு அடக்குகிறார். 'இளிவரல்' என்பது உயிர்வாழ ஒல்லாமல் மானம் குன்றவரும் பழிநிலையைக் (தாழ்வு நிலை) குறிக்கும். கொரொனா வந்தவருக்கு அச்சம் இந்த மனநிலையில் வரக்கூடும். ஆனால் வந்தவருக்கும் மற்றவர்களுக்கும் உண்மையில் உயிரச்சம் ஏற்பட்டிருக்கும்! ஆயினும் அதிலும் அஞ்சாது, பல்வேறு இசுலாமிய சமூக அமைப்புகள், சடலங்களுக்குள் எந்தச் சமய பேதத்தையும் காட்டாமல், கொரொனாவால் இறந்த உயிர்களை எவ்வித அச்சமுமின்றி எடுத்து அடக்கம் செய்ததென்பது இப்பொழுது நினைத்தாலும் பெருமிதப்பட வைக்கும் உணர்வாகும். இளிவரல் / அச்சம் / பெருமிதம் ஆகிய மெய்ப்பாட்டுணர்வுகள் அதில் ஒருசேர உசாவிநின்று மனித சமூகத்தை மதிப்புடன் நோக்க வைத்த அற்புத நிகழ்வாகும் அது! இதைப் போன்றதே 'சுனாமி' - இயற்கைச் சீற்றத்தின் பேரழிவு உருவாக்கித் தந்திருந்த அச்சமும்! ஆக, கொரொனா, சுனாமி இரண்டையும் பொருள்படுத்தும் இயற்கைப் பேரழிவு என்பதையும் அச்சம் என்பதுடன் இணைத்துப் பார்க்கலாம்.

இன்னொன்று, 'தம் இறை' என்பதாகும். புதிதாய் இறங்கி வந்திருக்கிற 'தேவதூதர்'தான் இப்போதைக்கு நம்முடைய 'இறை-வேந்து'! வேந்து -

இறையைக் கண்டு, தண்டிக்கும் அதிகாரம் கொண்டவர்கள் அவர்கள் என்று மக்கள் பயங்கொள்ளலாம் - மற்றவர்கள் அச்சம் கொள்ளலாம். ‘வேந்து - இறை’ -இறைத்தூதர் அச்சப்படுவதாகக் கேட்டதுண்டா? சனநாயகத்தில் அப்படியும்கூட நடக்கும்போலும்! எதுவும் நியாயமாய் நடந்தால் மக்கள் வேந்தைத் தண்டிக்கும் வாய்ப்பிருக்கிறது. அதைத்தான் இத்தேர்தல் திருவிழா அடையாளங் காட்டியிருக்கிறது. ஆறுகட்டத் தேர்தல் பற்றிய சமூக ஊடகங்களின் கருத்துகளைப் பார்க்கையில் இந்தியா கூட்டணிக்கு வெற்றி உறுதி என்பதையே அவை திரும்பத் திரும்பச் சொல்கின்றன. தமிழ்நாட்டில் நானே நேரிடையாக வாக்களித்து மக்கள் மனங்களைப் பார்த்த / படித்த தேர்தலிலும், இந்தியா கூட்டணியின் வெற்றியை என்னால் உறுதிப்படுத்த முடிந்திருந்தது. இந்த அளவு மக்கள் பாஜகவை தங்கள் மனசிலிருந்து ஒதுக்கி வைத்திருந்தது ஆச்சரியத்தையும், அதேநேரம் மக்கள்மேல் கூடுதல் பாசத்தையும் உருவாக்கித் தரத்தக்கதாயிருந்தது. இந்தியா முழுக்கவும் இதுதான் நிலைமை என்பது ஒரு பெருமித உணர்வை எனக்குள் ஏற்படுத்தி இருந்தது. அச்சமின்றியேதான் அனைத்து செயல்பாடுகளும் அமைந்திருந்தன. தமிழகத்திற்கென்று புதிய ‘தேவதூதர்’ ஒன்பது முறை தமிழ்நாட்டிற்குப் படையெடுத்து வந்திறங்கியபோது மார்ச் இறுதி - ஏப்ரல் தொடக்கத்திலேயே, ‘தமிழக முதல்வர்தான் சொன்னார், “அவர் முகத்தில் அச்சம் தெரிகிறது. அதுவே அவரது தரம்தாழ்ந்த பேச்சிலும் வெளிப்படுகிறது” என்று! புதிய ‘தேவதூத’ரின் புதுப்புது ஆடை அணிவிப்புக் கோலங்களுக்குள்ளும், கம்பீரமான, கட்டுதிட்டான அவரின் அதிகாரப் பேச்சுக்குள்ளும் அச்சம் ஒளிந்திருப்பதை அவ்வளவு எளிதில் கண்டுபிடிக்க முடியுமென்றால் அது தமிழக முதல்வரின் நீண்ட / நெடிய அரசியல் அனுபவமாக மட்டுமே இருக்க முடியும். பொறுப்பில் உள்ளவர்கள் தரம்தாழ்ந்து பேசுவதும் அச்சத்தின் வெளிப்பாடுதான் என்பது இப்பொழுது கூடுதலாய்ப் புரிபடத் தொடங்கி இருக்கிறது. பொதுத்துறைகளைத் தனியாருக்குத் தாரை வார்க்கும் ‘வேந்து’க்கு, மக்களைப் பார்த்து, இப்படியாகவும் ‘அச்சம்’ வரும் என்பது தேவர்கள் எழுதித்தரும் தேவ வசனங்களின் அடிப்பூச்சில் இப்படியாகவும் அச்சம் மறைந்திருக்கும் என்று இப்பொழுது தெரிகிறது. அவர்களின் இத்தனை அலப்பறைகளுமேகூட அச்சத்தின் வெளிப்பாடுதான் என்று புரிகிறது. அதிகாரத்தை இழப்பது என்பது சர்வாதிகாரிக்கு அச்சம் தரத்தக்கதுதான்! தொல்காப்பியத்தில் இது சொல்லப்படவில்லை. நாம் அதையும் சொல்லிப் பார்ப்போம், இனி!

பத்தாண்டுகளில் அதிகாரத்தில் இருந்தவர்கள் கலைத்துப் போட்ட சமூக உறவுகள், பொருளாதாரப் போக்குகள்,

அரசியல் மாண்புகள் அனைத்தையும் நேர்படுத்த வேண்டுமானாலும் அதற்கென்று கொஞ்ச காலங்களை ஒதுக்க வேண்டியிருக்கும். அச்சமின்றி, அச்சத்தை ஏற்படுத்திவிடாமல் மக்கள் நலன் சார்ந்த ஆட்சி அமையுமென்று உறுதியாக நம்புவோம்! உறுதி என்பதே தெளிவு! அது அச்சத்திற்கு எதிரானதுதான்! எதுவானால் என்ன, போராட்டம்தானே வாழ்க்கை! - ‘ஸ்பார்ட்டகஸ்’ நாடகத்தில் ஒரு வசனம் வரும் - ‘இந்தப் போராட்டம் எப்ப முடியும் ஸ்பார்ட்டகஸ்?’ என்று குழாம் கேட்கும்! அதற்கு எதிர்க்குரலாய் ஸ்பார்ட்டகஸ் முழங்குவான் – ‘எல்லா மனிதரும் சமத்துவம் பெறும்போது, எல்லா மனிதரும் சுதந்திரம் பெறும்போது’ என்பதாய்! போராட்டம் என்பதே எல்லோரும் சுபிட்சம் பெறுவதற்காகத்தான்! அதுவரை போராட்டம் தொடர்ந்து கொண்டேதானிருக்கும்! அச்சம் அதற்குள் அமிழ்ந்தே அரவமற்றுப் போயிருக்கும். கற்ற பாடத்திற்கான விருத்தியுரையை நாம் அப்போதும் அதில் கண்டுதெளிய வேண்டியிருக்கும்.

dramaswamy.murugiah@gmail.com ■



கவிதை

கி.சரஸ்வதி

வளர்ப்பு

வெட்டிச் சமைக்கத்தான்
என்றாலும்
செல்லப் பெயரிட்டுச்
சீராட்டிதான் கொஞ்சப்பட்டது வளர்ப்பு ஆடு

நேற்றுவரை டைகர் என்றறியப்பட்டது
இன்று தலைக்கறி என்றழைக்கப்படுகிறது

வெட்டப்படும் முன்பாக
லேசாக வருடும் குழந்தையின் கைவிரல்களை
எதிர்பார்த்திருந்தது

தண்ணீர் தெளிக்கப்படும் போது
தலையாட்டியதெல்லாம்
அறியாமையில் வராது

ameech2004@gmail.com ■



சிறுகதை

அ.நாகராசன்

"தட்சணாமூர்த்தி காண விழைந்த திருவெழுக் கூற்றிருக்கை செய்யுள்"

தட்சணா மூர்த்தியின் நினைவும் திருவெழுக் கூற்றிருக்கை செய்யுள் பற்றிய சிந்தனை இன்றுவரக் காரணமாய் இருந்தது சிறுபத்திரிகை ஒன்றில் வந்த கட்டுரைதான். கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளுக்கு முன் வந்த அதே மாதிரியான தலைப்பு "அமைப்பு வாதம், பின்அமைப்பு வாதம் மற்றும் புதிய கட்டுடைப்பு". அப்போது திருவெழுக் கூற்றிருக்கை செய்யுள் மற்றும் சித்திரக்கவிகள். இப்போது கணியன் பூங்குன்றனாரின் யாதும் ஊரே யாவரும் கேளீர் பாடல்.

ஆண்டுகள் பல கடந்துவிட்ட நிலையிலும் அமைப்புவாதம் பற்றிய விவரங்கள், விவாதங்கள், விளக்கங்கள் தொடர்ந்த வண்ணம் இருக்கத்தான் செய்கிறது.

திருவெழுக்கூற்றிருக்கை செய்யுள் பற்றி எதுவும் அறிந்திரா எனக்கு தட்சணாமூர்த்தியால்தான் திருஎழுகூற்றிருக்கை செய்யுள் மட்டுமின்றி ஆசுகவி, மதுர கவி, சித்திரக்கவி, வித்தாரக் கவி மற்றும் திருஞான சம்பந்தரின் மாலை மாற்று திருப்பதிகம் போன்ற பா வகைகளைத் தெரிந்துகொள்ள முடிந்தது. பாடப்படும் முறையால் ஆசுகவி, மதுர கவி, சித்திரக்கவி, வித்தாரக் கவி - என்ற இவை நான்கும் நாற்கவி எனப்பட்டது.

நவீன உரைநடை இலக்கியங்களை மட்டுமே விரும்பி வந்த எனக்கு பண்டைய தமிழ் இலக்கிய பாவினம் பற்றிய ஆர்வத்தை தூண்டிய, தட்சணாமூர்த்தி என் ஆசானோ அல்லது நண்பனோ இல்லை. சொல்லப்போனால் சிறிதும் பரிச்சயம் இல்லா இவரை புகைப்படத்தில் கூட கண்டது இல்லை. இந்தப் பெயரைக்கூட அவரது பழைய டைரி ஒன்றிலிருந்து தெரிந்துகொண்டேன். சிறிதும் அறிமுகமில்லா தட்சணாமூர்த்தியின் டைரி வாசிப்பே ஒரு விசித்திர அனுபவம்.

உத்தியோகம் காரணமாக ஒரு மாடி போர்ஷனில் குடியேறிய போதுதான் தட்சணாமூர்த்தி பற்றி தெரியவந்தது. பத்தாண்டுகளுக்கு முன் உத்தியோகம் காரணமாக அந்த ஊருக்குச் சென்று, மாடி போர்ஷன் ஒன்றில் குடியேறி ஒரு வாரமாகிய நிலையில் பழைய தட்டுமுட்டு சாமான்கள் போட்டு வைக்கும் களஞ்சியத்தைப் போல் படுக்கை

அறையின் வடக்கு பார்த்த சுவரில் இருந்த லாஃப்ட் மாதிரியான ஒன்றை சுத்தம் செய்த சமயம், முன்னர் குடியிருந்தவர் விட்டுச்சென்ற புத்தகங்கள், பழங் காகிதங்கள் கிடைத்தன. கிட்டத்தட்ட பத்தாண்டுகளுக்குமுன் குடியிருந்த ஒருவர் விட்டுச்சென்ற அந்த 1992 வருடத்திய பழைய டைரியும் அத்துடன் இருந்த இரண்டொரு ஜெராக்ஸ் பேப்பர்களையும் கடந்த பல வருஷங்களாகக் குடியிருந்த ஒருவரும் பார்க்காதது ஆச்சர்யம்தான். யார் அவைகளை மறந்துவிட்டுச் சென்றார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. மறந்துவிட்டுச் சென்றவர் பெயரை தட்சணா மூர்த்தி என்று சொன்னது அந்த 1992 வருடத்திய பழம் டைரி.

பழுப்பேறியிருந்த அந்த ஜெராக்ஸ் பேப்பர்கள் பழைய பத்திரிக்கைகளில் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட செய்திகளின் அல்லது விசேஷ கட்டுரைகளின் பிரதி. எதுவும் படிக்க இயலாத நிலை. அதில் ஒன்று தான் "1992 ஆம் அண்டு வெளியான ஒரு சிற்றிதழில் ஆனந்த நயனன் என்பவர் எழுதி இருந்த "கூற்றிருக்கை செய்யுள்களில் அமைப்பியல் வாதம்" என்ற கட்டுரை. கட்டுரைத் தலைப்பு மட்டும் கலங்கலாகத் தெரிந்தது. அந்த ஜெராக்ஸ் பிரதியின் ஓரத்தில் சிகப்பு மசியால் 'இன்று ஆனந்த நயனனை திருவிடந்தையில் சந்தித்தேன்' என்று ஒரு தேதி குறிப்பிடப்பட்டு இருந்தது.

செய்யுள், அமைப்பியல் போன்றவைகள் கேள்விப்பட்ட சொற்கள் என்றாலும் அவைகள் பற்றி எதுவும் தெரியாது. கிடைத்த பழைய 1992 ஆம் வருட டைரியின் ஆரம்பத்தில் இருந்த வசன கவிதை மாதிரியான ஒன்றுதான் மேற்கொண்டு உள்ளே என்ன இருக்கிறது என்று தேடச் சொன்னது.

"கண்ணாடி கிளாசின் திரவ ததும்பலில்
செல்லமாய் சோடா சிணுங்க,
அந்நிய கேசட் ஆங்கில கான மழை
தறிகெட்ட தாள லயமதை பரதமென
கையோடு கை கும்மியடித்த கோஷ்டி
கானத்தில்
Rs750 /- செலவில் ஆனந்தமாய் பிறந்த
புதிய நூற்றாண்டே...., 2K-வே
வருக...வருக....வருக..
ஹாங்-ஓவரை அள்ளி தருக தருக...
தருகவே.."

இக்கவிதையின் கீழ்தான் வே. தட்சணா மூர்த்தி என்று இருந்தது.

இவர் 1992 ஆம் ஆண்டு டைரியை, 2000த்தில் பயன்படுத்தி இருந்திருக்கிறார். அந்த டைரியில், 2000 வது ஆண்டில் நிகழ்ந்த செய்திகளை எழுதி இருந்தார். இந்த தட்சணாமூர்த்தி சோம்பேறியா, அல்லது கஞ்சப் பிசுநாரியா? இவர் ஏன் 1992 ஆம் ஆண்டு டைரியை 2000- ஆம் ஆண்டில் இருந்து எழுத ஆரம்பித்தார் என்பதற்கான காரணத்தை யூகிக்க இயலவில்லை.

அந்த கவிதையைத் தொடர்ந்து டைரியின் மற்ற பக்கங்களில் இருந்தவை ஏறத்தாழ தொன்னூறு நாட்களில் நிகழ்ந்த சம்பவங்கள் பற்றிய குறிப்புகள். தொடர்ச்சியாக இல்லாமல் ஆங்காங்கே தேதியை மட்டும் குறிப்பிட்டு எழுதியிருந்தார் தட்சணா மூர்த்தி.

ஆரம்பத்தில் நிறைய அரைப்பக்கங்களில் இன்று நான் என்று ஆரம்பித்து... மினர்வா சலூனில் முடி வெட்டிக்கொண்டேன் என்றோ அல்லது நண்பர்களுடன் நடத்திய வாக்குவாதம் பற்றியோ அல்லது அலுவலக உயர் அதிகாரிகளுடன் போட்ட சண்டைகள் பற்றியோ இருந்தது. மற்றபடி சுவாரஸ்யமாக எதுவும் இல்லை. சட்டென்று ஆனந்த நயனன் என்பவரைப் பற்றி அந்த டைரி சொல்லத் துவங்கியது.

18–02–2K

கேள்விப்பட்டிராத ஒல்லியாக, ஆனால் கனமான விஷயங்களுடன் இருக்கும் சிற்றிதழ்களை எனக்கு உடன் வேலை செய்யும் பரஞ்ஜோதி தருவது வழக்கம். இந்தப் பத்திரிக்கைகளை அவர் அஞ்சலில் வரவழிப்பார். அப்படி அவர் தந்த நாணல் என்ற பத்திரிகையின் ஜன-பிப்ரவரி இதழில் ஆனந்த நயனன் என்பவர் "திருவெழுக்கூற்றிருக்கை-செய்யுள்களில், அமைப்பியல் வாதம் மற்றும் பின்அமைப்பியல் வாதம்" என்று ஒரு கட்டுரை எழுதி இருந்தார்

அது என்னைக் கவரக் காரணம் கூற்று, இருக்கை என்ற சம்பந்தமில்லா இரு சொற்கள் இணைப்பில் பிறந்த ஈர்ப்புதான். சொல்லப்படும் விஷயம் கூற்றுவன் இருக்கை பற்றியா அல்லது ஒரு இருக்கையின் கூற்றா என்பதை அறிய அந்த கட்டுரை வெளியான நாணல் பத்திரிகையை வாசிக்கத் துவங்கினேன்.

தமிழ் இலக்கியத்தில் மட்டுமே இருக்கும் இப்பழைய கடினமான சித்திரக்கவி வகை சார்ந்த ஒன்று திருஏழுகூற்றிருக்கை செய்யுள். இதை அறிமுகம் செய்தவர் திருஞானசம்பந்தர். அவருக்குப் பின் திருமங்கை ஆழ்வார் ஆவார்கள். தவிர திருஞானசம்பந்தர் படைப்புகளில் புதுமைகளைக் கையாண்டுள்ளார். அவைகளில் ஒன்று மாலை மாற்று திருப்பதிகம். இதை Palindrome என்று சொல்வார்கள்.

ஆனந்த நயனன் கட்டுரையின் ஆரம்பப் பகுதிகளில் சொல்லப்பட்ட அமைப்பு வாதம் பற்றிய தகவல்கள் முதல் முறை வாசிப்பில் புரியவில்லை. பூரண புரிதல் பொருட்டு இக்கட்டுரை உடன் இருத்தல் அவசியம் என்று தோன்றியது. இரவில் படிப்போம் என்று அதன் ஜெராக்ஸ் பிரதி எடுத்துக்கொண்டு சிற்றிதழை பரஞ்ஜோதியிடம் திரும்பத் தந்துவிட்டேன்.

இரவுதான் கட்டுரையை வாசிக்க முடிந்தது.

அக்கட்டுரை 1970-களில்மேற்கத்தியஅறிவுஜீவிகளால் அறிமுகம் செய்யப்பட்டு நம்மவர்களால் நிறையவே பேசப்பட்ட அமைப்பியல் மற்றும் பின்-அமைப்பியல் வாதம் பற்றிய கட்டுரை. தமிழ் விமர்சன உலகம் அதுசமயம் படைப்புகளின் உருவம் மற்றும் உள்ளடக்கம் பற்றி அதிகமாகவே விசனப்பட்டன... ஆனால் பழந்தமிழ் பக்தி இலக்கியங்களில் வடிவம் அல்லது உருவம் குறித்த சிந்தனை இருந்திருக்கிறது. சித்திரக்கவி, குத்துவிளக்கு பந்தம், ஏகபாதம், கோமூத்திரி, நாக-பந்தம்போன்ற பாடல்கள் வித்தியாசமான வடிவம் கொண்டவை. உதாரணமாக, அட்ட நாக பந்தம் என்ற சித்திரக்கவி எட்டு நாகப்பாம்புகள் பிணைந்த ஓவிய வடிவிலான ஒன்று. இதை பாம்பின் தலையில் துவங்கி வால் வரை உள்ள எழுத்துக்களைத் தொடர்ந்து வாசிக்கையில்தான் கவிநயம் புரியும்.

★

தூங்கும் நேரம் நெருங்கிவிட்டதால் வாசித்தது போதும் என்று டைரியை தலைமாட்டில் வைத்துவிட்டு படுத்துக்கொண்டேன். காலையில் ஆபிஸ் வேலை. மாலை ஆறு மணிக்குக்கு மேல் வீடு சேர்ந்தபின் தட்சணா மூரத்தியின் டைரியை விட்ட இடத்தில் இருந்து படிக்கத் துவங்கினேன்.

20–02–2K

இன்று இரவு மீண்டும் அந்த ஜெராக்ஸ் பிரதியை எடுத்து வாசித்தேன்.

ஸ்டெக்சுரலிசம், போஸ்ட்-ஸ்டெக்சுரலிசம் எனப்பட்ட அமைப்புவாதம், பின் அமைப்புவாதம் பற்றிய விளக்கங்களைக் கொண்டிருந்தது அக்கட்டுரை.

லெவி ஸ்டிராஸ் என்பவர்

ஸ்டெக்சுரலிசத்தின் தந்தை எனப்பட்ட புரபெசர் பெர்டினண்ட் டி-சுசூர் 1906களில் நிகழ்த்திய உரைகளின் கருத்துக்களை தொகுத்து ஸ்டெக்சுரலிசம் என்கிற இலக்கிய கோட்பாட்டை வழங்கினார்.

இதில் மொழிகள் குறிகளாலும் (Symbol) சங்கேதங்களாலும் (Sign) ஆன ஒன்று என்றும் ஒழுங்கான குறிகளே சங்கேதம் எனபடுகிறது என்றும் சொல்கிறார்.

ஒழுங்கான குறிகள் மற்ற குறிகளுடன் தொடர்புகொள்ளுகையில் அல்லது இணையும்போது தோன்றும் அமைப்பு முக்கியம் என்கிறார்கள். இவ்வகை இணைப்புகளில் பிறக்கும் உருவங்கள் அதன் பொருள்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கும்.

★

கட்டுரையில் வாசிக்க வேண்டிய பகுதி மிச்சம் இருந்தது. பின் படிக்கலாம். இனியும் தாமதமாக மெஸ்ஸுக்கு சென்றால் ரசம் கூட கிடைக்காது. சாப்பிட்டுவிட்டு வந்தபின் கண்கள் தூங்கு என்றதும் படுக்கைக்கு சென்றுவிட்டேன். என்னிடம் இருந்த கெட்ட பழக்கம்- வாசிக்க ஆரம்பித்து விட்டால் தூக்கம் வராது.

சொச்ச கட்டுரையையும் அடுத்த நாள் வாசித்துக்கொள்ளலாம்.

இன்று ஆபிஸ் அரை நாள் மட்டுமே இயங்கும். மதியம் வீட்டுக்கு சென்று டைரியை எடுத்துப் படிக்கத் துவங்கினேன்.

21–02–2K

இன்று அந்த ஜெராக்ஸ் பிரதியின் மிச்சப் பகுதிகளை வாசித்தேன். அது கட்டுரையின் இரண்டாம் பகுதி போலத் தோன்றியது. இப்பகுதியில் பின்அமைப்பு வாதம் பற்றி சொல்லப்பட்டிருந்தது.

அமைப்பு வாதத்தை ஆழமாக நோக்கி அதன் குறைகளைக் களையும் நோக்கில் உருவானது பின்அமைப்பு வாதம். இதில் முக்கியமாக சொற்களின் பொருள் நிலையற்றவை. மாற்றங்களை உள்ளாகக் கொண்டவை.

ரோலண்ட் பார்தஸ், ஜாக்விஸ் தெரிதா போன்ற எழுத்தாளர்கள் பின்அமைப்பு வாதத்திற்கு தந்த விளக்கங்கள் பற்றியும் பிரஞ்சு எழுத்தாளரும் தத்துவவாதியுமான தெரிதா சொல்லிய Decostruction, Costruction பற்றி செய்திகள் இருந்தது. இரண்டு முறை வாசித்தும் கட்டுரையின் இப்பகுதியை முழுமையாக உள்வாங்க முடியவில்லை.

கட்டுரையில் தொடர்ந்து திருஎழுகூற்றிருக்கை செய்யுள், அட்ட நாக பந்தம், ஆசுகவி, சித்திரக்கவி மற்றும் மாலை மாற்று திருப்பதிகம் போன்ற பா'-வகைகளின் வடிவங்கள் பற்றி விரிவாகப் பேசியது.

அமைப்புவாதம், பின் அமைப்புவாதம் பற்றி இன்றுவரை பல கட்டுரைகள் வெளிவந்துள்ளது.இன்றுவரை சரியான புரிதல் எனக்கு சித்திக்கவில்லை; இது என் அறிவுக் குறைவினால் இருக்கலாம்.

மேலை நாடுகள் மொழியை அறிவியல் முறையில் ஆய்வு செய்யும் Linqusticக்கும்,பேச்சொலி அல்லது உச்சரிப்பு பற்றிய குறியீடுகளைப் பற்றி சொல்லும் Phonaticக்கும் நமக்கு தொல்காப்பியர் காலத்தியவை.

அமைப்புவாதத்தை நான் இப்படி புரிந்துகொண்டேன்.

எழுத்துக்கள் இணைப்பில் சொல் உருவாகிறது. அதே எழுத்துகளை மாற்றி இணைக்கையில் வேறு வேறு சொற்கள் பிறந்து பல அர்த்தங்களைத் தருகிறது. அவை பல தளங்களில் இயங்கி, பல

வியாக்கியனங்களுக்கு வழி ஏற்படுத்துகிறது.

படைப்பாளி தன்வரையில் படைப்பு ஓர் இடத்தில் முடிந்து விட்டது என்று சொல்லி மௌனித்து விடுவான். ஆனால் படைப்பு வாசகனுடன் இயங்கிக்கொண்டே இருக்கும். மேலும் இதன் உருவம், உள்ளடக்கம், Context போன்றவைகளின் இயக்கம் காலங்கள் தோறும் பயணித்தபடி இருக்கும்.

படைப்பு, வாசகன், ஆசிரியர் என்ற இவர்கள் மத்தியில் இருக்கும் வலிமையான முக்கோண உறவு யுகங்கள் மாறுகையில் தரும் விளக்கங்களிலும் மாறுபடும்.

இதுவே போதுமான புரிதல். அதிகமாக அலட்டிக்கொண்டால் குழப்பம் மட்டும் மிச்சம். அது சட்டையைக் கிழித்துக்கொள்ளும் அபாய நிலைக்கு கொண்டும் போகலாம். பேசாமல் அமைப்பு வாதத்துக்கு டாடா சொல்வதே உசிதம்.

★

ஜெராக்ஸ் பிரதி வாசிப்பு முடிந்துவிடவே,வெளியே தேநீர் அருந்த நாயர் கடை வரை சென்று வந்தேன். சிறிதுநேர ஓய்வுக்குப் பின் சாப்பிட மெஸ் சென்றுவிட்டேன். டைரியை நாளை வாசிக்கலாம் என்று தோன்றியது.

நாளை விடுமுறை தினம். பொதுவாக அந்த விடுமுறை தினத்தன்று காலை காட்சிக்கு சென்று ஆங்கிலப் படம் பார்த்து வருவது வழக்கம்.படம் முடிந்து, வரும் சமயம் சிக்கன் பிரியாணி சாப்பிட்டு வந்து பகல் தூக்கம்.

அடுத்த இரண்டு வேலை நாட்கள் விரைந்து ஓடிவிட்டது. மூன்றாம் நாள் இரவு சாப்பாட்டை முடித்துக்கொண்டு வீடு வந்த பின்தான் டைரியின் ஞாபகம் வந்தது.

25–02–2K

குடந்தைக்கு வந்திருக்கிறேன். ஒரு விசேஷம். எதேச்சையாக குடந்தையில் ஒருரு கோவில் பிரகாரச் சுவரில் பார்த்த தேர் வடிவ திருஎழுகூற்றிருக்கை செய்யுள். அது எனக்குள் அமைப்பு வாதம், ஆனந்த நயனன் பற்றிய சிந்தனைகளைத் தட்டி எழுப்பியது. ஆனந்த நயனன் தன் கட்டுரையில் சொல்லியிருந்த வடிவம், உள்ளடக்கம் பற்றியவை நினைவுக்கு வந்தது. சுவரில் அச்செய்யுள் தேர்-சித்திரமாக, சிறு சிறு சதுரங்களால் உருவாக்கப்பட்டு இருந்தது. ஒவ்வொரு சதுரங்களிலும் ஒவ்வொரு எழுத்து எழுதப்பட்டு, மொத்த செய்யுளும் தேர் வடிவில் தெரியும்படி எழுதப்பட்டிருந்தது. அவ்வடிவமைப்பு எனக்கு பிரமிப்பை தந்தது. குறுக்கெழுத்து போட்டிகளில் வருவது போல,தேர் வடிவ சிறு கட்டங்கள்; கட்டங்கள் முழுவதும் சிறிய சிறிய வார்த்தைகள். செய்யுள் முழுவதும் அக்கட்டங்களுக்குள் சிறு சிறு வார்த்தைகளாக நிரப்பப் பட்டிருந்தது.

திருஎழுகூற்றிருக்கை பற்றிய தகவல்களை அறியவும், ஆசுகவி, சித்திரக்கவி,குத்துவிளக்கு பந்தம், ஏக பாதம்,கோமூத்திரி, நாக பந்தம், மற்றும் மாலை மாற்று திருப்பதிகம் போன்ற பா' - வகைகளைப் பற்றி தெரிந்துகொள்ளவும், ஆனந்த நயனன் அவர்களை நேரிடையாக ஒருநாள் சந்திக்கலாம் என்று தரிசனத்தை முடித்துக்கொண்டு திரும்பி விட்டேன்.

★

டைரியில் செல்லியிருந்தவைகளை கற்பனை செய்துபார்க்க இயலவில்லை. நேரில் பார்த்தால்தான் விளங்கும்.சிறு சிறு சதுரங்களால் ஆன தேர் போன்ற தோற்றம். அதில் தமிழ் எழுத்துக்கள். இது சாத்தியமா? நேரில் பார்த்து உறுதிசெய்ய வேண்டும். என்னை அறியாமல் டைரி

மீது காதல் பிறந்துவிட்டது.மறுநாள் வீடு வந்ததும் ஆரம்பித்து விட்டேன்.இது ஒரு நீண்ட விவரங்கள் தொகுப்பு.

8–03–2K

இன்று மாலை நான் ஆனந்த நயனனை அவர் வீட்டில் சந்தித்தேன்.

ஆனந்த நயனன் அவர்களைச் சந்திக்க நான் அதிகம் கஷ்டப்படவில்லை. கட்டுரையில் அவர் பணியாற்றிய பள்ளி பெயருடன் ஊர் பெயரும் மேலும் அவரது மின்-அஞ்சல் விவரமும் இருந்தது. தொடர்புகொண்டு அவரை நேரில் சந்திக்கும் ஆர்வத்தில் இருப்பதை தெரிவித்ததும் அவர் குடந்தையில் உள்ள ஒரு பள்ளியில்தான் வேலை செய்வதாக சொல்லி வீட்டு முகவரியையும், வழித்தடத்தையும் சொல்லி இருந்தார்.

நேரில் சந்தித்த ஆனந்த நயனன் வேறு விதமாக இருந்ததை நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. முறுக்கு மீசையுடன் விரிந்த தோளும் தூய வெண்ணிற ஆடையுடன் ஆணவப் பார்வை கொண்ட தமிழாசிரியர் ஆனந்த நயனனை எதிபார்த்த எனக்கு ஏமாற்றமே மிஞ்சியது. என் கற்பனையை குலைப்பதைப் போல் இருந்தது. பொக்கையாக, வறுமை பிடியில் உழலும் குமாஸ்தா போன்றது அவர் தோற்றம். குரல் மட்டும் வெங்கலக் கடையில் புகுந்த யானை. பேச பேசத்தான் குமாஸ்தாவை மறைத்துக்கொண்டு அவர் வெளிவந்தார். நான் திருவெழுகூற்றிருக்கை செய்யுள் பற்றி வினவியதும் அவர் புன்னகையுடன் பேச ஆரம்பித்து பல தகவல்களை ப் பகிர்ந்துகொண்டார். இன்றைய நவீன இலக்கிய உலகில் விவாதிக்கப்டும், அமைப்பு வாதம் பின் அமைப்பு வாதம் போன்றவைகளுக்கு இப்பாடல்கள் ஒரு முன்னோடி போல் இருப்பதை அவர் சிலாகித்துப் பேசினார். மேலும் ஆசு கவி சித்திரக்கவிகள் பற்றியும் சொன்னார்.

ஆனந்த நயனன் திருவெழுகூற்றிருக்கை செய்யுள் தன்மை என, ஒன்று முதல் ஏழு வரை உள்ள எண்கள் ஏழு கூறுகளை இடங்களாகக் கொண்டு படிப்படியாக உயர்ந்து, பின் குறைந்தும் வரும் எண்ணலங்காரம் அமையப்பெற்ற ஆசிரியப்பா வகை பாடல்கள் திருஎழுகூற்றிருக்கை செய்யுள் என்றார். மேலும் அவர்,

"ஒன்று முதலாக ஒரெழுத்து ஈராச்,
சென்றஎண் ஈரேழ் நிலம் தொறுந் திரிதர
எண்ணுவது ஒன்றாம் ஏழு கூற்றிருக்கை"

- என்ற அதன் இலக்கணத்தைச் சொல்லி தான் எழுதிய கட்டுரை ஒன்றின் ஜெராக்ஸ் பிரதியைக் காட்டினார்.

கிளம்பும் சமயம் அப்பிரதியைத் தந்துவிட்டு, திருஎழுகூற்றிருக்கை செய்யுள்கள் அல்லாமல் பிற சித்திரக்கவிகளைப் பார்த்தும்,படித்தும் புரிந்து கொள்ள இது ஒரு வழிகாட்டியாக இருக்கும் என்றார். படித்துப் புரிந்து கொள்ளவும் இந்த பிரதி உதவும் என்றார்.

அப்போதுதான் அவர் திருவனசோலை பற்றியும் அங்கே இருக்கும் வைணவக் கோவில் பற்றி சொல்லி அங்கு சுவர் சித்திரமாக இருக்கும் சித்திரக்கவிகளைப் பார்த்து ரசிக்கும்படி சொன்னார்.

அவர் தந்த ஜெராக்ஸ் பிரதியை மேலோட்டமாகப் பார்கையில் பாஸ்கல் விதி, அது, இது என கணித சூத்திரம் மாதிரி பட விளக்கங்களுடன் இருக்கவே பயண சமயத்தில் படிக்கலாம் என்று அவரிடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்பிவிட்டேன்.

எனக்கு ஆனந்த நயனன் தந்த அந்த ஜெராக்ஸ் பிரதியை பயணத்தின் போது வாசித்தேன்.

அதில்.....

திருஎழுகூற்றிருக்கை செய்யுள் பற்றி இவ்வாறு சொல்லியிருந்தார்: கோவில் சுவர் சித்திரமாக இருக்கும் திருஎழுகூற்றிருக்கை செய்யுள் அமைப்பில் தேர் தட்டுக்கு மேலுள்ள அமைப்பை போன்றது. செய்யுள் கீழ் பகுதியும் தேரை ஒத்திருக்கும். இறுதி வரிகள் தேரின் அடிப்பகுதி பீடம் போல் இருக்கும்

கணிதத்தில் சொல்லப்பட்ட பாஸ்கல் முக்கோணத்தின் வடிவை அச்செய்யுள் ஓரளவு கொண்டிருக்கும். பாஸ்கல் முக்கோணத்தின் எண்கள் வரிசை அமையும் முறை வேறு. திருஎழுகூற்றிருக்கை செய்யுள்களில் முக்கோண எண் வரிசை வேறு முறையைச் சுட்டும். விளக்கமாகப் புரிந்துகொள்ள கீழுள்ள படத்தை பாருங்கள்.

1 X 1 = 1

11 X 11 = 121

111 X 11 1 = 12321

111 1 X 11 11 = 1234321

11111 X 11111 = 123454321

111111 X 111111 = 12345654321

1111111 X 1111111 = 1234567654321

1111 X 11 11 = 1234321

111111 X 111111 = 12345654321

11111 X 11111 = 123454321

1111 X 1111 = 1234321

111 X 11 1 = 12321

11 X 11 = 121

1 X 1 = 1

இந்தப் படத்தில் 1, 11, 111,... என்ற எண்களும் அவைகளின் பெருக்குத் தொகையான 1, 2, 3, 4, 5... என்ற எண்களும் உபயோகிக்கப்பட்டுள்ளது. இந்த எண்கள் ஒரு சீரான ஒழுங்குடன் அமைக்கப்பட்டு தேர் வடிவை பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

கவனித்துப் பார்த்தால் 1, 11, 111,... இவைகளின் பெருக்குத் தொகைகள் 1, 2, 3, 4, 5... என்ற ஏறு வரிசையில் இருப்பதையும்,பின் 5, 4, 32, 1 என்று இறங்கு வரிசையில் இருப்பதையும் காணலாம். திருஎழுகூற்றிருக்கை செய்யுளில் 1111111 X 1111111 = 1234567654321 என்ற எண் வரிசை பயன்படுத்தியுள்ள முறை வேறு. கவனித்துப் பாருங்கள்.

காலத்தால் முற்பட்டவை திருஞானசம்பந்தர் மற்றும் திருமங்கையாழ்வாரின் திருவெழுகூற்றிருக்கை செய்யுள். இதில் திருமங்கையாழ்வாரின் செய்யுளை சித்திர வடிவில் தந்துள்ளேன். இது சதுர வடிவக் கட்டங்கள் கொண்டு, தேர் வடிவத் தோற்றம் தரும் சித்திரமாக உருவாக்கப்பட்டுள்ளது.

கட்டங்களுக்குள் திருவெழுகூற்றிருக்கை செய்யுள் வரிகள் 1, 2, 1 என்று துவங்கி, பின் 1, 2, 3,. 32, 1 என்று செல்கிறது. விளக்கத்தின் பொருட்டே பாடலின் ஒரு பகுதியை மட்டுமே சதுர கட்டங்களுக்குள் தந்திருக்கிறேன். இப்பகுதி தேர் தட்டின் மேல் கூரை வடிவில் இருக்கிறது. தொடரும் பிற வரிகள் தேரின் அடிப்பகுதியைப் போல இருக்கும். செய்யுளில் இந்த எண்கள் இறங்கு வரிசையில் இருக்கிறது. இவை தோற்றத்தில் மட்டுமே பாஸ்கல் முக்கோணத்தை நினைவுபடுத்தும். இது காலங்களைக் கடந்த தலைமுறையின் ஒத்த சிந்தனை.

“ஒன்றில் ஒன்றி நின்று....

அங்கு இரு பிறப்பறு போர் அறியும் தன்மையை

முக்கண் நால் தோளை வாய் அரவோடு, ஆறு பொதி

சடையோன் அறிவரும் தன்மை

1 ஒரு பேர் உந்தி	2 இரு மலர் தவிசில்	1 ஒரு முறை அயனை ஈன்றனை								
1 ஒரு முறை	2 இருசடர் தினில் இயங்கா	3 மும் மதிள் இலங்கை	2 இரு கால் வளைய	1 ஒரு சிலை						
1 ஒன்றிய	2 ஈர் எயிற்றழல் வாய் வாளியின் அத்தனை	3 மூவடி	4 நானிலம் வேண்டி	3 முப்புரி நூலெடு மான் உரி இலங்கு மார்வினின்	2 இரு பிறப்பு	1 ஒரு மாண் ஆகி				
1 ஒரு முறை	2 ஈர் அடி	3 மூவுலக ளந்தனை	4 நால் திசை நடுங்க	5 அஞ்சிறை பறவை ஏறி	4 நால் வாய்	3 மும் மதத்	2 இரு செவி	1 ஒரு தனி வேழத் தரந்தையை		
1 ஒரு நாள்	2 இருநீர் மடுவுள் தீர்த்தனை	3 முத் தீ	4 நான் மறை	5 ஐவகை வேள்வி	6 அறுதொழில் அந்தணர் வணங்கும் தன்மையை	5 ஐம்புலன் அகைத்தினுள் செறுத்து	4 நான்குடன் அடக்கி	3 முக் குணதில்	2 இரண்டவை அகற்றி	1 ஒன்றினில் ஒன்றி நின்று

பெருமையில் நின்றனை
ஏழ் உலகெயிற்றினில் (1, 2, 3, 4, 5, 6, 7.... 6, 5, 4, 3, 2, 1) கொண்டவை கூறிய அறு உவை பயனும் ஆயினை. சுடர் விடும் ஐம் படை அங்கையுள் அமர்ந்தனை.
சுந்தர நால் தோள் முந்நீர் வண்ண, நின் ஈர் அடி ஒன்றிய மனத்தால்,
ஒரு மதி முகத்து மங்கையர் இருவரும்,
அங்கையின் முப்பொழுதும் வருட அறி துயில்அமர்ந்தனை.
நெறி முறை நால் வகை வருணமும், ஆயினை
மேதகும் ஐம் பெரும் பூதமும் நீயே, அறு பத முரலும், கூந்தல் காரணம்
எழ் விடை அடங்கச் செற்றனை, ம்அறு வகை சமயமும், அறிவரு நிலையினை
ஐம்பால் ஓதியை ஆகத் திருத்திணை, அறம் முதல் நன்கவையாய் மூர்த்தி மூன்றாய், இரு வகை பயனாய், ஒன்றாய் விரிந்து நின்றனை.”
செய்யுளைச் சதுரக்கட்டங்களில் பொருந்திப் பார்த்தால் தேரின் கீழ்தட்டுகளைப் போல இருக்கும்.

குன்றா மது மலர் சோலை வண் கோடி படப்பை
வரு புனல் பொன்னி மாமணி அலைக்கும்
செந்நெல் ஒண் கழனித் திகழ் வனம் உடுத்த,
கற்றோர் புரிசை கனக மாளிகை,
நிமிர் கோடி விசும்பில் இளம் பிறை துவங்கும்
செல்வம் மல்கு தென் திருக் குடந்தை
அந்தணர் மந்திர மொழியுடன் வணங்க,
ஆடவரமளியில் அரி துயில் அமர்ந்த பரம், நின் அடி இணை
பணிவன் வரும் இடர், அகல மாற்றோ வினையே.
இடம் கொண்ட நெஞ்சத்திணநக்கிக் கிடப்பன்,
என்றும் பொன்னி தடம் கொண்ட தாமரை சூழும்

மலர்த்த தண் பூங்குடந்தை, விடம் கொண்ட வெண் பல் கருத்துந்தி
செங்கண் தழல் உமிழ் வாய், படங்கொண்ட பாம்பனைப்
பள்ளி கொண்டான் திருப்பாதங்களே..."

என்று முடியும் இறுதி வரிகள் தேர் பீடம் போல அமைந்து இருக்கும்.

இதைத் தவிர நாக பந்தம் கோமிய, ஆசுகவி, சித்திரக்கவி என்ற பலவித வடிவங்களில் புலவர்கள் பாடல்கள் எழுதி இருகிறார்கள்.

நான்காரை சக்கர பந்தம் - இது ஒரு சக்கரத்தின் நான்கு ஆரக்கால்கள் அமைந்த ஒன்று. இதில் பொருத்தப்பட்டுள்ள பாடல்....

மேரு சாபமு மேவுமே
மேவு மேயுண வாலமே
மேன வாமவ னாயமே
மேய னானடி சாருமே..

பாடல் ஒரு சுவர் கடிகார வட்ட வடிவில் இருக்கும். அதன் மைய எழுத்து (மே) ஆரம்ப புள்ளி. அதில் இருந்து கீழ் எண் ஆறு இருக்கும் பகுதிக்கு செல்லுங்கள். பின் எண் ஐந்து, நான்கு, மூன்று என்று சென்று, மையத்துக்கு மீண்டும் செல்லுங்கள். பின் மையத்தில் இருந்து உச்சியில் பன்னிரண்டுக்கு செல்லுங்கள். பின் 11,10,9 என்று முடித்து, மீண்டும் மையத்துக்கு செல்லுங்கள். இவ்வட்டத்தில் இருப்பவை சித்திர வடிவில் உள்ள மேற்சொன்ன பாடல். இதன் பொருள்,

"சிவபெருமானுக்கு மேருமலை வில்லாகப் பொருந்தும். ஆலம் உணவாக அமையும். அவன் பூதக்கூட்டம் மேம்பட்டு விளங்கும். அத்தன்மையான அவரது திருவடிகளை சார்வீராக என்பதே இதன் பொருள்... இதை சுவர் சித்திரமாக பார்த்து பொருளறியும் போது மகிழ்ச்சி பிறக்கும்..".

சுழி குள பந்தம் - என்ற ஒன்று. இதில் ஒரு குளத்தின் மையத்தை நோக்கி கல் ஒன்றை ஏறிந்தால் ஏற்படும் சுழிகளை ஒத்தது.

கோமூத்திரி பந்தம் - இதில் பசு மாடு நடந்துகொண்டே சிறுநீர் கழித்தபடி செல்கிறது. கோமியம் ஒழுகிய தரை மேல் பாடல் இருக்கும்.

இதைப் போலவே நாக பந்தம் என்பது சர்பம் ஊர்ந்து சென்ற தடத்தை நினைவுறுத்தும் வகையில் இருக்கும்.

விகடகவி என்ற சொல் போல், மாலை மாற்று பதிகத்தை வலமிருந்து இடமாக அல்லது இடமிருந்து வலமாப்க படிக்கையில் அதே பாடல் அமைந்திருப்பது மாலை மாற்று பதிகம்.

நீவாத மாதவ தாமோக ராகமோ

தாவாத மாதவா நீ... என்பது சிறந்த உதாரணம். மாலை மாற்று பதிகத்தை முதன்முதலாகக் கையாண்டவர் திருஞானசம்பந்தர். வரும் நாட்களில் நீங்கள் கோவில் கல்வெட்டுக்கள்,ம் பிரகாரத்தில் இருக்கும் சித்திரங்களையும் கண்டு நம் பெருமை அறிய முயலுங்கள். என்று கட்டுரை முடிந்திருந்தது.

ஆனந்த நயணன் சாதாரண செகண்டிரி கிரேட் தமிழ் ஆசிரியர் மட்டுமல்ல பழந்தமிழ் இலக்கியம், மற்றும் மேற்கத்திய மொழியியல் இலக்கணம் பற்றியும் பேசவல்ல திறன்மிகு படைப்பாளி என்று தோன்றியது. இப்பாடல்கள்புற வடிவில்தான் மாற்றங்களுடன் உள்ளது. ஆனால் பேசுபொருள் அல்லது உள்ளடக்கம், பக்தி அல்லது இறை வணக்கம் மட்டுமே.

★

தொடர்ச்சி அடுத்த இதழில்



கடைசிப் பக்கம் இந்திரா பார்த்தசாரதி

அக்கரைக்கு அழைத்துச் செல்வோம்!

'பிற நாட்டுச் சாத்திரங்கள் தமிழில் பெயர்த்தல் வேண்டும்' - பாரதி

அண்மையில் தமிழ்நாட்டுப் பாடநூல் குழுமம் புத்தகக் கண்காட்சிச் சாலையில் தமிழ் இலக்கிய நூல்களில் சிறந்தவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டிருப்பது வரவேற்கத்தக்க முயற்சி.

சமீபத்தில் ஸ்பானிஷ் மொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருந்த நூல் ஒன்றைப் படித்தேன். மொழிபெயர்ப்பாளர் அந்நூலை ஆங்கில வழியாக மொழிபெயர்த்திருக்க வேண்டுமென்று தோன்றியது. மொழிபெயர்ப்பாளர் மொழிபெயர்க்கும்போது அவர்அநுபவித்திருக்கக் கூடிய சிரமங்கள் அனைத்தும் மொழிபெயர்ப்பில் புலனாகியது. ஆனால், மூலநூல் என்னசொல்ல வருகின்றது என்பதுதான் எனக்குப் புரியவில்லை. மொழிபெயர்ப்பாளர் தாம் மொழிபெயர்த்ததை அவரே திரும்பிப் படித்திருந்தால் அவருக்கும் புரிந்திருக்காது. வாசிக்கின்ற எதுவும் சுலபமாகப் புரிந்துவிட்டால் அது இலக்கியத்தரம் உடையதன்று சொல்லும் அறிவுஜீவி விமர்சகர்களும் உண்டு.

ஏன் புரியவில்லை என்பதற்குக் காரணம், அது அகராதி மொழிபெயர்ப்பாக (Literal Translation) எனக்குப் பட்டது. ஒவ்வொரு மொழிக்கும் அதற்கென்ற ஒரு தனித்தன்மை (Genius) உண்டு. அகராதியைப் பார்த்து வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்த்தால் மூலம் இறந்து, எஞ்சுவது மொழிபெயர்க்கப்பட்டுள்ள மொழியில் உள்ள உயிரோட்டமில்லாத சொற்களின் பிரேத ஊர்வலந்தான், மொழி ஆக்கமில்லை.

'Translation' என்ற சொல்லின் இலத்தீன் வேர்ச்சொல்லினுடைய பொருள் 'அக்கரைக்கு அழைத்துச் செல்லுதல்'. அதாவது நாம் இருக்குமிடத்திலேயே இருந்து, அக்கரையின் வளங்களைக் கண்ணாறக் கண்டுகளிப்பதற்கு வகை செய்தல். ஒரு நல்ல மொழி ஆக்கத்தின் குறிக்கோள் இதுதான்.

இந்திய மற்றைய மொழிகளிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கும்போது பொருள்சேதம் அவ்வளவு இருக்காது.ஆங்கிலத்திலிருந்தோ அல்லது வேறு கலாசாரத்தைச் சார்ந்த வேற்று மொழியிலிருந்தோ மொழிபெயர்க்கும்போது கலாசாரப் பரிமாற்றப் பிரச்னைகள் ஏற்படுவது இயற்கை...

என் நாவல் ஒன்று ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படும் போது வந்த பிரச்னை ஒன்றை உதாரணமாகச் சொல்ல விரும்புகிறேன். ஒரு கிராமத்தில் ஒரு வயதான பிராம்மணப் பெண்மணி ஓர் இளம் விதவைப் பெண்ணைக் குறிப்பிடும்போது, 'பாவம்,

இந்தப் பொண்ணு எந்தக் கடையிலே பூ வாங்கித்தோ, கல்யாணம் ஆன அடுத்த மாசமே ஆத்துக்கு வந்துடுத்து...' இதை எப்படி ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பது? அடிக்குறிப்புக்களுடன் மொழிபெயர்த்தால் ஆராய்ச்சிக் கட்டுரை மாதிரி இருக்கும், நாவலின் மொழிபெயர்ப்பு மாதிரி இருக்காது. இந்தப் பிரச்னையைத் தீர்க்க மொழிபெயர்ப்பாளர் இந்த உரையாடலை மொழி ஆக்கம் செய்யாமலேயே விட்டுவிட்டார். எனக்கு அது பெரிய நஷ்டமாகவும் படவில்லை. தமிழ் தெரிந்தவர்களால் மட்டுந்தான் அந்த வயதானப் பெண்மணியின் பேச்சு நயத்தை அனுபவிக்க முடியும். மற்றவர்களால் முடியாது.

ஆனால் மேல்நாடுகளில் செவ்வியல் நூல்கள் (Classics) மொழிபெயர்க்கப்படும்போது மூலத்துக்கு மொழிபெயர்ப்பு எந்தவகையில் நூறு சதவீதம் ஒத்துப்போகின்றது என்பதைத்தான் இலக்கிய அளவுகோலாகக் கொண்டார்கள். Chapman ஹோமரை மொழிபெயர்த்தார். மூலத்தில் எந்த மாறுதலும் செய்யாமல் ஆங்கில மொழியின் தனத்தன்மைக்கேற்ப இதை மொழிபெயர்த்ததற்காகப் பாராட்டி கீட்ஸ் ஓர் அற்புதமான கவிதை எழுதியுள்ளார்.

ஆனால் இந்திய மரபில் இதிகாஸங்கள் (இராமயணம், மஹாபாரதம்) சமஸ்கிருதத்திலிருந்து மற்றைய இந்திய மொழிகளில் வரும்போது அவை அந்தந்த மொழிகளின் வட்டாரக் கலாசாரத்துக்கேற்ப மூலத்தில் மாற்றங்களை எதிர்கொண்டன... காரணம், இக்கதைகள் முதலில் வாய்மொழி இலக்கியங்களாகத்தாம் இந்தியா முழுவதும் பரவியிருக்க வேண்டும்.

கம்ப ராமாயாணம், வால்மீகி ராமாயணத்தின் மொழிபெயர்ப்பன்று, ஆக்கப்பூர்வமாக மொழியாக்கம் (Creative Adaptation) செய்யப்பட்ட புதிய படைப்பு பாத்திர வார்ப்பில் கம்பனுக்கு நிகர் ஷேக்ஸ்பியரைத்தான் சொல்ல முடியும். அவனும் ஏற்கனவே இருந்த கதைகளைத்தான் பட்டை தீட்டிய வைரங்களாக்கினான்.

மேல்நாட்டு மொழிபெயர்ப்பியல் மரபுக்கேற்ப அமையும் ஒரு செவ்வியல் நூலின் ஒரு காலத்திய மொழிபெயர்ப்பு காலத்தை வென்று நிற்கக்கூடிய தகுதியை உடையதா என்பது சந்தேகந்தான் என்று சில விமர்சகர்கள் கூறுகின்றார்கள். இதனால்தான் Cervantes எழுதிய 'டான் க்விக்ஸாட்' (Don Quixot)'க்கு காலந்தோறும் புதிய மொழிபெயர்ப்புக்கள் வந்து கொண்டிருக்கின்றன என்று அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். உலக இலக்கியங்கிளிலே அது ஒரு மகத்தான நாவல். ஒவ்வொரு நூற்றாண்டின் வாழ்க்கை மதிப்பீடுகளுக்கேற்ப அந்தந்த நூற்றாண்டில் இந்த நாவலைப் புரிந்துகொள்ள முடியும் என்பதுதான் இப்படைப்பின் வெற்றி. பதினேழாம் நூற்றாண்டிலேயே Cervantesயின் சம காலத்தவராகிய தாமஸ் ஷெல்டன் என்பவர் இதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார். அதற்குப் பிறகு ஒவ்வொரு கால கட்டத்திலும் இந்நாவல் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அண்மையில் வந்த எடித் க்ராஸ்மன் மொழிபெயர்ப்புதான் சிறந்தது என்று கூறுகின்றார்கள். காரணம், இது சமீபத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதால் இக்கால வாசகர்களுடைய தேவை மொழிபெயர்ப்பாளருக்குத் தெரிந்திருக்கும்.

திருக்குறளுக்கு எத்தனை மொழிபெயர்ப்புக்கள் இருக்கின்றன! திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அந்நூலைத் தமிழ் தெரியாதவர்களுக்கு அறிமுகப்படுத்துவதைக் காட்டிலும் தாம் மொழிபெயர்ப்பதின் மூலம், தங்களை மற்றவர்களுக்கு அடையாளப்படுத்திக் காட்ட வேண்டுமென்ற ஆசைதான் அதிகமென்று தோன்றுகிறது!

மொழிபெயர்ப்பாளர் மூல எழுத்தின்

ஆசிரியரைப் போல் தகுதி உடையவராக இருந்தால் மொழிபெயர்ப்பும் சிறப்பாக அமைந்துவிடும் என்பது என் கருத்து.

அக்காலங்களில் வேறு ஒரு மொழியின் மூல எழுத்தினால் கவரப்பட்ட படைப்பிலக்கிய வாதிகளே தம் மொழியில் அதைச் சொல்ல வேண்டுமென்ற 'ஆசையினால் அறையலுற்றார்கள்'. 'கலாசாரம்' பற்றிய ரவீந்திரநாத் தாகூர் கட்டுரையை பாரதியார் அற்புதமாக மொழி ஆக்கம் செய்திருக்கிறார். நவீனத்வத்தின் பிதாமகர்களில் ஒருவராகிய எஸ்ரா பௌண்ட் தொன்மைச் சீனக் கவிதைகளை ஆங்கிலத்தில் தந்துள்ளார். உமர்கய்யாமின் 'ருபையத்தை' படைப்பாக்கமாகத் தழுவி எழுதியுள்ளார் ஃப்ரிட்ஜ்கெரால்ட். இந்த மகத்தான பாரசீகக் கவிதையின் புகழ் உலகமெங்கும் பரவுவதற்கு ஃப்ரிட்ஜ்கெரால்ட் தான் காரணம். தமிழில் தேசிக விநாயகம்பிள்ளை அவர்களும் மிக அற்புதமாக 'ருபையத்தை' மொழி ஆக்கம் செய்திருக்கிறார்.

ஆங்கிலத்தில், '*A Book of Verse, a Cup of Wine*' என்று வரும் வரியை பிள்ளை அவர்கள், 'கையில் கம்பன் கவி உண்டு, கலசம் நிறைய மது உண்டு' என்று மொழிபெயர்த்த போது ஒருவர் அவரைக் கேட்டாராம், 'காந்தியவாதியாக நீங்கள், 'மது உண்டு' என்று எழுதலாமா?' என்று.. - 'பிரித்துப் படியுங்கள். கலசம் நிறை அமுது உண்டு என்றுதான் எழுதியிருக்கிறேன்' என்றார் பிள்ளை அவர்கள். கெட்டிக்காரத்தனமான பதிலாக இருக்கலாமே தவிர, மூல ஆசிரியரின் கருத்துக்கு மாறுபட மொழிபெயர்க்கலாமா என்பது வேறு கேள்வி!.

பட்டறைகள் நடத்தி, மொழி ஆக்கம் செய்ய முடியும் என்பதை நான் நம்பவில்லை.


மொழி ஆக்கம் செய்ய வெறும் மொழி அறிவு மட்டும் போதாது. மூலமொழி படைப்பில் ஆழ்ந்து அநுபவிக்கும் ரஸனை ஒருவனுக்கு இருந்தால்தான் மூலத்தை தன் மொழியில் ஆக்கித்தர முடியும். படைப்பாளியே ஒருவகையில் பார்க்கப் போனால் ஒரு மொழிபெயர்ப்பாளன். ஒரு நிகழ்வினால் பாதிக்கப்பட்ட ஓர் எழுத்தாளன் தன் சிந்தனைகளையும் உணர்வுகளையும் எழுத்து வடிவில் கொண்டுவருவதே ஒரு மொழி ஆக்கம். ஆகவே வெற்றிகரமாகத் தரும் முயற்சியில் அவனுக்கு இருவகையான பொறுப்புக்கள். ஒன்று தனக்கு, இன்னொன்று வாசகனுக்கு. மொழிபெயர்ப்பாளனுக்கோ மூன்று வகையான பொறுப்புக்கள். படைப்பாளி சமகாலத்தவனாக இருந்தால் மொழி ஆக்கத்தில் அவனையும் திருப்தி செய்ய வேண்டிய பொறுப்பு மொழிபெயர்ப்பாளனுக்கு இருக்கிறது.


சுதந்திரத்துக்கு முன்னால் தமிழில் மற்றைய மொழிகளிலிருந்து மொழிபெயர்த்தவர்கள் மூலத்தில் ஈடுபட்டு, ஆழ்ந்து, செய்தவையனைத்தும் 'காதற் பணி' (*Labour of love*) என்றுதான் சொல்ல வேண்டும். அப்பொழுது நமக்கு தாகூர், சரத் சந்திரர், பக்கிம் சந்திரர், பிரேம்சந்த், காண்டேகர் முதலிய இந்தியப் பிறமொழி ஆசிரியர்கள் அறிமுகமான பெயர்களாக இருந்தன. காரணம் த.நா. குமாரஸ்வாமி, கா.ஸ்ரீ.ஸ்ரீ, த.நா. சேனாபதி போன்ற மொழிபெயர்ப்பாளர்கள்.

இப்பொழுது இந்திய மொழிகளுக்கிடையே உறவை வளர்ப்பதற்கென்று உருவாக்கப்பட்ட சாகித்ய அகாடமி, தேசிய புத்த நிறுவனம் ஆகியவை தோன்றிய பிறகு சுதந்திரத்துக்கு முன்னால் இருந்த இப்பிணைப்பு இப்பொழுது இருக்கிறதா என்பது சந்தேகந்தான். படைப்பாளிகளின் பெயர்கள் அறிமுகமாகியிருக்கலாமே தவிர படைப்புக்களைப் பற்றித் தெரியுமா என்பது கேள்விக்குரியதுதான்.


parthasarathyindira@gmail.com ■

விற்பனையில்!











வாழும் தலைமுறையும் வரும் தலைமுறைகளும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் 1965 ஜூலை முதல் 1970 ஜூலை வரையிலான கணையாழி இதழ்கள் அப்படியே அச்சுப் பிசகாமல் 5 தொகுதிகளாக 2606 பக்கங்களில்.

ஒவ்வொரு தொகுதியும் ரூ.500

Kanaiyazhi padaippakam எனும் பெயரில் மணி ஆர்டரோ அல்லது காசோலையோ:
கே 502, விக்டோரியா டவர்ஸ், # 37, இராஜிவ் காந்தி சாலை (OMR),
கழிப்பட்டூர், தமிழ்நாடு -603103
எனும் முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். அல்லது வங்கியில் நேரடியாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

வங்கியில் நேரடியாகச் செலுத்த -
Name of the Account : Kanaiyazhi padaippakam
Indian Overseas Bank, Valmiki Nagar Branch(1472)
Current Account No. 147202000000946
NEFT- IFSC Code - IOBA0001472

கணையாழிப் படைப்பகம் வெளியீடு


SHANKAR IAS ACADEMY™
SINCE 2004
Best Academy for Civil Services Exam Coaching
19 YEARS
2400+ IAS, IPS...officers
UPSC CSE 2023 RESULTS
273 Selections out of 1016 at All India Level
Our National Toppers
AIR 14 SHAURYA ARORA (CivilIASation)
AIR 15 KUNAL RASTOGI (CivilIASation)
AIR 16 AYAN JAIN (GS / Optional Test series)
AIR 19 SHIVAM KUMAR (CivilIASation)
AIR 23 SAURABH SHARMA (CivilIASation)
& More...
273 successful candidates / 21 candidates in Top 100 ranks are from our academy
Our Tamil Nadu Toppers
AIR 41 T BHUVANESHRAM Tamil Nadu Rank - 1
AIR 64 VINOTHINI C (GSPCM / Main Test series)
AIR 78 PRASHANTH S (Prelim TS / CivilIASation)
AIR 79 ESHANI ANAND (GSPCM)
AIR 83 SUBHADHARSHINI M (CivilIASation)
AIR 143 S NITHILA PRIYANTHI (CivilIASation)
AIR 152 VENKATESHWARAN R (MoSJE / Main TS / CivilIASation)
AIR 175 NEHAA K (CivilIASation)
AIR 322 MARIANA SHARON F (GSPCM / Main Test series)
AIR 323 SHAHIDA BEGUM S (Prelim TS / Main TS / CivilIASation)
AIR 329 KARTHIK RAJA K M (Main TS / Optional TS / CivilIASation)
AIR 336 SINDHU N RAGHAVAN (GSPCM / Main Test series / CivilIASation)
& More...
41 Tamil Nadu candidates have cleared from our academy / 5 of our Tamil Nadu candidates have secured ranks in top 100
ADMISSIONS OPEN
UPSC CIVIL SERVICES COACHING 2024 - 25
SCAN HERE TO KNOW MORE
Shankar IAS Academy - Head Office
No 259, AL Block, 4th Avenue, Shanthi Colony,
Anna Nagar, Chennai-600040.
enquiry@shankarias.in
76677 66266
shankariasacademy.com | iasparliament.com
Chennai | New Delhi | Bengaluru | Trivandrum | Hyderabad | Madurai | Trichy | Coimbatore | Salem | Namakkal